Koviloor Digital Library

சிவத்தல மஞ்சரி

ஆ. சிங்காரவேலர்



ACC No 43282
Q1.38

Koviloor Digital Library

Koviloor Digital Library

82/2

சிவத்தல மஞ்சரி

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 43282

ஆசிரியர் :
ஆ. சிங்காரவேலர்

PILOT PUBLICATIONS
பைலட் பப்ளிகேஷன்ஸ்
309, லிங்கி செட்டித் தெரு, சென்னை-600 001.
தொலைபேசி : 51 48 47

Koviloor Digital Library

லைலட் : 41
முதல் பதிப்பு : செப்டம்பர், 1984
இரண்டாம் பதிப்பு : ஜூன், 1991.

விலை ரூ. 12-50

அச்சிட்டோர் : ஜீவோதயம் அச்சகம்,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.

Koviloor Digital Library

82/2

பொருளடக்கம்

		பக்கம்
1.	சிவனார் பெருமை	5
2.	கைலாசாதி பர்வத விவரம்	20
3.	சிவராத்திரி	25
4.	சிவாஷ்டாஷ்ட மூர்த்தங்கள் (64)	26
5.	சிவத்தலங்கள்	
	வடநாடு (32)	27
	தொண்டைநாடு (36)	34
	மகத நாடு அல்லது நடுநாடு (22)	47
	சோழ நாடு காவேரியின் வடகரை (65)	55
	காவேரியின் தென்கரை (128)	79
	பாண்டி நாடு (15)	109
	கொங்கு நாடு (7)	113
	மலை நாடு (2)	115
	ஈழ நாடு (2)	117
6.	தேவாரப் பாடல் பெற்ற தலங்கள்	118
7.	திருவாசகம் பெற்ற சிவத்தலங்கள்	120
8.	திருவாசகம் வைப்புத் தலங்கள்	120
9.	திருவிசைப்பா பெற்ற தலங்கள்	120

Koviloor Digital Library

ஆலய வரிசை நூல்கள்

புலவர் சி. முத்துப்பிள்ளை எழுதியவை

பல அறிஞர்களாலும் பத்திரிகைகளாலும் பெரிதும் பாராட்டப் பெற்ற நூல்கள். ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய நூல்கள்.

1. அருள் சுரக்கும் சக்தி ஆலயங்கள்
(உபாசனாகுலபதி ஸ்ரீ துர்க்கைச் சித்தரின் முன்னுரையுடன்)

2. புகழ் மணக்கும் வைணவத் தலங்கள்
(சாண்டில்யன் அவர்களின் முன்னுரையுடன்)

3. சிறப்புமிக்க சிவாலயங்கள்
(வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்களின் முன்னுரையுடன்)

4. வடநாட்டுத் தலங்கள்

5. அருட் குமரனின் ஆறுபடை வீடுகள்

6. பத்ரி-கேதார் யாத்திரை
(தீபம் பார்த்தசாரதியின் முன்னுரையுடன்)

Koviloor Digital Library

82/2

1. சிவனார் பெருமை

1. இவர் சாந்தராய் தமக்கு மேல் நாயகமில்லாதவரா தலால் சர்வ கர்த்தாவாயும், மகாப் பிரளயத்தில் சத்திருப மாய் லயித்திருக்கும் நாசமிலியாயும், ஞானசக்தியால் சகலத் தையுமறியும் சர்வஞ்ஞராயும், ஸ்வப்பிரகாசராகியும், அசல ராகியும், அமேயராகியும், ஸ்வபாவ சித்தராகியும், ஒப்பிலி யாகியும், ஸூக்ஷ்மராகியும், ஸ்தூலரூபியாகியும், ஞானக்ரியா சக்தி சரீரியாயும், நிஷ்களராயுமிருப்பவர். இவர் சுவேச்சை யால் ஆன்மாக்கள் சநநக்கரைக் கண்டு தம்மையடையும் வண்ணம் அவர் அவர் தியானிக்கும் வகை அவ்வவ்வுருக் கொண்டு சகலராய் அவரவர்க்கருளினர். அவற்றுள் சில வருமாறு:

2. சிவேதலோகிதம், இரத்தம், பீதம், நீலம், விச்வரூப கற்பங்களில் பிரமனுக்குக் காயத்திரி சரஸ்வதி முதலியவரை அருளி முனிவர்க்கருள் புரிந்தவர்.

3. பிரம விஷ்ணுக்கள், படைப்புத் தொழில் முதலிய வடையச் சத்தியிடம் பிறக்கச்செய்து சிருஷ்டியருளியவர்.

4. சிலாதருக்குப் பிரத்தியக்ஷமாய்ப் புத்திரப் பேறருளி நந்திக்கு இறவாமையருளியவர்.

5. இந்திரன் முன் யக்ஷனாகத் தோன்றிச் சத்தியெல் லாங்கொண்டு மறைந்தவர்.

6. பிரமதேவனை முகத்தினும், இந்திரனைத் தோளி னும், ஏனையோரை மற்றைய உறுப்புக்களினும் படைத் தவர்.

7. நிகும்பன் என்னும் அசுரன் தேவரை வருத்த அவனைக் கொன்றவர்.

8. பிரமதேவனுக்குச் சிருஷ்டியின் பொருட்டுப் பஞ் சாக்ஷர உபதேசஞ் செய்தவர்.

Koviloor Digital Library

9. பிருதிவியில் சர்வராயும், அப்பில் பவராயும், தீயில் உருத்திரராயும், காற்றில் உக்கிரராயும், ஆகாயத்தில் வீமராயும், சூர்யமண்டலத்து ஈசானராயும், ஆன்மாவில் பசுபதியாயும் அமர்பவர்.

10. சத்தியை யைந்து முகத்துடன் தமது முகத்திற் சிருட்டித்தவர்.

11. உபமன்யுவிற்குத் தந்தையராகிய வியாக்கிரபாத முனிவர் வேண்டுகோளின்படி பாற்கடலளித்தவர்.

12. வீரபத்திரரைத் தக்ஷயாகத்தின் பொருட்டுப் படைத்து, அதை அழிக்க ஏவி அதிலழிந்த உமை மீண்டும் வேண்ட உயிர்ப்பித்துத் தக்கனுக்கு ஆட்டுத் தலையருளியவர்.

13. ஒரு கற்பத்தில் பிரமன் வேண்ட அவன் நெற்றியில் நீலலோகித மூர்த்தியாகத் தோன்றிச் சிருட்டித் தொழில் கற்பித்தவர்.

14. பிரமன் வேண்டுகோளால் ஒரு கற்பத்துப் பிராட்டியாரைப் பிரிந்து பிரிந்த ஆணுருவில் பதினொரு உருத்திரரைப் படைத்துச் சிருட்டி செய்வித்தவர்.

15. இராவணன் திருக்கயிலையைச் சிவபூசைப் பொருட்டுப் பெயர்க்கத் திருவடியின் திருவிரலால் ஊன்றி மதமடக்கி யவன் துதிக்க அநுக்ரகித்தவர்.

16. பிரமன் கர்வித்த காலத்துப் பைரவரை ஏவி அவனது நடுத் தலையைக் கிள்ளியெறிந்து அவன் வேண்டுகோளாக கபாலத்தைக் கையில் பற்றியவர்.

17. இந்திரனாய உபமன்னிய ரிஷியிட மடைந்து சிவதூஷணை செய்து பின் அநுக்ரகித்தவர்.

18. உமை, தமதருளால் உலகம் செழித்திருக்கின்றதென எண்ணியதை யறிந்து தமது உலக உருவமாகிய கலைகளைத் தணிவித்தவர். அதனால் உயிர்கள் ஒடுங்கின.

Koviloor Digital Library

இதனையறிந்த பிராட்டியார் இறைவனை வேண்ட, அதனால் அநுக்ரகித்தவர்.

19. தமக்கெனச் செயலிலாதிருந்தும் ஸ்ரீ கண்டருத்திரர் முதலியோரிடம் தமது சத்தியால் பஞ்சகிருத்தியம் நடப்பிப்பவர்.

20. சர்வ சங்கார காலத்தில் பிரமன், விஷ்ணு, இந்திராதி தேவர்களை யழித்து அவர்களின் எலும்புகளையும் நீற்றையும் அவர்களது நிலையின்மை தெரிந்துய்யத் திருமேனியில் அணிபவர்.

21. தாருகவனத்து இருடிகளும், அவர்களின் பத்தினியரும் செருக்குற்றிருத்தலைத் தலைத்தேவர் கூறி வேண்ட விஷ்ணுவை மோகினியுருக் கொண்டு இருடிகளிடம் போக ஏவித்தாம் பைரவத் திருக்கோலத்துடன் இருடி பத்தினிகளிடஞ்சென்று அவர்கள் கற்புக்கெட்டு வேண்ட அவர்களை மதுரையில் தீண்டுகிறோமெனக் கூறி மறைந்து அப்பெண்களின் கணவர்கள் அபிசார வேள்வி செய்து தம்மீது ஏவிய தமருகம், அக்நி, மழு, சூலம் இவற்றைக் கையில் பிடித்தும் புலியைக் கொன்று தோலையுடுத்தும், பாம்பினைப் பயப்படுத்தித் திருவடியில் அடக்கியும், பிரமதகணத்தையும், பேயையும் உடனிருக்கச் செய்தும், மானைக் கையிற் பிடித்து வலியடக்கியும், வெண்டலையை யணிந்தும், முயலகனை எலும்பொடிய முதுகில் அழுத்தியும் குற்றமிலாது இருந்தவர்.

22. யானையுருக் கொண்டு செருக்கடைந்து தேவர்களை வருத்தித் தம்மை யெதிர்க்க வந்து தம்மை எடுத்து விழுங்கிய கயாசுரனை உடல் பிளந்து வெளிவந்து அவன் தோலையுரித்து போர்த்துக் கஜாரிமூர்த்தியெனத் திரு நாமம் பெற்றவர்.

23. இந்திரன் ஒரு காலத்துக் கர்வப்பட பூதவுருக் கொண்டு அவன் முன் சென்று கோபித்து அவனாலுண்டான கோபத்தைக் கடலில் விட்டனர். அது குழந்தையுருவாய்ச் சலந்தரனெனப்பட்டது.

Koviloor Digital Library

24. சலந்தரன் கர்வமடைந்து தம்மிடம் யுத்தஞ் செய்ய எண்ணிக் கயிலை நோக்கி வருகையில் அவன் முன் விருத்த ராய்ச் சென்று சக்கரங் காலால் கீறி யெடுப்பித்து அச்சக்கரத் தால் அவனுடலைப் பிளப்பித்துச் சலந்தராரியெனப்பட்டவர்.

25. சர்வ சம்மார காலத்து இடபவுருக் கொண்டு தம்மை யடைந்த தருமத்தை அதன் வேண்டுகோளின்படி வாக னமாக வூர்ந்து இடபாருடத் திருநாமமடைந்தவர்.

26. அமிர்தமதன காலத்துப் பிறந்து விஷத்திற்கஞ்சி வந்த தேவர்களுக்கு அபயமளித்துத் தாம் அதை வருவித்துப் புசித்துக் கண்டமட்டில் ஆக்கி நீலகண்டத் திருநாமம் அடைந்தவர்.

27. பார்வதி பிராட்டியார் தமது திரிநேத்திரங்களை மறைத்ததால் அவர் விரல்களில் உண்டாகிப் பெருகிய கங் கையைத் தேவர் வேண்டச் சடையிலணிந்து கங்காதரத் திருநாமம் பெற்றவர்.

28. பகீரதன் பிதுர்க்கள் நற்கதியடையக் கொணர்ந்த ஆகாசகங்கையின் வீறடக்கிச் சடையிலணிந்து அவன் வேண்டுகோட்படி பூமியில் விட்டுக் கங்கா விசர்ஜனமூர்த்தி யெனுந் திருநாமம் பெற்றவர்.

29. பிரமன் வேண்டுகோளின்படி புஜத்தில் சனகர் முதலியவரைப் படைத்தளித்தவர்.

30. கயமுகாசுரனை வெல்ல ஒரு புத்திரனையளிக்க வேண்டுமென்று தேவர் வேண்ட விநாயகமூர்த்தியைப் பிறப் பித்து அத்துன்பத்தை நீக்கியவர்.

31. சூரமன்மனுக்கு, வச்சிரயாக்கை, இந்திரஞாலத் தேர் முதலிய அளித்து அவன் செருக்குற்ற காலத்து அவன் செய்த யாகத்தை அழிக்கக் கங்கையைப் பூமியில் வருவித்துக் குமாரக் கடவுளால் அவனைச் சங்கரிப்பித்தவர்.

32. விபுலன் பொருட்டுக் காலனைச் சூலத்தாற் குத்தித் தாங்கினவர்.

Koviloor Digital Library

33. பிங்கலன் எனும் வேடன் பொருட்டுக் காலபடரைச் சாய்ந்தவர்.

34. பிரமதேவன் தன் குமரியை மானுருக் கொண்டு புணரச் சென்ற காலையில் அவன் தலையைக் கிள்ளியவர். (இது ஒரு கற்பத்தில்) பிராமனை வேட உருக்கொண்டு எய்து அவன் வேண்ட உயிர்ப்பித்து மணம் புணர்த்தியவர்.

35. சுவேதனது உயிர் கவரவந்த யமன் உடலைச் சூலத்திற் குத்தித் தூக்கிச் சிவனடியவரிடம் நெருங்காதிருக்க கட்டளை தந்தவர்.

36. ஆதிசேடன் தவஞ்செய்து தன்னைத் திருமேனி யில் அணிந்து கொள்ள வேண்ட விரலாழியாகத் தரித்துப் புஜங்க பூஷணத் திருநாமம் அடைந்தவர்.

37. உமையைத் திருமணம் கொள்ளுமுன் அவரது தவ நிலை தெரிவிக்க விருத்தராகச் சென்று தம்மை மணக்க வேண்டி அவரது கலங்கா நிலையுணர்ந்து பின் தம் உருக் காட்டிச் சத்த ருஷிகளால் மணம் பேசுவித்துத் திருமணங் கொண்டு உமாமகேசத் திருநாமம் பெற்றவர்.

38. கந்தமூர்த்தி திருவவதரிக்க வேண்டித் தேவர் வேண்டத் தமது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறி களைப் படைத்து அவற்றை அக்நி, வாயு, இவ்விருவரை யுங்கொண்டு சரவணத்திலிடக் கட்டளையிட்டுக் கங்கை யிலும், கார்த்திகை முதலறுவரானும் வளர்ப்பித்துச் சூரன் முதலியவரை வெல்லக் கட்டளையிட்டவர்.

39. நவவீரர், இலக்கவீரரை உமையின் காற்சிலம்பில் உதித்த பெண்மணிகளிடம் சிருட்டித்துக் கந்தமூர்த்திக்குத் துணைவராக்கியவர்.

40. பிரமனைக் கந்தமூர்த்தி பிரணவத்திற்குப் பொருள் வினவிய காலத்து அவனைச் சிறை செய்ததால் விஷ்ணுவாதி யர் முறையிடப் பிரமனைச் சிறைவிடக் கட்டளையிட்டு

Koviloor Digital Library

அதன் பொருளை வினாவிச் சுவாமிநாதத் திருநாமம் குமரனுக்களித்தவர்.

41. பகாசுரன் எனப் பெயர் கொண்ட கொக்குருக் கொண்ட அசுரன் ஒருவனை யுயிர் மாய்த்து, கர்வம் அடைந் தார், இவ்வகையாளர் என்று அவன் இறகில் ஒன்றை முடி யில் அணிந்தார்.

42. சிலாத முனிவரின் குமாரர்க்கு யமபாச நீக்கியவர்.

43. அந்தகாசுரன் கர்வித்த காலத்து அவனைச் சூலத் தாற் குத்தி வெயிலில் உலர்த்தியவர்.

44. அக்நி, வாயு, குபேரன், ஈசானன், நிருதி, யமன், வருணன் முதலியோர் தவஞ்செய்த காலத்து அவர்க்குத் தரிசனந் தந்து பதமளித்தவர்.

45. துந்திமி யென்னும் அசுரனைக் கொன்று தேவர் துன்பம் நீக்கியவர்.

46. தேவர் பொருட்டுக் காளியுடன் சண்டதாண்டவ மாடி ஆதிசேடன், முஞ்சிகேசன், கார்க்கோடன், காரைக் காலம்மையார், விஷ்ணுமூர்த்தி யிவர்களுக்கு நடன தரிசனம் அருளியவர். இவர் நடனத்தில் காதணி நழுவ, அதனைத் தாமே யணிந்தவர் என்பர்.

47 மாநந்தையென்னும் தாசியின் பொருட்டு வணிக ராய்ச் சென்று தீக்குளித்து அவளுக்கு முக்தியளித்தவர்.

48. தேவாசுர தொந்த யுத்தத்திலே தேவன் தோற் றோடக் கண்டு அவர்களுக்கு வலியளித்துத் தேவர் நாமே வென்றோமென்று செருக்குக் கொண்ட காலில் இயக்கவுருக் கொண்டு ஒரு புல்லை நாட்டி அக்நி முதலிய தேவரை அப் புல்லிடம் தங்கள் வலிகளைக் காட்டச் செய்து பங்கமடை வித்தவர்.

49. பண்டாசுரனை ஓமத்தில் நீற்றியவர்.

Koviloor Digital Library

50. அநசூயை புஷ்பாஞ்சலி செய்ய அத்திரி வேண்டு கோளால் அவள் கையில் குழந்தை யுருக் கொண்டிருந்தவர்.

51. தனகுத்தன் மனைவி பொருட்டுத் தாயுருக் கொண்டு மருத்துவம் பார்த்துத் தாயுமான திருநாமம் பெற்றவர்.

52. இவர் விஷ்ணுவை யெண்ணித் தவம்புரிய நரசிங்க மூர்த்தி பிரத்தியக்ஷமாய் இஷ்டசித்தி யளிக்கப் பெற்றவர். (திருவேங்கடத்தல புராணம்)

53. மன்மதன் தேவர் வேண்டுகோளால் இவர் யோகத் திருக்கையில் புஷ்பபாணத்தை யேவித் தீவிழிப்பட்டெரிய இரதிதேவி சிவமூர்த்தியைத் துதித்துப் புருஷ பிச்சை கேட்க அளித்துக் காமாரித் திருநாமம் பெற்றவர்.

54. திரிபுராதிகள் பொன், வெள்ளி, இரும்புக் கோட் டைகளைச் செய்வித்து அக்கோட்டைகளுடன் பறந்து தேவர்களை வருத்தி வந்தனர். இதனால் தேவர்கள் சிவ மூர்த்தியை அவர்களில் மூவர் பிழைக்க மற்றவர்களை நீறாக் கித் திரிபுராரி மூர்த்தித் திருநாமமடைந்தவர்.

55. பகாக்ஷன், தேவர்களை வருத்தி வருவதைச் சிவ மூர்த்தியறிந்து சிக்ஷிக்க வேண்டி வேதம் தேராகவும், உப நிடதம் குதிரையாகவும், உமையாள் சாரதியாகவும், பிரண வம் சவுக்காகவும் காலச்சக்கரம் வில்லாகவும், மாயை நாணா கவும், பாசுபதம் அத்திரமாகவும் கொண்டு அவனைக் கொன்றவர்.

56. சந்திரன் தக்ஷ சாபத்திற்கஞ்சிச்சரண்புக அவனைச் சடையிலிட்டுப் பயமொழித்துச் சந்திரசேகரத் திருநாமம் பெற்றவர்.

57. முஷ்டிகாசுரன், அக்கிரேசுரன், சாந்தாசுரன், தண் டாசுரன், முண்டாசுரன், சார்த்துலன், குடாசுரன், கோடக முகன், துராசுரன், கோராசுரன், பஞ்சமேஷ்டி, வலாசுரன், நிதனாசுரன், மிருகாசுரன், சத்ததந்து,சர்வபூதாசுரன்,இகலா

Koviloor Digital Library

சுரன், களாசுரன், பண்டாசுரன், சூலாசுரன், அலாசுரன், திகதளாசுரன், யோகினிகள், இலாங்கலக்கினாசுரன், வீமாசுரன், சுராசுரன், வீராக்கிர கண்ணியன், வீரமார்த் தாண்டன், பூதாசுரன்,பசாசாசுரன் முதலியவர்களை யொவ்வொரு கற்பத்தில் தேவர்கள் வேண்ட வதைத்தவர்.

58. அநாலசுரன், வச்சிரகேசி, சுந்தராசுரன், எந்திராசுரன் முதலிய அசுரர்களைத் தீக்கண்ணால் எரித்தவர்.

59. திவ்விய சித்தராய்க் கணபதிக்குச் சித்திகள் அருளினவர்.

60. மன்மத சுந்தரமூர்த்தியாய்த் தேவர்களை மோகிப்பித்தவர்.

61. புலிமுகன் என்னும் அசுரன் யுத்தத்திற்கு வர அவன் தோலையுரிந்து அணிந்து வியாக்ராரி மூர்த்தி யானவர்.

62. பார்வதி தேவியாருடன் விற் சமராடி வென்றவர்.

63. ஒருமுறை மேருச்சாரலில் பார்வதியாருடன் இருக்கையில் தேவர் குமாரக் கடவுளின் அவதாரத்தை யெண்ணிச் சென்றனர். இக்குறிப்பறிந்த ஸ்ரீ கண்டர் வீர்யத்தை அக்நியிடங் கொடுத்தனர். அதை அக்நி முதலிய தேவர்களுண்டு சகிக்காது சுரநோய்கொண்டு மேருமலைச் சாரலை அடைந்து சரவணத்தில் விட்டனர். அக்கரு ஆறுமுகங் கொண்ட குழந்தை யுருவாய் வளர்ந்தது எனவுங் குமாரக்கடவுள் உற்பத்தி கூறும்.

64. சுராக்ஷன் என்பவன் தேவர்க்கு இடுக்கண் புரிய அவனைக் கொன்றவர்.

65. ஒரு பிரளயத்தில் தனித்து நின்று பெருஞ் சிரிப்புச் சிரித்து வீராட்டகேசன் எனத் திருநாமம் அடைந்தவர்.

66. மதுரையில் சோமசுந்தர பாண்டியனாய்த் தமது இச்சையாற்றிருமேனி கொண்டு மலயத்துவசன் செய்த தவப் பேற்றால் தடாதகைப் பிராட்டியாராய்த் திருவவதரித்திருந்த

Koviloor Digital Library

பிராட்டியாரைத் திருமணங் கொண்டு, வெள்ளியம்பலத் திரு நடனம் முனிவர்க்கருள் செய்து, குண்டோதரனுக்கு அன்ன மிட்டு அவன் பசி தணிய அன்னக்குழியும், நீர் வேட்கையாற வையையை அழைப்பித்துத் தந்து, காஞ்சன மாலை கடலாட விரும்ப ஏழுகடலுடன் மலயத்துவசனை யழைத்துக் கடலாட்டுவித்து, உக்கிர குமார பாண்டியனைப் பெற்று அதற்கு வேல், வளை, செண்டு அருளிப் பட்டமளித்துத் திருக்கயிலைக்கு எழுந்தருளியவர்.

67. கண்வர் முதலிய முனிவர்கள் வேண்ட வேதத் திற்குப் பொருளருளிச் செய்தவர்.

68. அபிஷேக பாண்டியன் பொருட்டு மாணிக்கம் விற்றவர்.

69. வருணன் மதுரையின் மீது பகைத்துக் கடலை விட, அதனைத் தமது சடையிலிருந்த மேகங்களை யேவிக் குடிப்பித்தவர். மீண்டும் சத்த மேகங்களை யேவி நான் மாடக் கூடலாக்கி அவற்றின் வலிபோக்கியவர்.

70. எல்லாம் வல்ல சித்தராய் எழுந்தருளிப் பாண்டி யன் காணக் கல்லானைக்குக் கரும்பு அருத்தியவர்.

71. மதுரை மேற் சமணரேவிய யானையைக் கொன்றவர்.

72. கௌரியென்னும் பார்ப்பினி பொருட்டு விருத்த குமாரபாலரானவர்.

73. இராஜசேகர பாண்டியன் பொருட்டு மாறி நடித்து வெள்ளியம்பல மாக்கியவர்.

74. பழிக்கஞ்சிய குலோத்துங்க பாண்டியனுக்கு யமபடரால் உண்மை கூறுவித்தவர்.

75. சித்தன் என்பவனது அங்கத்தைச் சமர் செய்து வெட்டியவர்.

Koviloor Digital Library

76. புத்தர் ஏவிய நாகம், மாயப் பசு முதலியவற்றை எய்து வதைப்பித்தவர்.

77. சாமந்தர் பொருட்டு மெய் காட்டிட்டவர்.

78. மதுரையில் பிறந்திருந்த தாருகவனத்து இருடி பத்னிகள் பொருட்டு வளையலிட்டு அவர் மையலைப் போக்கிப் புத்திரப்பேறும் அளித்தவர்.

79. குமாரக் கடவுளுக்குப் பாலூட்டிய இயக்கிமார் அட்டமாசித்தி வேண்டிப் பணியப் பிராட்டியுடன் தரிசனம் தந்து பிராட்டியைக் காட்டியிவளை யாராத்திக்கின் அட்ட சித்தியும் தருவர் என, அச்சித்திகளை யுபதேசிக்கையில் பராமுகமாய்க் கேட்க நீங்கள் பட்ட மங்கையிற் பாறைகள் ஆக என்றனர். இயக்கிமார் வேண்ட 1000 வருடங்கள் சென்றபின் நாமே வந்து அச்சாபத்தைப் போக்குகிறோ மென அவ்வாறு சென்று அப்பெண்களின் சாபம் தீர்த்து அட்டமாசித்தி யுபதேசித்தவர். அப்பெண்கள் பார்வதியார் பாவனையால் சித்தி பெற்று முத்தி அடைந்தனர்.

80. காடு வெட்டிய சோழன் பொருட்டு மதுரைத் திருக்கோயிலின் மீனமுத்திரை நீக்கி இடப முத்திரையிட்டு அவனுக்குத் தரிசனந்தந்து வழித் துணையானவர்.

81. பொன்னனையாள் என்னும் தாசி பொருட்டு இரச வாதஞ் செய்து அவள் மனக்கவலை தீர்த்தருளியவர்.

82. பாண்டியன் சேனையின் பொருட்டுத் தண்ணீர்ப் பந்தல் வைத்துத் தாக நீக்கிச் சேனையை யுத்தத்திற்கு அனுப்பி வெல்வித்தவர்.

83. தனபதியின் உடன் பிறந்தாள் மகன் பொருட்டு மாமனாக வந்து வழக்கிட்டு ஞாதியர் கவர்ந்த பொருள் வாங்கி அளித்தவர்.

84. பாணபத்திரர் பொருட்டு விறகாளாய் ஏமநாதன் இருந்த வீட்டுத் திண்ணையில் யாழ் வாசித்து ஏமநாதனை

Koviloor Digital Library

ஓட்டியவர். இவர் பொருட்டுத் திருமுகம் கொடுத்துச் சேரமானிடம் அனுப்பிப் பொருள் கொடுப்பித்தார்.

85. கரிக்குருவிக்கு மந்திர முபதேசித்து முக்தி யளித்தவர்.

86. வங்கியசேகர பாண்டியன் காலத்து வேடுருவாய்ச் சோழன் சேனைகளை ஓட்டியவர்.

87. சங்கத்தார் பொருட்டுச் சங்கப் பலகை தந்தவர்.

88. சத்திக்கு ஞானமுபதேசிக்கையில் பிராட்டியார் பாராமுகமாகக் கேட்டறிந்து வலையர் குலத்தில் அவதரிக்கச் சாபமளித்துச் சத்தி வேண்ட நாமே வந்து உன்னை மணந்து கொள்கிறோமெனக் கூறினார். தாய்க்குச் சாப விளைவு சாத்திரத்தினாலென்று அச்சாத்திரங்களைக் கடலி லெறிந்த குமாரக் கடவுளை மதுரையில் மூங்கைப் பிள்ளை யாகவும் சமயமறியாது குமரரை உள்ளே வரவிட்ட நந்திமா தேவரை சுறாமீனாகவும் சாபம் அளித்து அனுக்ரகித்தவர்:

89. தருமசீலையின் கணவன் பொருட்டு உலவாக் கோட்டை யருளிச் செய்தவர்.

90. வரகுண பாண்டியன் பொருட்டுச் சிவலோக தரிசனங் காட்டியவர்.

91. பாணபத்திரர் மனைவியை இசைவாதில் வெற்றி கொள்ள அனுக்ரகித்தவர்.

92. பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்த்து அவர் களை மந்திரிகளாக்கியவர்.

93. நாரை ஒன்று பொற்றாமரைத் தீர்த்தத்தில் மீனுண்ண வந்து ஞானோதயம் பெற்றுத் தியானிக்க முத்தி யளித்தவர்.

94. தருமியென்னும் வேதியனுக்குக் கவியருளிச் செய்து பொற்கிழி கொடுத்தவர்.

Koviloor Digital Library

95. அறியாமையால் மாறு கொண்ட கீரனைப் பொற்றாமரையில் வீழ்த்திக் கரையேற்றி அனுக்ரகித்து இலக்கணங் கூறுவித்தவர்.

96. சங்கத்தார்க்கு மூங்கைப் பிள்ளையாரால் கலகம் தீர்ப்பித்தவர்.

97. இடைக்காடர் சொற்படி அவர்க்குப் பின் சென்று பின் பாண்டியன் புலவரை க்ஷமிக்க வேண்டியிரக்கப் புலவருடன் மதுரைக்கு எழுந்தருளியவர்.

98. வாதவூரடிகளுக்குக் குருமூர்த்தியாய் எழுந்தருளி உபதேசித்து நரிபரியாக்கி பரிநரியாக்கி மண் சுமந்து பாண்டியனடியுண்டு சராசரமெல்லாம் தமது திருமேனி யென்று காட்டி அவருக்குச் சிவானந்த வாழ்வளித்தவர்.

99. அருச்சுனன் பாசுபதம் வேண்டித் தவம் செய்கையில் அவனைக் கொல்ல வந்த மூகாசுரன் என்னும் பன்றியுருக் கொண்ட அசுரனைக் கொல்ல வேடுருக் கொண்டு எழுந்தருளி அருச்சுனனுடன் லீலையாகப் போரிட்டு அவனாலடியுண்டு சராசரமெல்லாந் தமது திருமேனியென்று அறிவித்தவர்.

100. திருவிரிஞ்சையில் வேதியச் சிறுவர் பொருட்டுத் திருமேனி வளைந்து காட்டி அவ்வளைவாற் சராசரங்கள் வளையக் காட்டி அருளியவர்.

101. சூரியனை உன்னொளியால் உலகம் விளங்குகின்றதென்று நாரதர் புகழ அதனால் செருக்குற்ற அவனைத் தமது நெற்றிக் கண் ஒளியில் கர்வபங்கப் படுத்தியவர்.

102. காமவேட்கை கொண்ட வேதியன் ஒருவன் தாசிக்குத் தர பொருளில்லாது வருந்தத் தமது பதக்கத்தைத் தந்து தாசியிடஞ் சேர்ப்பித்தவர்.

103. ஒரு வேதியச் சிறுவன் பொருட்டுத் தந்தைதாயார் உபாத்தியாயர் இலாது மயங்க அவ்விடம் விருத்தவேதியராய் எழுந்தருளி அப்பிள்ளைக்கு வேதம் கற்பித்து ஒரு பார்ப்பினி

Koviloor Digital Library

அன்னமிட, அன்னமெல்லாம் உண்டு பற்றாது மற்றும் பாக மாகாதவைகளையும் உண்டு மறைந்தவர்.

104. விஷ்ணு பிரமனை விழுகிய கற்பத்துப் பிரமனுக்கு அந்தர்யாமியாய்த் தரிசனந் தந்து அனுக்கிரகித்தவர்.

105. மேகவாகன கற்பகத்தில் மேகவுருக் கொண்ட விஷ்ணுமூர்த்தியால் தாங்கப் பெற்றவர். அக்கற்பத்திற்கு மேகவாகன கற்பமெனப் பெயர்.

106. திருமால் தாமரை கொண்டு தம்மைப் பூசிக்கை யில் அம்மலரில் ஒன்று குறையத் தமது கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்ததனால் களிப்படைந்து தாமரைக் கண்ணனெனத் திருநாமமும் இஷ்டசித்தியும் சக்கரப் பேறும் அளித்தவர். இது திருவீழிமிழலையென்னுந் தலத்தில் பிரத்தியக்ஷம்.

107. விருகாசுரன் எவர் சிரத்தில் தன் கையை வைக் கினும் அவர் எரிய வரம்பெற்று அதைச் சோதிக்கத் தம்மிடம் திரும்பியவனைத் தீக்கண்ணால் எரிக்காது நாடகமாக மறைந்து விஷ்ணுமூர்த்தியை யேவிக் கொலை செய்வித் தவர்.

108. விஷ்ணுமூர்த்தியின் மச்சாவதாரத்தில் மணி கொண்டு சென்று அதன் ஒலியில் கடலிலிருந்த மச்சாவதார மூர்த்தியை மயங்கி வரச்செய்து கொக்குருக் கொண்ட தமது மூக்கால் மீனைப் பிடித்து விழிமணி கொண்டு விரலாழிக் கணிந்து மச்சாரி எனத் திருநாமம் அடைந்தவர்.

109. விஷ்ணுமூர்த்தி கூர்மாவதாரத்தில் செருக்குற அக்காலையில் தோன்றி முதுகோட்டைப் பேர்த்து மார்பு அணியாகக் கொண்டு கூர்ம சம்மாரமூர்த்தி யெனப் பெய ரடைந்தவர்.

110. நரசிங்கமூர்த்தியாய் இரணியனைக் கொன்று இரத்த பானத்தால் வெறி கொண்டு மற்றவரையும் பயமுறுத் திய காலத்துச் சிம்புள் என்னும் எண்காற் பறவையுருக் கொண்டு நரசிம்மமூர்த்தியின் தோலை உரித்து உடுத்துச் சாபமூர்த்தியெனத் திருநாமமடைந்தவர்.

Koviloor Digital Library

111. பூமியைச் சுருட்டிப் பாதாளத்தில் சென்ற இரணியாக்ஷன் பொருட்டு வராகவுருக் கொண்டு அவனைக் கொன்று தம்மினு மிக்காரில்லையெனச் செருக்குற்ற காலத்தில் அவ்வராகத்தின் கொம்பையொடித்து அணிந்து அனுக்கிரகித்து வராக சம்மாரமூர்த்தியெனப் பெயரடைந்தவர்.

112. வாமனாவதாரத்தில் விஷ்ணுமூர்த்தியின் முதுகெலும்பாகிய கங்காளத்தை வீணாதண்டமாக்கிக் கங்காளத் திருநாமம் அடைந்தவர்.

113. விஷ்ணுமூர்த்தி தேவாசுர யுத்தத்தில் அசுரரை வென்று செருக்கடைந்தபோது அவர்க்கு முன் யக்ஷனாகத் தோன்றித் துரும்பைக் கிள்ளிவிட்டுத் தூக்கக் கட்டளையிட்டு கர்வபங்கம் செய்தவர்.

114. தேவர், சிவவிஷ்ணுக்கள் பலமறியக் கொடுத்த வில்லினை முறித்தெறிந்தவர்.

115. விஷ்ணுமூர்த்திக்குத் தில்லையில் நடன தரிசனந் தந்தவர்.

116. பரசுராமாவதாரங் கொண்ட விஷ்ணுமூர்த்தி பரசு வேண்ட அனுக்கிரகித்தவர்.

117. பலராமர் தம்மைப் பூசை செய்ய இஷ்டசித்தி யளித்தவர்.

118. இராமாவதாரத்தில் சிவபூஜை செய்த விஷ்ணுமூர்த்திக்குப் புத்திரப் பேறளித்தவர்.

119. விசுசேனனைச் சூலத்தாற் குத்தியவன் கர்வபங்கப்பட்டு வேண்ட அனுக்கிரகித்தவர்.

120. மார்க்கண்டவர் பொருட்டாய் யமனை உதைத்து அனுக்கிரகித்தவர்.

121. பிரம விஷ்ணுக்களைத் தம்மிடத்துச் சிருட்டித்து ஏகபாத திரிமூர்த்தியாக நின்றவர்.

Koviloor Digital Library

122. பஞ்சபூதம், சூரியன், சந்திரன், ஆன்மா முதலிய எண்குணமூர்த்தியாய் நின்றவர்.

123. ஒரு காலத்தில் விஷ்ணுமூர்த்தி பாதாளமடைந்து அங்கிருந்த அப்சர ஸ்திரீகளுடன் கூடிப் பல புத்திரர்களைப் பெற்றுத் தம் தொழிலை மறந்திருக்கையில் பிரமாதி தேவர்களால் வேண்டப்பட்ட சிவமூர்த்தி இடபவுருவுடன் பாதாளமடைந்து விஷ்ணுமூர்த்தியின் புத்திரருடன் போர்புரிகையில் விஷ்ணுமூர்த்தி யுத்தத்திற்கு வர அவரைப் பணிவித்து வைகுண்ட மடையச் செய்தனர். இதனைத் தேவர் கேட்டு, அப்பெண்களைக் கூடப் பாதாளம் செல்லத்தொடங்குகையில் சிவமூர்த்து ஆண்டுச் செல்லும் தேவர் உயிரொழிக எனக் கோபித்தவர்.

124. விஷ்ணுமூர்த்தியைப் பலமுறை சத்தியாகப் பெற்று அரிஹர புத்திரரைப் பெற்றவர்.

125. பாணாசுரன் சிவபூஜை செய்து பலவரங்கள் பெற்று என்னுடன் யுத்தஞ்செய்து வெல்பவருண்டோ வென சில நாளைக்குப் பிறகு கண்ணனால் வெல்லப்படுவாய் என்று அவன் வேண்டுகோட்படி அவனிடமிருந்து கண்ணனுடன் பாணனுக்கு யுத்தம் நேருகையில் தாம் பயந்தவர் போல் நடித்து பாணன் வலியடங்கச் செய்தவர்.

126. தமதசைவு வுலகினிசை வெனத் தோற்றுவிக்கச் சப்ததாண்டவமூர்த்தியானவர்.

127. பராசர முனிவர் வேண்டுகோளுக்கிரங்கி வக்ராசுரனாதியரை வதைக்கச் சத்தியிடம் கண்டகாதினி முதலிய துர்க்கைகளைச் சிருட்டிப்பித்தவர்.

128. தேவரை வருத்திய மருத்தனை யுக்கிர வடிவுடன் கொலை செய்தவர்.

129. கோலோகத்திருந்த பசுக்கள் ஓயாமல் பாலினை யொழிக்கிப் பயன்படக் கருதுகையில் அவற்றை யுற்றுப் பார்த்தெரித்தவர்.

Koviloor Digital Library

130. ஒரு சமயத்தில் விஷ்ணுவை ஆதிசேடனாற் பிணித்து நூறு யோசனை தூரத்தில் விழும்படிச் செய்தவர்.

131. சனகர் முதலியோர் பொருட்டுக் குருமூர்த்தியாய் எழுந்தருளி வேதப்பொருளுணர்த்தித் தக்ஷணாமூர்த்தித் திருநாமம் பெற்றவர்.

132. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், பட்டினத் தடிகள் மற்றுமுள்ள நாயன்மார் முதலியவர்களுக்கும் ஆங் காங்குத் தரிசனந் தந்து பல திருவிளையாடல்களைக் காட்டி அநுக்கிரகித்த சரித்திரங்களை யெழுதவும் கூறவும் முடியா. பின்னும் இவர் திருத்தொண்டர் புராணத்துட் கூறிய அடியார் பலர்க்கும் பலபல தலங்களில் அடியவர்கள் எவ்வகை தியா னித்தனரோ அவ்வகையெல்லாத்தரிசனந்தந்து அருளியவர். பின்னும் யுகங்கடோறும் சேதனராகிய தேவர் நாகரேயின்றி யிவரைக் குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, செல், தேன்வண்டு, யானை, சிங்கம், மயில், அன்னம், புறா, ஆந்தை, பன்றி, ஆமை, முயல், இந்திர கோபபூச்சி, கிளி, அன்றில், பாம்பு, தேள், எலி முதலிய பூசித்து முத்தி பெற்ற சரிதைகள் பலவுள.

133. இவர் ஒரு கற்பகத்தில் தம்மையே தியானித்தி ருந்த காலத்துத் தம் தேகத்துண்டான ஆனந்த பிந்துக்களே சிவலிங்கங்களாயின.

2. கைலாசாதி பர்வத விவரம்

இமவத் பர்வதத்தின் பிருஷ்ட பாகத்தில் கைலாசம் உள்ளது. அதில் அனேக குய்யகரோடு குபேரன் வசிப் பன். அதிலுள்ள தடாகத்திலிருந்து மந்தாகினி என்னும் நதி உற்பத்தியாகிறது. அதன் வழியில் சந்தன வனமும். சுவேல பர்வதத்திற்கு எதிராய் சந்திரபிரபை என்கின்ற பர்வ தங்களும் உண்டு. அதற்குச் சமீபத்தில் அச்சோதை என் னும் தடாகம்; அதிலிருந்து அச்சோதை என்னும் நதி பிறக்

Koviloor Digital Library

கும். அதன் கரையில் சைத்திர ரதவனம் இருக்கின்றது. சந்திரப் பிரபை என்கிற பர்வதத்தில் யக்ஷசேனாபதியாகிய மாணிபத்திரன் வசிப்பன்.

சபல பர்வதத்திற்கு எதிரிலே சூரியபிரபை என்கிற வனம் உண்டு. அதில் லோகிதம் என்கின்ற தடாகம் இருக்கின்றது. அதிலிருந்து லௌக்கித்திய நதி உண்டாகிறது. அதில் மாணிதரன் என்னும் யக்ஷன் இயக்கர்கள் உடன் வசிக்கின்றனன்.

கைலாசத்திற்கு மேற்கில் குருத் மந்தம் என்கின்ற பர்வதம் உண்டு. அது சிவஸ்தலம். அவ்விடத்திலுள்ள சரோவரத்தில் பெருகிய நதியே சரயூ நதி எனப்படும். அதன் கரையில் வய்பிராஞ்சம் என்னும் வனம் உண்டு. அது குபேரனுக்குச் சமமாகும். பிரசேகதியின் குமாரனாரும் பிரம்மதானன் வாசஸ்தானம் ஆம். அதற்கப்பால் அருணம், முஞ்சவந்தம் எனும் பர்வதங்கள் உள. அது சிவஸ்தானம். அவ்விடத்திலுள்ள சைலோத்த தடாகத்தில் இருந்து பெருகியது சைலோ நதி எனப்படும்.

கைலாசத்திற்கு வடக்கில் கௌரபர்வதம் உண்டு. அதில் காஞ்சனவாலுகம் என்கிற புஷ்கரணி இருக்கின்றது. அது அபிந்து சரோவரம் எனப்படும். இவ்விடத்தில் பகீரதன் அனேக காலஞ் தவஞ் செய்தனன். இவ்விடத்தில் கங்கை சோமபாகத்தில் பிறந்து சப்த வாகினியாய்ப் பிரவாகித்தனள். அக்கங்கை ஆகாச முதலியவற்றைச் சுத்தமாக்கிப் பூமியில் வரயோக மாயையினால் கட்டப்பட்டதனால் கோபித்துச் சிவனை நிக்கிரகித்துப் பாதாளத்திற்குப் போக இருந்த சமயத்தில் சிவமூர்த்தி பிரமன் கூறியதை எண்ணி அக்கங்கை ஏழுவிதமாய்ப் பிரவாகித்து நளினி, அலாதனி, பிலாவனி எனும் மூன்று வெள்ளங்கள் கிழக்கிலும் சீத, சப்சு, சிந்து எனும் மூன்று பிரவாகங்கள் மேற்கிலும், மற்றொன்று பகீரதன் பின் தெற்கிலும் பிரவாகித்தனள். இக்கங்கையில் அநேக உபநதிகள் பிறந்தன.

Koviloor Digital Library

வஸ்வோகசாரம் என்னும் நதி தீரத்தில் சுரபி வனம் உண்டு. அதில் குபேரன் நண்பனாகிய இரண்ய சிருங்கன் பிரம்ம ராக்ஷசர்களோடு கூடி வசிப்பன். ஏமகூட பர்வதத்தில் உண்டாம் சர்ப்பசரசில் இருந்து சரஸ்வதி நதியும், விஷ்ணு பதத்திலிருந்து சாகி நதியும் பிறந்தன. அவற்றிலிருந்து உண்டான நதிகள் காந்தாரி, குலயு எனப் படும். மேருவின் பக்கத்தில் சந்திரப் பிரபை என்கிற தடாகம் உண்டு. அதிலிருந்து பிறந்த நதி ஜலம்பு நதி எனப்படும். பின்னும் அவ்விடத்தில் புண்டரீகபயோதம் என்கிற தடாகம் உண்டு. அதில் மேகங்கள் உண்டாம்.

இமய பர்வதத்திற்கு வடக்கில் மான சமடு உளது. அதிலிருந்து அமிர்த காந்தை உண்டாயிற்று. பின்னும் குரு தேசத்தில் வைஜயம் என்கிற 12 மடுக்கள் உள. அவற்றில் சாந்தி, சந்தியை என்கிற இரண்டு நதிகள் உண்டாகும். கிம்புருஷம் முதலிய எட்டு வருஷங்களில் மழை பொழியாது. அவ்விடத்திலுள்ள நதிகளிலேயே அவர்கள் திருப்தி அடைவர்.

ருஷப, மைநாக, பாலக, வச்சிர, சந்திரகாந்த, துரோண, சக்கிர, சமந்து, உதிசர, நாரத, ஜீமூத, தராவண முதலிய பர்வதங்கள் நான்கு திக்கிலும் கடலில் மூழ்கியிருக்கின்றன. வச்சிர மைநாக பர்வதங்களுக்கு இடையில் சம்வர்த்தகம் எனப்படும் அக்னி பர்வதம் உண்டு. அது ஜலங்களை எல்லாம் பானஞ் செய்து கொண்டிருக்கும்.

புராணம்: தேவர்களுக்கு இருப்பிடம் மேரு. இது கீழே பதினாறு கிளையாகவும் மேலே முப்பத்திரண்டு வகையாயும் புரிந்துள்ளது. இது மகா கைலாசத்தின் எதிரில் ஒரு சிறு அணுவை பொப்பது. கைலாயம் அடி முதல் சிகர மீறாக லக்ஷம் யோசனை உயரம் உள்ளது. அதினுள் ஏழு குலாசலங் களும் நூறு ப்ராகார கோபுரங்களும் உள்ளன. ப்ராகாரத்திற் கிடையில் சமுத்திரங்களோடு கூடிய ஏழு தீவுகளிருக்கின் றன. அது கோடி யோசனையுள்ள ஓர் ரசிதபர்வதமாய் ஜொலிப்பதாய் பதினான்கு லோகங்களும் கொடு முடிகளில்

Koviloor Digital Library

அடங்கப் பெற்றதாயுள்ளது. இம்மகா பர்வதத்திற்குக் குமுதம், பாரியாத்திரம், மைனாகம் இவைகள் கிழக்கிலிருக்கின்றன. தந்தரம், மலையம், விந்தம் இவைகள் மேற்கிலிருக்கின்றன. உதயம், அஸ்தம் முஞ்சமாகிய இவைகள் வடக்கிலுள்ளன. நிலம், தஷிண கைலாசம், இமவான் இம்மூன்றும் தெற்கிலிருக்கின்றன. அகழி போன்ற ஏழு கடல்களினிடையில் ஏழு த்வுகளும் ஏழு பர்வதங்களும் இருக்கின்றன. இங்குத் தேவராதிகள் வசிக்கின்றனர்.

பாற்கடலின் கரையாகிய த்வீபத்தில் திரிமூர்த்திகளும் வசிக்கின்றனர். அதற்கு அப்பால் ரத்னமய ப்ராகாரம் பதினாயிரம் யோசனை. அங்குப் பத்மராக ரத்னமலை ஒன்றிருக்கிறது. அப்பால் சந்திரகாந்த மணிமதில் விளங்குகிறது. அது 5000 யோசனை. அப்பால் வச்சிரபர்வதம் 10,000 யோசனை. அதற்கு வெளியில் மரகதமதில். அப்பால் பவள மலை 20,000 யோசனை. அப்பால் கோமேதக மலை 30,000 யோசனை. அங்குக் குருவிந்த மணிமலை 15,000 யோசனை. அதற்கப்பால் புட்பாராக ப்ராகாரம் 40,000 யோசனை. அப்பால் முத்துமலை. அப்பால் வைடூர்ய ப்ராகாரம். அதற்கப்பால் நவரத்ன மண்டபமுளது. அதில் பல சிவப்ரதிஷ்டைகள் அமைந்துள. அம்மண்டபத்தினிடையிலுள்ள கர்ப்ப கிருகத்தில் தேவர்களால் பூசிக்கப்பட்ட மகாலிங்கம் ஒன்று விளங்குகின்றது.

அம்மலையின்சார் ஓர் புறத்தில் பரமேச்வரனது திருஉருவம் போல் பஞ்சவத்திரேச்வர லிங்கமொன்று விளங்குகின்றது. அந்த லிங்கத்தின் ஐந்து முகங்களினின்றும் ஐந்து கங்கைகள் பிரவகித்து அமுத சமுத்திரம் போய்ச் சேருகின்றன. அவை கிழக்கில் ரத்ன கங்கையென்றும், மேற்கில் தேவ கங்கையென்றும், வடக்கில் கைலாச கங்கையென்றும், தெற்கில் உக்கிர கங்கையென்றும் நடுவில் பிரம கங்கையென்றும் பெயர்களில் பிரவகிக்கும். அக்கங்கையின் கரையில் விளங்கும் மண்டபத்தில் ரத்ன மயமாய் நிருபிக்கப்பட்ட சிம்மாசனத்தில் நந்தி முதலிய கணங்கள் சேவிக்கத் தேவியுடன் சிவமூர்த்தி எழுந்தருளியிருப்பர்.

Koviloor Digital Library

மேற்சொன்ன ஸ்ரீ கைலாசத்தின் மலை ப்ராகாரங்களின் மத்தியில் கணங்களுக்கு வாசஸ்தலமுள்ளது. அதில் கிழக்குத்துவார நீல ரத்ன கோபுரம் 9 லக்ஷம் பிரமாணமுடையது. அங்கு நந்தீச்வர ஆலயம் விளங்கும். அங்குள்ள நந்தீச்வரம் என்னும் சிவலிங்கத்தை அவர் பூசித்துக் கொண்டிருக்கின்றனர்.

கிழக்குப் பிராகாரத்தில் நிடதம் என்றும் ஏமகூடம் என்றும் பெரிய இரண்டு பர்வதங்களிருக்கின்றன. ஆக்னேய திக்கில் ஐந்து லக்ஷம் பிரமாணமுடைய ஒரு கோபுரமுண்டு. அங்குள்ள சுகேச்வரர் என்னும் சிவபெருமானை சுகேசன் என்னும் கணநாதன் பூசித்துக் கொண்டிருக்கிறான். தெற்கில் நீலமென்றும் மந்தாரமென்றும் இரண்டு பர்வதங்களிருக்கின்றன. அங்குள்ள பத்து லக்ஷம் பிரமாணமுள்ள கோபுரத்தில் சண்முக லிங்கத்தை வணங்கிக் கொண்டு சண்டீசர் இருக்கின்றனர்.

நிருதி திக்கில் 5 லட்சம் பிரமாணமுள்ள கோபுரத்தில் பாண லிங்கத்தைப் பூசித்து கொண்டு பாணனிருக்கின்றனன். மேற்குப் பிராகாரத்தில் அஸ்தாத்திரி பாரியாத்ரமென்னும் இரண்டு பர்வதங்களிருக்கின்றன. அங்கு 10 லட்சம் பரிமாணமுள்ள கோபுரத்தில் பிருங்கீச்வரரை வணங்கிக் கொண்டு பிருங்கி முனிவர் வீற்றிருக்கின்றனர். வாயு பாகத்தில் 5 லட்சம் பரிமாணமுள்ள கோபுரத்தில் ருடீச்வரரை வணங்கிக் கொண்டு ருடீ என்பவன் இருக்கின்றான். வடக்குப் பிராகாரத்தில் துந்துபி, மந்திரம், ரைவதம் என்னும் மூன்று கிரிகளிருக்கின்றன. அங்குப் பத்து லட்சம் யோசனையுள்ள கோபுரத்தில் காலருத்திரரை வணங்கிக் கொண்டு காலாக்கினி ருத்திரர் வீற்றிருக்கின்றனர். ஈசான பாகத்தில் ஐந்து லட்சம் யோசனையுள்ள கோபுரத்தில் வீரபத்திரரேச்வரமென்னும் மூர்த்தியை வணங்கிக் கொண்டு நீல ருத்திரர் இருக்கின்றனர்.

மகேசாலயத்திற்குக் கீழ்த்திசையில் க்ஷீர சமுத்திரமாகிய அகழியோடு கூடிய கோட்டை யொன்றுள்ளது. அங்குத் தத்

Koviloor Digital Library

புருஷர் வீற்றிருக்கின்றனர். தென் திசையில் உவர்க்கடல் அகழியுடன் கூடிய இருப்புக் கோட்டையில் அனேக பிரமத கணங்களுடன் அகோரேச்வர லிங்கத்தைப் பூசித்துக் கொண்டு அகோரமூர்த்தி வீற்றிருக்கின்றனர். தயிர்க்கடலாகிய அகழியால் சூழப்பட்ட புட்பராக மணிமயக் கோட்டையில் சத்தியோஜாத லிங்கத்தை பூசித்துக்கொண்டு சத்தியோஜாதர் வீற்றிருக்கின்றார். வடக்குத் திசையில் நெய்க் கடலாகிய அகழியால் சூழப் பெற்ற கோமேதகமணிக் கோட்டையில் அமைக்கப்பட்ட கோபுரத்தில் வாமதேவ லிங்கத்தைப் பூசித்துக் கொண்டு வாம தேவர் வீற்றிருக்கின்றனர் உச்சியில் மணியாலாகிய கோபுரத்தில் ஈசானேச்வரரைப் பூசித்துக் கொண்டு ஈசனார் 'வீற்றிருப்பர்.

3. சிவராத்திரி

கால நிர்ணயம் மாசி மாதம் கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தசி இரவு பதினான்கு நாழிகை, லிங்கோற்பவ காலம். இதுவே மகா சிவராத்திரி புண்ய காலம். கிருஷ்ணபக்ஷம் திரயோதசி 30 நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது உத்தமம். திரியோதசி இல்லாமல் சதுர்த்தசி வியாபிப்பது அதமம். ஒரு காலம் அன்றையிராத்ரிக்கு அமாவாசை பிரவேசிப்பது பரியாய சிவராத்ரி. இந்த மகாசிவராத்ரி தினத்தில் நேரிடும் திரயோதசி பரமசிவத்திற்குத் தேகமாகவும், சதுர்த்தசி தேகியாகவும் அன்றிச் சத்தியாகவும் சிவமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

சிவராத்ரி முதற் சாம முதல் நான்கு சாமங்களிலும் ஆத்மார்த்த பரார்த்த பூசைகள் நடத்த வேண்டியது; தானஞ் செய்ய வேண்டியது. இதை அனுஷ்டித்தோர் நான்கு யுகங்களிலும் முறையே விநாயகர், கந்த மூர்த்தி, பிரம விஷ்ணுக்களாம்.

Koviloor Digital Library

பலன் இம்மையில் சற்சன தானாதி சௌபாக்ய சம்பத்தும், மறுமையில் சுவர்க்காதி போகமுமாம். இது காமியம். நிஷ்காமிகள் இகத்தில் புத்தியும் பரத்தில் முக்தியும் அடைவர்.

மகா சிவராத்திரி பிரம விஷ்ணுக்கள் பொருட்டுச் சிவமூர்த்தி இலிங்கோற்பவமாய் எழுந்தருளியபோது தேவர்கள் பூசித்த காலம் எனவும், ஒரு பிரம்ம கற்பத்தில் சக்தி நாற்சாமத்திலும் சிவபூசை செய்து தாம் பூசித்த காலம் சிவராத்திரியாக எனச் சிவமூர்த்தியை வரம் வேண்டிப் பெற்ற நாள் எனவும், சக்தி விளையாட்டாகச் சிவமூர்த்தியின் திரிநேத்திரங்களை மூட உலகங்கள் இருண்டன. அக்காலத்துச் சிவமூர்த்தியைத் தேவர் வணங்கின காலம் எனவும், பாற்கடலில் தோன்றிய விஷமுண்ட சிவமூர்த்தியை விஷம் பீடிக்காமல் தேவர் இரா முழுவதும் பூசித்த காலம் எனவும், ஒரு கற்பத்தில் அண்டங்கள் எல்லாம் இருள உருத்திரர் அந்த இருள் நீங்கச் சிவத்தைப் பூசித்த காலம் எனவும் பல புராணங்கள் கூறும்.

4. சிவாஷ்டாஷ்ட மூர்த்தங்கள்

1. இலிங்கம், 2. இலிங்கோற்பவம், 3. முகலிங்கம், 4. சதாசிவம், 5. மகாசதாசிவம், 6. உமாமகேசம், 7. சுகாசனம், 8. உமேசம், 9. சோமாஸ்கந்தம், 10. சந்திரசேகரம், 11. ருஷபாருடம், 12. ருஷபாந்திகம், 13. புஜங்கலளிதம், 14. புஜங்கத்திராசம், 15. சந்தியாநிருத்தம், 16. சதாநிருத்தம், 17. காளி தாண்டவம், 18. கங்காதரம், 19. கங்கா விசர்ச்சனம், 20. திரிபுராந்தகம், 21. கல்யாணசுந்தரம், 22. அர்த்தநாரீசம், 23. கஜயுத்தம், 24. சுவராபக்னம், 25. சார்த்தூ லஹரி, 26. பாசுபதம், 27. கங்காளம், 28. கேசவார்த்தம், 29. பிக்ஷாடனம், 30. சிம்மகனம், 31. சண்டோனுக்ரகம், 32. தக்ஷிணாமூர்த்தம், 33. வீணா தக்ஷிணாமூர்த்தம், 34. காலாந்தகம், 35. காமாரி, 36. லகுளேசம், 37. பைரவம், 38. ஆபத்தோத்தாரம், 39. வடுகம்,

Koviloor Digital Library

40. க்ஷேத்ரபாலம், 41. வீரபத்ரம், 42. அகோராஸ்தரம், 43. தக்ஷயஞ்ஞஹதம், 44. கிராதம், 45. குருமூர்த்தம், 46. அச்வாருடம், 47. கஜாந்திகம், 48. ஜலந்தரவதம், 49. ஏகபாத திரிமூர்த்தம், 50. திரிமூர்த்தி திரிபாதம், 51. ஏகபாதமூர்த்தம், 52. கௌரி ப்ரியம், 53. கௌரி வரப்ரதம், 54. சக்ரதான ஸ்வரூபம், 55. கௌரீ லீலா சமன்விதம், 56. விஷயபிரணம், 57. கருடாந்திகம், 58. பிரம்மசிரச்சேதம், 59. கூர்ம சம்மாரம், 60. மச்சாரி, 61. வராகரி, 62. பிரார்த்தனாமூர்த்தம், 63. இரக்த பிக்ஷாப்ரதானம், 64. சிஷ்ய பாவம்.

5. சிவத்தலங்கள்

வடநாடு (52)

1. திருக்கைலாயம்

இதற்கு வெள்ளியங்கிரி, நொடித்தான் மலை, திருமலை முதலிய பல திருநாமங்களுண்டு.

சுவாமி பெயர்—கைலாயநாதர். தேவியார்—பார்வதிப் பிராட்டியார். தீர்த்தம்— மகாசிவ தீர்த்தம்.

இது சிவபெருமான் காரைக்காலம்மையாரை 'என்னம்மையே, வா!' வென்றழைத்த திருத்தலம்.

ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் எழுந்தருளிய சேரமான் பெருமாள் நாயனார் ஞான உலாப் பாடி அரங்கேற்றிய தலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தரிசிக்கச் சென்று திருவடி தேய்ந்து திருவையாற்றில் தரிசனம் பெறக் கட்டளை பெற்ற தலம். இதில் சிவபெருமான் உமாதேவியாரோடு சிவகணங்கள் சேவிக்க எழுந்தருளியிருப்பார். இது சைவசமயாசாரியார்கள் மூவராலும் பாடப் பெற்றது. இது பரதகண்டத்திற்கு வடவெல்லையான இமயப் பர்வதச் சாரலின்கண் உள்ளது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் 2. நாவுக்கரசர் 4.சுந்தரர் 1 பதிகங்களை யுடையது. இதனை மௌண்ட் கைலாஸ் (Mount Kailas) என்று அழைப்பர்.

இங்குச் செல்வதற்கு வழி வருமாறு:

ஆல்மோரா (Almora) ரயிலடியைச் சேர்ந்ததும், அங்கிருந்து கால்நடையாகவோ, குதிரை மேலோ செல்ல வேண்டும்.

ஆல்மோராவிலிருந்து ஆஸ்காட்டுக்குக் கிழக்கு முகமாக ஒரு வாரம் பிரயாணஞ் செய்ய வேண்டும். இது 64 கட்டை. அங்கிருந்து 23 கட்டை வடகிழக்காக ஒரு பயணஞ் சென்றால் தார்க்குலாவை அடையலாம். அங்கிருந்து 51 கட்டை மலையின் மேல் ஏறியிறங்கினால் கர்பயங் (Carbayang) என்ற ஊரையடைலாம்.

இது சமுத்திர மட்டத்திற்கு மேல் 10,500 அடி உயரத்திலிருக்கிறது. மலை ஏறின இளைப்பு ஆற இரண்டு மூன்று நாள் தங்கவேண்டும். அங்கிருந்து தக்லகோட்டை (Taklakot)க்கு 28 கட்டை போக வேண்டும். அங்குதான் லிபு லேக் கணவாய் இருக்கிறது. அதன் மட்டம் 16,750அடி. அங்கிருந்து 30 கட்டை சென்றால் மாநஸரோவரம் இருக்கிறது. அதனிலிருந்து கைலாய தரிசனம் செய்வர். பின்னர் கயிலையங்கிரியின் அடிவாரத்தைப் பிரதக்ஷணஞ் செய்வர்.

2. திரு அநேகதங்காபதம்

சூரிய சந்திரர்கள் பூசித்த தலம். சுவாமி பெயர்-அருண் மன்னு ஈசுவரர். தேவியார்-மனோன்மணியம்மை. தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

3. கௌரி குண்டம்

உருத்ர பிரயாகையிலிருந்து போக வேண்டும். இது கௌரி தவஞ்செய்த இடம். இதனை திரு அநேகதங்காபதம் என்பர். இது மானஸரோவரத்திலிருந்து திருக்கைலாயம்

Koviloor Digital Library

பிரதக்ஷிணத்தில் கிழக்கே இருக்கிறது. இது டோல்மா கணவாய் (Dolma Pass) முடிகிற இடத்திலிருக்கிறது.

கௌரி குண்டத்திலிருந்து பீமகுண்டா மார்க்கமாய்த் திருக்கேதாரமும் போகலாம்.

4. திரு இந்திர நீலபர்வதம்

இந்திரன் பூசித்த தலம். பாண்டு மைந்தர்களில் அருச்சுனன் பூசித்துப் பாசுபதம் பெற்ற தலம். சுவாமி பெயர்- நீலாசலநாதேசுவரர். தேவியார் - நீலாம்பிகை. தீர்த்தம்- இந்திர தீர்த்தம்.

கௌரி சங்கரமலை - நேபாள ராஜதானியான காட்மாண்டிலிருந்து 3 மைல் (சுமார் 5 கி. மீ.) தூரத்திலுள்ளது.

5. திருக்கேதாரம்

இது புரட்டாசி மாதத்து அமாவாசை முதல் பங்குனி மாதத்து அமாவாசை வரையில் தேவர்களும், மற்ற மாதங்களில் மனிதர்கள் பூசிப்பதுமாயுள்ள தலம்.

சுவாமி பெயர்-கேதாரேசுவரர், தேவியார்-கேதாரகௌரியம்மை, தீர்த்தம்-நாரத குண்டம்.

வடநாட்டில் இமயச்சாரலின் கண்ணது. காட்மாண்டிலிருந்து அம்மலையின் மேலாகவே திருக்கேதாரம் இருக்கிறது.

6. ஓங்காரம்

ஜபல்பூருக்கு 9 மைலில் (சுமார் 14½ கி மீ) நருமதை நதி தீரத்தில் பாணலிங்கம் உண்டான இடம்.

7. திருவேணி சங்கமம்

அலகாபாத் ஸ்டேஷனிலிறங்கிச் செல்ல வேண்டும். பிரயாகை என்றும் பெயர் பெறும். இங்கு கங்கையில் யமுனை, சரஸ்வதி என்ற நதிகள் கூடுகின்றன இவ்விடத்தில் பிதுர் தர்ப்பணம் செய்வது விசேடமானது.

Koviloor Digital Library

8. உஞ்சைமாகாளம்

உஜ்ஜெயின் ரயில் நிலையம். அவந்தி, ஆடகேசுரம், தாரகேசுரம் எனவும் பெறும். சுவாமி பெயர் மாகாளநாதர். அப்பர் இரு பதிகங்களிலும் பயில்வது. திரு அவந்தி மாகாளம் எனவும் பெயர் பெறும்.

9. புஷ்கர க்ஷேத்திரம்

இது அஜ்மீர் (Ajmir) ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் உள்ளது.

10. சோமநாதம்

ஆமதாபாத் (Ahmedabad) மார்க்கமாகச் செல்ல வேண்டியது. குஜராத்தில் அரபிக்கடல் ஓரத்தில் இருக்கிறது.

11. இந்திரப்பிரத்தம்

டில்லி ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 7 அல்லது 8 கட்டைக்குள் இருக்கிறது.

12. அஸ்தினாபுரம்

மீரட் ரயில் நிலையத்திலிருந்து 20 மைலில் (சுமார் 34 கிலோ மீட்டர்) இருக்கிறது.

13. குருக்ஷேத்திரம்

டில்லிக்கும் அம்பாலாவுக்கும் மத்தியிலுள்ள தானேசர் ஸ்டேஷனுக்கருகில் இருக்கிறது. சுவாமி பெயர்—தாணுநாதர். தேவியார்—பார்வதியம்மை. அப்பர், சுந்தரர் பதிகங்களில் பயில்வது.

14. ஹரித்வாரம்

டில்லி ஸ்டேஷனிலிருந்து லக்ஸர் மார்க்கத்தில் இருக்கிறது. இங்கு கங்கை பூமியிலிறங்குகிறது. இங்கு ஹரித்வாரம், மாயாத்வாரம், கங்காத்வாரம் இருக்கின்றன.

Koviloor Digital Library

15. அயோத்தி

பனாரஸ் ரயில் நிலையத்திலிருந்து லக்னோ சென்று அங்கிருந்து செல்லவேண்டியது.

16. நைமிசாரண்யம்

லக்னோ ஸ்டேஷனிலிருந்து சண்டிலா ஸ்டேஷனுக்கு 20 மைலில் (சுமார் 34 கி. மீ.) இருக்கிறது.

17. இரிஷிகேசம்

ஹரித்வாரிலிருந்து சுமார் 10 மைலில் (சுமார் 17 கி.மீ.) இருக்கிறது. இதிலிருந்து இமாசலத்தை தரிசிக்கலாம்.

18. உருத்ரப்ரயாகை

ஹரித்வாரிலிருந்து சத்திநாராயணம், சத்ருக்ணம், லக்ஷ்மண் ஜுலா, தபோவனம், புலாலி சட்டி, பிஜிலிசட்டி மார்க்கமாய்ப் போக வேண்டும்.

19. பதரி நாராயணம்

உருத்ர ப்ரயாகையிலிருந்து விஷ்ணுப்ரயாகை, பண்டி கேசவம் மார்க்கமாய்ப் போகவேண்டும்.

20. பிரமகபாலம்

பத்ரிநாராயணத்திற்கு அருகில் உள்ளது. இங்குப் பிதுர்க்களுக்குப் பிண்டம் இடுவர்.

21. பத்ரிகாசிரமம்

ஹரித்வாரிலிருந்து 187 மைலில் (சுமார் 300 கி. மீ.) இருக்கிறது.

22. ஸ்ரீ காசி

இது சத்தமுத்தித் தலங்களுள் ஒன்று. புராணாதிகளால் கூறி அடங்காது. இதில் இறக்கும் ஆத்மாக்களுக்குச் சிவ பெருமான் தாரக உபதேசம் செய்து திருவடியளிப்பர்.

Koviloor Digital Library

இதில் உமாதேவியாரின் விரற்கன் தோன்றிய மணி கர்ணிகையுண்டு. காலபைரவராற் காக்கப்பட்ட தலம். இதில் இறக்க முக்தியுண்டு.

இது யமுனை கங்கை முதலிய புண்ய நதிகளால் சூழப் பெற்றது. சுவாமி பெயர்—விசுவநாதர், தேவியார்—விசாலாக்ஷியம்மை. தீர்த்தம்—கங்கை.

இது வாரணாசி யென்றும் சொல்லப்படும். கேதார கட்டம் என்ற தீர்த்தக் கட்டமுண்டு. அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரக் கோவையிலும் தேவாரங்களிலும் பயில்வது.

23. ஜகந்நாதம்

பூரி ஸ்டேஷன் இப்பொழுது புரி என்றழைக்கப்படுவது. வடக்கிலுள்ளவர்க்கு முக்கியமான தலம்.

24. புவனேஸ்வரம்

குர்டா ரோட் ஸ்டேஷனுக்கு சமீபத்தில் இருக்கிறது.

25. பிருந்தாவனம் - கோவர்த்தனம்

அஜ்மீர் வழியாக ஆக்ரா ஸ்டேஷன், மதுரை ஸ்டேஷன் சென்றால் வடமதுரை, காளிந்தி நதி, கோகுலம் இருக்கின்றன.

26. திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம், மல்லிக்கார்ச்சுனம்)

ஸ்ரீ நந்திமாதேவர் பூசித்த தலம். சமயாசாரியார் மூவராலும் பாடப்பட்டது. இஷ்டசித்தி தருந்தலம். சுவாமி பெயர் — பருப்பதேசுவரர், தேவியர் — பருப்பத மங்கை. தீர்த்தம் — பருப்பத தீர்த்தம்.

கர்நூலிலுள்ள நந்தியால் ஸ்டேஷனிலிறங்கி வடகிழக்கில் 60 மைல் சுமார் (97 கி.மீ.) ஞானசம்பந்தர் 1, நாவுக்கரசர் 1, சுந்தரர் 3 பதிகங்களுடையது.

27. பத்ராசலம்

ஐதராபாத் மார்க்கத்தில் குண்டா ஸ்டேஷனிலிருந்து வடக்கே 48 மைலில் (சுமார் 77 கி. மீ) உள்ள சிவத்தலம்.

Koviloor Digital Library

ராஜமகேந்திர புரத்திலிருந்து படகு மூலமாய் 60 மைல் (சுமார் 97 கி. மீ.)

28. தவளேஸ்வரம்

பெஜவாடாவிலிருந்து (விஜயவாடா) வடக்கே செல்லும் ரயில் பாதையிலுள்ள ராஜமகேந்திரம் ஸ்டேஷனிலிருந்து நான்கு மைலில் (சுமார் 65 கி. மீ.) கோதாவரி நதி மீது இருக்கிறது.

29. விருபாக்ஷிஸ்தலம்

குண்டக்கல் ஸ்டேஷன் அப்பால் தக். பிறகு தோரண கலு. அதற்கப்பால் ஓஸ்பெட். இதற்கு எட்டு மைலில் (சுமார் 13 கி. மீ.) இருக்கிறது.

30. பாண்டரங்கம்

குண்டக்கல் ஸ்டேஷனிலிருந்து வாடி ஸ்டேஷன். அதிலிருந்து ஆட்ஜி, அங்கிருந்து பார்க்ரோட் ஸ்டேஷன். அதிலிருந்து 30 மைலில் (சுமார் 64 கி. மீ.) இருக்கிறது.

31. திரியம்பகம்

பம்பாயிலிருந்து நாசிக் ஸ்டேஷனுக்கு மேற்கே 10 மைலில் (சுமார் 17 கி.மீ.) கோதாவரி உற்பத்தியாகும் இடத்திலிருக்கிறது. இதற்கு 7 மைல் (சுமார் 11 கி. மீ.) தொலைவில் பஞ்சவடி இருக்கிறது. திரிமூர்த்திகளும் சோதிலிங்கம் உருவாய் எழுந்தருளியிருக்கின்றனர்.

32. திருக்கோகர்ணம்

இது மேலைச் சமுத்திரக்கரையிலுள்ளதொரு சிவத்தலம். சம்பந்தர், அப்பர் இருவருடைய பதிகமும் கொண்டது.

சுவாமி பெயர்— கோகர்ணநாதர். தேவியார்: கோகர்ண நாயகி. சுடனலத் தீர்த்தமாக உடையது.

எல்லோரும் சென்று காணுதற்குரிய சிறப்பு வாய்ந்தது.

Koviloor Digital Library

செல்லும் வழி: சென்னையிலிருந்து பெங்களூர் வழியாக வாவது. குண்டக்கல் வழியாகவாவது ஹூப்ளி ரயில் நிலையத்தை அடைந்து, அங்கிருந்து பஸ் வழியாகத் திருக்கோகர்ணம் செல்ல வேண்டும். அல்லது மர்மகோவாவிலிருந்து கடல் வழியாகவும் செல்லலாம். ஹூப்ளிக்கும் திருக்கோகர்ணத்துக்கும் 108 கட்டையளவு இருக்கிறது. இங்கு மகா சிவராத்திரி முக்கியமானது.

6. தொண்டை நாடு (32)

1. சீகாளத்தி

இது தெக்கிண கயிலாயம் எனவும் பெயர் பெறும். ஆதார க்ஷேத்திரங்களில் விசுத்தித்தானமாக உள்ளது. சீ, காளம், அத்தி இம்மூன்று பதச் சேர்க்கையால் சீகாளத்தியென்று பெயர் வந்தது.

இந்த ஊரில் சிலந்தி, பாம்பு, யானை மூன்றும் பூசித்து முத்தி பெற்றன. பாண்டு குமாரனாகிய அருச்சுனன் வேடனாய்க் கண்ணப்பனென்று பெயருற்று முத்தி பெற்ற தலம். நக்கீரரும் சிவாகோசரியாரும் முத்தி பெற்றது.

சுவாமி பெயர் — காளத்தீசுவரர். தேவியார்—ஞானப் பூங்கோதை. தீர்த்தம்—பொன்முகரி தீர்த்தம். மூவர் பதிகங்கள் உண்டு.

இதற்கு நேராகவே இருப்புப்பாதை உண்டு. சிவப் பிரகாசரும் அவரது இளவல்களும் பாடிய சீகாளத்தி புராணமும் ஆனந்தக் கூத்தர் பாடிய திருக்காளத்தி நாதருலாவும் உடையது. நக்கீர தேவரால் பாடப் பெற்ற கயிலைபாதி, காளத்தி பாதி அந்தாதியுடையது.

Koviloor Digital Library

2. திருவெண்பாக்கம்

சதானந்த ருஷி பூசித்த தலம். கண்களிழந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு ஊன்றுகோல் அருளிய தலம்

சுவாமி பெயர்—வெண்பார்க்கேசுவரர். தேவியார்—கனி வாய் மொழியம்மை. தீர்த்தம்—கைலாய தீர்த்தம்.

இது திருவெவ்வளூர் (திருவள்ளூர்) ரயில் நிலையத்தில் இறங்கினால் ஏழு மைலில் (சுமார் 11 கி. மீ.) இருக்கிறது.

3. திருப்பாசூர்

இது வியாச ருஷி பூசித்த தலம். மூங்கிலடியில் முளைத்த சிவபெருமானைத் தரிசித்த சோழனுக்குப் பாம்பாட்டியாகத் தரிசனந் தந்தருளிய தலம்.

சுவாமி பெயர்-பாசூர் நாதர். தேவியார்-பசுபதி நாயகி. தீர்த்தம்—சோழ தீர்த்தம்.

இதற்கு மேற்கே திருவாலங்காடு உள்ளது. இருப்புப் பாதை திருவெவ்வளூர் எனும் திருவள்ளூர் ஸ்டேஷன்.

நாவுக்கரசர் 2 ஞான சம்பந்தர் 1 பதிகங்களையுடையது. இதற்குப் பூவை அஷ்டாவதானம் கலியாண சுந்தர முதலியார் எழுதிய புராண வசனம் உண்டு.

4. திருஆலங்காடு

இந்திரன், ஆதிசேடன், சுநந்தர் முதலியோர் பூசித்த தலம். சிவபெருமான் காளியுடன் நிருத்தவாதஞ் செய்தருளிய தலம். காரைக்காலம்மையார் ஓவாநிருத்த தரிசனங் கண்டருள் தலம். வேளாளர் செட்டியின் பழிக்காகத் தீப்பாய்ந்த தலம்.

சுவாமி பெயர்—ஊர்த்தவ தாண்டவமூர்த்தி. தேவியார்-வண்டார் குழலம்மை. தீர்த்தம்—முத்தி தீர்த்தம். இரத்தின சபை. பலா விருக்ஷம்.

Koviloor Digital Library

ரயில் நிலையம்—சின்னம்மா பேட்டை (பழையனூர்) ஞானசம்பந்தர் 1 நாவுக்கரசர் 2 சுந்தரர் 1 பதிகங்களை யுடையது. காரைக்காலம்மையாரது இரண்டு பதிகங்களை யுடையது.

5. திருக்கள்ளில் (திருக்கள்ளம்)

பிருகு முனி பூசிக்கத் தக்ஷிணாமூர்த்தி திருக்கோலமாகத் தரிசனந் தந்தருளிய தலம்.

சுவாமி பெயர்—சிவநாதந்தேச்சுரர். தேவியார்—ஆனந்த வல்லியம்மை. தீர்த்தம்—நந்தி தீர்த்தம்.

இது சென்னைக்கு மேற்கே 26 மைலிலுள்ள (சுமார் 42 கி.மீ.) திருவெவ்வளூரிலிருந்து 16 மைலில் (சுமார் 26 கி.மீ.) இருக்கிறது. ஆவடி ரயில் நிலையத்திலிருந்து 4 கட்டை தொலைவில் இருக்கிறது. ஞானசம்பந்தர் பதிகமுடையது.

6. திருவிற்கோலம் (கூவம்)

திரிபுர தகனஞ் செய்த சிவமூர்த்தியைத் தேவர் பூசித்த தலம். சத்தி பூசித்த தலம்.

சுவாமி பெயர்—திரிபுரசுந்தரேசர். தேவியார்—புராந்தகி யம்மை. தீர்த்தம்—ஆலிற்கோலம், கூபாக்கினி.

ரயில் நிலையம் கடம்பத்தூரிலிருந்து தெற்கே 6 மைல் (சுமார் 9 கி.மீ.) தொலைவு, அப்பர் பதிகங்களில் பயில்வது.

7. திருஇலம்பையங்கோட்டூர்

சந்திரன் பூசித்த தலம். சுவாமி பெயர்—சந்திரசேகரேசுவரர். தேவியார்-கோடேந்து முலையம்மை. தீர்த்தம்—சந்திர தீர்த்தம்.

இதுவும் கடம்பத்தூரிலிருந்து கூவத்திற்கு மேற்கே 1½ மைலில் (சுமார் 2 கி. மீ.) உள்ளது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் பதிகமுடையது. அப்பரது க்ஷேத்திரக் கோவையில் பயில்வது. தல புராணமுடையது.

8. திருவூறல் (தக்கோலம்)

இத்தலத்தில் பாதாள கங்கை நந்திவாயினின்று பொங்கி வருகின்றது. உமாதேவியார் பூசித்த தலம்.

சுவாமி பெயர் — உமாபதீச்சுரர். தேவியார் — உமையம்மை. தீர்த்தம்—பார்வதி தீர்த்தம்.

ரயில் நிலையம்—அரக்கோணம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே ஏழு மைல் (சுமார் 11 கி. மீ.) தொலைவில் உள்ளது.

ஞானசம்பந்தர் அப்பர் பதிகங்களில் பயில்வது.

9. திருமாற்பேறு

குபன் என்னும் அசுரன் பொருட்டுத் ததீசி முனிவருடன் பொருத திருமால் சக்கரம் பெறும் பொருட்டுப் பூசித்துப் பெற்ற தலம்.

சுவாமி பெயர்—மால்வணங்கீசர். தேவியார்—கருணை நாயகியம்மை. தீர்த்தம்—விஷ்ணு தீர்த்தம்.

இது காஞ்சிபுரத்தையடுத்த பள்ளூர் ஸ்டேஷனிலிருந்து 2½ மைலில் (சுமார் 4 கி. மீ.) இருக்கிறது. ஞானசம்பந்தர் 2 நாவுக்கரசர் 4 பதிகங்களை யுடையது.

10. திருவல்லம்

நவக்கிரகங்களும், வல்லாளனென்னும் அரசனும் பூசித்த தலம். கஞ்சாரனென்னும் அசுரனைச் சங்கரித்த தலம். இத்தலத்தில் நந்தி கிழக்கு முகமாகவும், சுவாமி மேற்கு முகமாகவும் திரும்பியிருக்கின்றனர்.

சுவாமி பெயர் — வல்லநாதேசுவரர். தேவியார் — வல்லாம்பிகை. தீர்த்தம்—சிவகங்கை, சிவா நதி.

Koviloor Digital Library

ரயில் நிலையம்—திருவலம். ஞானசம்பந்தர் அப்பர் பதிகங்களில் பயில்வது.

11. திருவிரிஞ்சிபுரம்

பிரமா, விஷ்ணு, சக்தி பூசித்த தலம் கழுதை முகமுள்ள அசுரன் பூசித்துக் கழுதை முகம் போக்கிக் கொண்ட தலம். மிளகு சுமை கொண்டு சென்ற தளபாலனுக்குச் சிவபெருமான் வழித்துணை சென்று வாதிட்டு மார்க்க சகாயத் திருநாமம் பெற்ற தலம் இது.

சுவாமி பெயர்—மார்க்கசகாயநாதர். தேவியார்—மரகதவல்லியம்மை. தீர்த்தம்—சக்தி தீர்த்தம்.

சிவநாதர் என்னும் வேதியச் சிறுவர் பொருட்டுச் சிவபெருமான் திருமுடி வளைத்துக் கொடுத்த தலம்.

ரயில் நிலையம்—விரிஞ்கிபுரம். பதிகம் இல்லை. எல்லா நாயனார் செய்த திருவிரிஞ்சைப் புராணமும், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழுமுடையது.

12. திருப்பனங்காட்டூர் (வன்பார்த்தான் பனங்காட்டூர்)

கண்ணுவ மகருஷி நிவேதிக்கப் பொருள் கிடைக்காது கிடைத்த பனம்பழத்தை நிவேதிக்கச் சிவபெருமான் களிப்புற்று அநுக்ரகித்த தலம். இக்காலத்தும் பனங்கனி நிவேதிக்கும் தலம்.

சுவாமி பெயர்—பனங்காட்டேசுரர். தேவியார்—அமிர்தவல்லியம்மை. தீர்த்தம்—அமிர்த தீர்த்தம்.

இது தென்புறமுள்ள கோயில். வடபுறமுள்ள கோயிலிலிருக்கும் சுவாமி பெயர்—கிருபாநாதர். தேவியார் — கிருபாநாயகி.

சுந்தரருடைய பதிகமுடையது. அப்பர் பதிகங்களில் பயில்வது. இங்கு இரண்டு பனை விருக்ஷங்கள் இருக்கின்றன. இதற்கு ஒரு கடிகையில் வன்பார்த்தான் என்ற திருப்பதியிருக்கிறது.

Koviloor Digital Library

இம்மார்க்கமாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி வந்தபோது சுவாமிகள் பிராமண வேடங்கொண்டு தோன்றிக் கட்டமுது தந்தருளி எவ்வூர் என்றபோது வன்பார்த்தான் பனங்காட்டூருக்கு மிவ்வூருக்குமா யிருப்போமென்ன, பதிகம் பெற்ற தலம்.

சுவாமி பெயர்—வன்பார்த்தநாதர். தேவியார்-பஞ்சின் மெல்லடியம்மை.

இது காஞ்சிபுத்திலிருந்து தெற்கே எட்டு மைலில் (சுமார் 13 கி. மீ.) இருக்கிறது.

13. திருவோத்தூர் (அனகாவூர்)

சிவபெருமான் தேவருஷிகளுக்கு வேதப் பொருளுணர்த்திய தலம். சிவனடியவரை நிந்தித்த அருகர் பொருட்டுத் திருஞானசம்பந்த சுவாமிகளால் ஆண் பனைகள் பெண் பனைகளாக்கிய தலம்.

சுவாமி பெயர்-வேதநாதேசுரர். தேவியார்-இளமுலையம்மை. தீர்த்தம்-வேத தீர்த்தம்.

இது காஞ்சிபுரம் ஸ்டேஷனிலிறங்கி வந்தவாசி பாதையாய் சுமார் 16 மைலிலிருக்கிறது (சுமார் 26 கி.மீ.). நல்ல பாதை.

ஞானசம்பந்தர், அப்பர் பதிகங்களில் பயில்வது. கருணாகரக் கவிராயர் இயற்றிய புராணமுடையது.

14. திருமாகறல்

தேவேந்திரன் பூசித்த தலம். கடகனென்னும் அசுரன் பொருட்டு இந்திரன் பூசிப்பச் சிவபெருமான் வளையிலிருந்து தரிசனம் தந்த தலம். உடும்பு சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறது.

சுவாமி பெயர்-அடைக்கலங் காத்தநாதர். மங்கலங் காத்த ஈசுரர். தேவியார்-புவனநாயகியம்மை. தீர்த்தம்-நவ்வி தீர்த்தம்.

Koviloor Digital Library

சீவரம் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 10 மைலில் (சுமார் 17கி.மீ.) இருக்கிறது. ஞானசம்பந்தர் பதிகமுடையது.

15. திருக்குரங்கணில்முட்டம்

குரங்கு, அணில், காக்கைகள் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

சுவாமி பெயர்-வாலீசுரர். தேவியார்-இறையார் வளையம்மை. தீர்த்தம்-வாலி தீர்த்தம்.

ரயில் நிலையம் காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே 6 மைலில் இருக்கிறது. (சுமார் 9 கி. மீ.) ஞானசம்பந்தர் பதிகமுடையது.

16. திருக்கச்சிநெறிக் காரைக்காடு

இங்குக் காரைவனமிருந்ததினால் இப்பெயர் வந்தது. சந்திரன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சத்தியவரதர். தேவியார்-காரார்குழலியம்மை. தீர்த்தம்-சத்திய தீர்த்தம். காஞ்சிபுரம் ஆடிசன் பேட்டையில் இருக்கிறது. ஞானசம்பந்தர் பதிகமுடையது.

17. திருவேகம்பம் (காஞ்சிபுரம்)

இது முத்தித் தலங்கள் ஏழனுள் ஒன்று. வேதங்கள் மரவுருவாய்ப் பூசித்த தலம்.

இத்தலத்துள் நல்லக் கம்பம், வெள்ளக்கம்பம், கள்ளக் கம்பம், திருமயானம், வாலீச்சுரம் என்னும் ஐந்து தலங்கள் இருக்கின்றன.

இவை முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன், வண்டாசுரன், வாலி பூசித்தவையாம்.

இவைகளன்றியும், திருக்கச்சபாலயம், காரோணம், பணாதரீச்சுரம், சுரகரீசம், விராட்டகாசம், மாணிச்சரம், உருத்திரகோடி, மகாசாந்தன் றளி முதலியன உண்டு.

Koviloor Digital Library

இது பிருதுவித்தலம். இது உமாதேவியார் பூசிக்கக் கம்பா நதி பெருகிவரச் சுவாமியைத் தழுவிக் கொண்ட தலம்.

இதில் காமாட்சிக்குத் தனித்த ஆலயம் இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு கண் பெற்ற தலம்.

திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் முதலியவர்கள் முத்தி பெற்ற மகாத்தலம். இதில் குமரக் கோட்டம் எனக் குமரக் கடவுள் ஆலயம் இருக்கிறது.

சுவாமி பெயர்-ஏகாம்பரநாதர். தேவியார்-ஸ்ரீ காமாக்ஷி யம்மை. தீர்த்தம்—கம்பா நதி முதலிய பல தீர்த்தங்கள்.

ரயில் நிலையம்-காஞ்சிபுரம்

ஞானசம்பந்தர் 4, நாவுக்கரசர் 8, சுந்தரர் 2 பாடல்கள் பெற்ற தலம்.

திருவாவடுதுறைச் சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் சேர்ந்து பாடிய புதிய புராணமும் மிகப் பழமையான புராணமும் உடையது. காஞ்சி கலித்துறைப் புராணம், காம கோட்டப் புராணமும் உண்டு. இரட்டையர் இயற்றிய கச்சி யுலாவும், கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதியும் ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூதும் உடையது.

18. திருக்கச்சிமயாளம்

ஏகம்பநாதர் கோயிலுள் கொடி மரத்துக்கு அருகில் இருப்பது. மூவர் பாடலும் பெற்றது. சுவாமி பெயர்-மயான நாதர்

19. திருக்கச்சி நெறிகாரைக்காடு

இது திருக்காலிமேடு என வழங்கும். சுவாமி பெயர்—திருக் காரை நாதர். சம்பந்தர து பதிகமுடையது.

20. திருக்கச்சிவெள்ளிடை

இது வீரட்டகாசேசுரர் கோயில் என வழங்கும். ஆடிசன் பேட்டையிலிருக்கிறது.

Koviloor Digital Library

சாக்கிய நாயனார் வணங்கிய தலம். திருக்கச்சி முத்தீச்சுரம். இதுவும் ஆடிசன் பேட்டையிருக்கிறது. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வணங்கிய தலம்.

சுவாமி பெயர்-முத்தீசுரர்.

21. திருக்கச்சி மேற்றளி

விஷ்ணு சிவருபம் பெற்றது. சுவாமி பெயர்-கச்சபேசுவரர். தேவியார்-காமாக்ஷியம்மை. தீர்த்தம் - விஷ்ணு தீர்த்தம். (காஞ்சிபுரம்) பிள்ளை பாளையத்திலிருக்கிறது. நாவுக்கரசர் பதிகமுடையது.

22. திருக்கச்சி ஓணகாந்தன்றளி

தேவர்களும் ஓணன், காந்தன் என்னும் அசுரர் இருவரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-ஓணகாந்தேசுரர். தேவியார்-காமாக்ஷியம்மை. தீர்த்தம்-விஷ்ணு தீர்த்தம் (காஞ்சிபுரம்) சர்வ தீர்த்தத்திலிருக்கிறது. சுந்தரர் பதிகமுடையது.

23. திருக்கச்சி அநேகதங்காபதம்

கணபதியும், குபேரனும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-திருஅநேகதங்காபதேசுவரர். தேவியார்-காமாக்ஷியம்மை. தீர்த்தம்-தாணு தீர்த்தம் (காஞ்சிபுரம்) புத்தேரித் தெருவுக்கு மேற்கிலுள்ள கழனி வெளியிலிருக்கிறது. சுந்தரர் பதிகமுடையது. கைலாயநாதர் கோயில் என்றும் கூறப்படுவது.

24. திருவலிதாயம் (பாடி)

தேவகுரு, அநுமான் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வலிதாயநாதேசுரர். தேவியார்-தாயம்மை. தீர்த்தம்-அநும தீர்த்தம்.

Koviloor Digital Library

வில்லிவாக்கத்திலிருந்து தென்மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.) தொலைவில் இருக்கிறது. ஞானசம்பந்தர் பாடல் உடையது. பழைய புராணம் உடையது.

25. திரிவடதிருமுல்லைவாயல்

தொண்டைமான் பகைவர்க்கஞ்சிப் பின்னிட யானையின் காலில் முல்லைக் கொடி சுற்றிக்கொண்டு தடைபடக் கண்டு வாளால் வெட்ட, வெட்டியவிடத்திருந்து தரிசனந் தந்து நந்திமாதேவரை யுத்தத்திற்கனுப்பின தலம்.

இத்தலத்தில் நந்திமாதேவர் சுவாமிக்குப் புறங்காட்டிக் கொண்டு இருக்கிறார்.

சுவாமி பெயர்-மாசிலாமணியீசர். தேவியார் கொடியிடை நாயகி. தீர்த்தம்-சுப்பிரமணிய தீர்த்தம், சக்கர தீர்த்தம்.

ரயில் நிலையம்-அம்பத்தூர்.

இத்தலத்தில் எருக்கந் தூண்களிரண்டு இருக்கின்றன.

சுந்தரர் பதிகமுடையது. திருமயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளை பாடிய புராணமும், சிவஞான முனிவர் பாடிய அந்தாதியுமுடையது.

26. திருவேற்காடு

குமாரக் கடவுள் பூசித்த தலம். மூர்க்க நாயனார் திருவவதாரத் தலம்.

சுவாமி பெயர்-வேற்காட்டீசர். தேவியார்-வேற்கண்ணியம்மை. தீர்த்தம்-வேலாயுத தீர்த்தம். ஆவடி ரயில் நிலையத்திலிருந்து 4 மைல் (சுமார் 6 கி. மீ.) நல்ல பாதை. ஞானசம்பந்தர் பதிகமுடையது. பழைய புராணமுடையது.

27. திருவொற்றியூர்

ஆதிசேடன் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரை மணந்து சூள் கூறிய தலம். பட்டினத்தடிகள் முக்தி பெற்ற தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-படம்பக்கநாதர். தேவியார்-வடிவுடையம்மை. தீர்த்தம்-கிருபா தீர்த்தம், அலைவாய்த் தீர்த்தம்-தலவிருட்சம்-மகிழ மரம்.

ரயில் நிலையம்-திருவொற்றியூர்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களையுடையது. கமலை ஞானப் பிரகாசரது சீடரொருவர் இயற்றிய புராணமுடையது. இரட்டையர் இயற்றிய பஞ்சரத்தினங்களையுடையது.

28. திருமயிலை

உமா தேவியார் மயிலுருக்கொண்டு பூசித்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் சிவநேசச் செட்டியாரின் குமாரியாராகிய பூம்பாவையாரை உயிர்ப்பித்த தலம். வாயிலார் நாயனார், ஐயடிகள் காடவர்கோன், திருவள்ளுவதேவர் தங்கிய சிறப்புள்ளது.

சுவாமி பெயர் - கபாலீச்சுரர். தேவியார் - கற்பகவல்லியம்மை. தீர்த்தம் - பிரம்ம தீர்த்தம். தலவிருட்சம்-புன்னை மரம்.

இம்மயிலை சென்னைப்பட்டணத்திற்குத் தெற்கே 4 மைலில் (சுமார் 6 கி. மீ.) உள்ளது.

திரு அண்ணாமலை ஆதினத்தைச் சார்ந்த அமிர்தலிங்கத்தம்பிரான் இயற்றிய தலபுராணமும், உலா, கலம்பகம், யமக வந்தாதி முதலியனவும் உடையது.

29. திருவான்மியூர்

காமதேனு பூசித்த சுவயம்பு மூர்த்தித் தலம். வான்மீக ருஷி பூசிக்க நடன தரிசனங் கொடுத்த தலம்.

சுவாமி பெயர்-மருந்தீசர். தேவியார்-சொக்க நாயகி. தீர்த்தம்-வன்மீக-தீர்த்தம்.

திருமயிலைக்குத் தெற்கு 4 மைலில் (சுமார் 6 கி. மீ) இருக்கிறது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது. பூவை கலியாணசுந்தர முதலியார் பாடிய தல புராண முடையது.

30. திருக்கச்சூர் ஆலக்கோயில் (திருக்கச்சூர்)

வித்தியாதரர் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமி களுக்கு வேதியராய்ப் பிக்ஷை கொண்டு அளித்த தலம்.

சுவாமி பெயர்-விருந்திட்ட ஈசுரர். தேவியார் அஞ்சனாக்ஷி. தீர்த்தம்-அமுத தீர்த்தம்.

31. திருஇடைச்சுரம்

கௌதமர், சநத்குமாரர் முதலிய மகரிஷிகள் பூசித்த தலம். சுவாமி பெயர்-இடைச்சுரநாதர். தேவியார்-இமய மடக்கொடியம்மை. தீர்த்தம்-இந்திர தீர்த்தம். செங்கல்பட்டிலிருந்து 5 மையல் (சுமார் 6 கி. மீ.) ஞானசம்பந்தர் பதிகமுடையது.

சிங்கப் பெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து வட மேற்கே 2 மைலில் (சுமார் 3 கி. மீ) இருக்கிறது. சுந்தரர் பதிகமுடையது.

32. திருக்கழுக்குன்றம்

அஷ்ட வசுக்கள், நந்தி, இந்திரன், பசு, வராகம் முதலியோர் பூசித்த தலம். திருமால் முதலியவர் பிரதக்ஷிணம் வந்து முத்தியடைந்த தலம். சண்ட, பிரசண்டர், சம்பாதி, சடாயு, சம்புகுந்தன், மாகுத்தன் முதலிய கழுகுகள் மூன்று யுகத்திலும் முறையே இரண்டிரண்டாய்ப் பூசித்து முக்தியடைந்த தலம்.

இக்கலியுகத்தில் பூஷா, விருத்தா எனும் தவசிகள் கழுகுருவா யிருக்குந்தலம்.

இத்தலத்தில் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை சங்கு பிறந்து வருகிறது.

Koviloor Digital Library

வாதவூரடிகளுக்குக் குருமூர்த்தம் தரிசனம் தந்தருளிய தலம். பிரத்தியக்ஷத்தில் பல நோய்களைத் தீர்க்குந்தலம்.

சுவாமி பெயர்-வேதகிரீசுரர். தேவியார்-பெண்ணினல்லாளம்மை. தீர்த்தம்-பக்ஷி தீர்த்தம், சங்கு தீர்த்தம்.

செங்கல்பட்டிலிருந்து 9 மைல் (சுமார் 14 கி. மீ) தூரத்தில் இருக்கிறது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களையுடையது. அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடிய புராணமுடையது. கோவையும் அந்தாதியுமுடையது.

33. திருஅச்சிறுபாக்கம்

தேவர்கள் பூசித்த தலம். திரிபுரசங்காரத்தின் பொருட்டு தேவர் செருக்கடங்கச் சிவபெருமான் தேரைமூன்ற அச்சுமுறிந்த தலம்.

சுவாமி பெயர்-பார்க்கபுரேசுரர். தேவியார்-ஆதிசுந்தரமின்னம்மை. தீர்த்தம்-தேவ தீர்த்தம்.

ரயில் நிலையம் அச்சிறுபாக்கம்.
ஞானசம்பந்தர் பதிகமுடையது.

34. திருவக்கரை

வக்ராசுரன், சந்திரன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சந்திரசேகரேசுவரர். தேவியார்-தேனாம்பிகையம்மை, அமுதாம்பிகை. தீர்த்தம்-சந்தர தீர்த்தம், பிரம தீர்த்தம்.

மயிலம் அல்லது விழுப்புரம் ரயில் நிலையத்தில் இறங்கிப் போகலாம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

35. திருஅரசிலி

ஒழுந்தியாபட்டு என இப்பொழுது வழங்குகிறது. வாமதேவ ருஷி பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-அரசிலிநாதர். தேவியார்-பெரிய நாயகியம்மை. தீர்த்தம்-அரசடி தீர்த்தம்.

புதுவையிலிருந்து ஏழு மைலில் (சுமார் 11 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

36. திருஇரும்பைமாகாளம்

மாகாளர் பூசித்த தலம். சுவாமி பெயர்-மாகாளேசுரர், தேவியார்-குயில்மொழியம்மை. தீர்த்தம்-மாகாள தீர்த்தம்.

புதுவைக்கு வடகிழக்கே 5 மைலில் (சுமார் 8 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

7. மகத நாடு அல்லது நடுநாடு-22

1. திருஅண்ணாமலை

சிவபெருமான் பிரம விஷ்ணுகளுக்கிடையே சோதியுருவாய் எழுந்தருளித் தரிசனந் தந்தருளிய தலம். உமாதேவியார் இறைவன் திருநேத்திரங்களைப் புதைத்த பாவம் நீங்கப் பூசித்துப் பாகம் பெற்ற தலம். பிரதக்ஷிணஞ் செய்த புழுகுப் பூனை, குதிரை முதலியன நற்பதவி பெற்ற தலம். அருணகிரிநாதர் அவதரித்துத் திருப்புகழ் முதலியன பாடியருளிய தலம். தேயுலிங்கம். மணிபூரக ஸ்தலம்.

சுவாமி பெயர்-அருணாசலேசுரர். தேவியார்-உண்ணாமுலையம்மை. தீர்த்தம்-சிவகங்கை.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பாடல்களையுடையது.

Koviloor Digital Library

சிதம்பரம் குகைமடம் மறைஞானசம்பந்தர் பாடிய அருணகிரிப் புராணமும், எல்லப்ப நயினார் பாடிய அருணாசல புராணமும், குகை நமசிவாயர் பாடிய அருணைக் கலம்பகமும், அருணையந்தாதியுமுடையது. சிவபிரகாச சுவாமிகள் சோண சைலமாலை பாடியுள்ளார். அருணாகிரி யந்தாதி யொன்றுமுண்டு.

2. திருஆமாத்தூர்

கோடி ருஷிகளும் காமதேனுவும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-காமார்த்தேசுரர், தேவியார்-அழகிய நாயகியம்மை. தீர்த்தம்-பசு தீர்த்தம்.

விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 4 மைலில் (சுமார் 6 கி. மீ) உள்ளது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களையுடையது. புராணம் அச்சிடப்பட்டுள்ளது. இரட்டையர் பாடிய கலம்பகம் இருக்கிறது.

3. புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)

வித்தியாதரர் பூசித்த தலம். சுவாமி பெயர் பனங்காட்டேசுரர். தேவியார்-அமிர்தவல்லியம்மை. தீர்த்தம்-அமிர்த தீர்த்தம்.

விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 5 மைலில் (சுமார் 9. மீ.) உள்ளது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

4. திருப்பாதிரிப்புலியூர்

வியாக்கிரபாத ரிஷியாற் பூசிக்கப்பட்டது. இது வடபுலியூரெனவும் படும். அப்பர் சுவாமிகள் கற்றூணிற் கட்டிக் கடலிலிட்ட காலத்துக் கரையேறிய தலம்.

சுவாமி பெயர் - தோன்றாத்துணைநாதர். தேவியார்-தோகையாம்பிகை. தீர்த்தம்-பெண்ணை நதி.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகமுடையது; புராண முடையது. தொல்காப்பிய தேவர் இயற்றிய கலம்பக முடையது. அப்பர் கடலிலிருந்து கரையேறிய இடத்திற்குக் கரையேறவிட்ட புராணம் பாடப்பட்டிருக்கிறது.

5. திருமாணிகுழி (திருமாண்டகுழி)

வாமனாவதாரங் கொண்ட விஷ்ணு மாணிக்கம் வைத்துப் பூசித்த தலம்.

சுவாமி பெயர் மாணிக்கமேனிவரதர். தேவியார் - மாணிக்கவல்லியம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி. திருப்பாதிரிப்புலியூர் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 3 மைலில் (சுமார் 5 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

6. திருவடுகூர் (ஆண்டார் கோயில்)

உக்ரவீர்ய ரிஷியும், பைரவரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வடுகேச்சுரர். தேவியார்-வடுவகிர்கண்ணியம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி.

புதுச்சேரிக்கிளை கண்ட மங்கலம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 2 மைலில் (சுமார் 3 கி. மீ.) இத்தலம் இருக்கிறது, இங்குத் தென்மேற்கே 1 மைலில் திருத்துறையூர்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

7. திருவெண்ணெய்நல்லூர்

இவ்வாலயத்திற்கு அருட்டுறையென்று பெயர். சம்புபத்த ருஷி பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொண்ட தலம். மெய்கண்ட சிவாசாரியார் திருவவதாரஞ் செய்த தலம்.

சுவாமி பெயர்-தடுத்தாட்கொண்ட ஈசுரர். இடபாருடராயிருக்கிறார். தேவியார் - வேற்கண்ணியம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி.

Koviloor Digital Library

பண்ணுருட்டி ரயில் நிலையத்திலிருந்து பதினைந்து மைல் சென்றால் இத்தலம் இருக்கிறது. இது பொழுது விழுப் புரம்-திருச்சி குறுக்கு ரயிலில் ஒரு ஸ்டேஷன்.

சுந்தரர் பதிகமுடையது. புராணமும், கலம்பகமும், உலா வும் இருக்கின்றன.

8. திருவிடையாறு

சுகப்பிரம்ம ரிஷி பூசித்த தலம். சுவாமி பெயர்-இடையாற் றேசுரர். தேவியார்-சிற்றிடைநாயகியம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி.

திருவெண்ணெய் நல்லூருக்கு மேற்கே 3 மைலில் (சுமார் 5 கி. மீ.) இருக்கிறது.

9. திருஅறையணி நல்லூர்

பிரசண்ட ருஷி பூசித்த தலம். சுவாமி பெயர்-அறையணி நாதேசுரர். தேவியார்-அருணாயகியம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

10. திருக்கோவலூர்

இது அட்ட விரட்டத்துள் ஒன்று. இது அந்தகாசுரனை வென்ற தலம், மெய்ப்பொருள் நாயனார் முத்தி பெற்ற தலம்.

ரயில் நிலையம் உள்ளது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது. புராணமுடையது.

11. திருநெல்வெண்ணெய்

சசிகர் முதலிய இராஜரிஷிகள் பூசித்த தலம். சுவாமி பெயர்-வெண்ணையப்பர். தேவியார்-நீலமலர்க்கண்ணம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி.

பண்ருட்டி ரயில் நிலையத்திலிருந்து 10 மைல் (சுமார் 17 கி. மீ.) இருக்கும்.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

12. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்-பழமலை)

பிரமன், அட்டவசுக்கள், உமை,விபசித்து, சிவனன்னன் பூசித்த தலம். மதுகைடவரை வெல்லத் தவஞ் செய்த விஷ்ணுவிற்கு விருத்த வேதியராய் அநுகிரகித்த தலம். சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குப் பொன் கொடுத்து அவர் அதனை இத்தலத்தின் கண்ணுள்ள மணிமுத்தா நதியிலிட்டு பெற்ற தலம்.

சுவாமி பெயர்-பழமலை நாதர். தேவியார்-பெரியநாயகி. தீர்த்தம்-மணிமுத்தா நதி. தல விருக்ஷம்-வன்னி.

விழுப்புரம் திருச்சி குறுக்கு ரயிலில் உள்ள ஒரு ஸ்டேஷன்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது. விருத்தாசல புராணமுடையது.

13 திருமுண்டீச்சுரம்

இந்திரன் பூசித்த தலம். சுவாமி-முண்டீச்சுரர். தேவியார்-கானார் குழலியம்மை. தீர்த்தம்-கண்ணாயிர தீர்த்தம். திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே 4 மைல் (சுமார் 6 கி. மீ.) நாவுக்கரசர் பதிகமுடையது.

14. திருநாவலூர் (திருநாமநல்லூர்)

சுக்கிரன் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு அவதாரஞ் செய்த தலம். சடையனார், இசை ஞானியார், நரசிங்க முனையரையர் முக்தியடைந்த தலம்.

சுவாமி பெயர் - திருநாவலேச்சுரர். தேவியார் - சுந்தர நாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

சுந்தரர் பதிகமுடையது. புராணம் இருக்கிறது.

திருவெண்ணெய் நல்லூருக்கு இரண்டு கட்டை தூரத்தி லுள்ளது.

Koviloor Digital Library

15. திருஅதிகை வீரட்டானம்

சிவபெருமான் திரிபுரதகனஞ் செய்தருளிய தலம். அப்பர் சுவாமிகள் திருத்தொண்டு பூண்ட தலம். மனவாசகம் கடந்தார் எழுந்தருளியிருந்த தலம்.

சுவாமி பெயர்-திருவதிகை வீரட்டானேசுரர். தேவியார்-திருபுரசுந்தரியம்மை. தீர்த்தம் சூலகங்கை, சக்கரதீர்த்தம், கெடிலநதி.

விஷ்ணு, பிரமன், கருடன் பூசித்த தலம் இது.

பண்ருட்டி ரயில் நிலையத்திற்குத் தெற்கே முக்கால் மைலிலிருக்கிறது. (சுமார் 1 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களுடையது. புராணம் உடையது.

16. திருச்சோபுரம் (தியாகவல்லி)

அகஸ்தியர் பூசித்த தலம். சுவாமி பெயர்-சோபுர நாதேசுரர். தேவியார்-சோபுர நாயகி. தீர்த்தம்-பரம தீர்த்தம்.

கூடலூர்க்கு அருகிலுள்ள ஆலப்பாக்கம் ரயில் நிலையத்தில் இறங்கிச் சென்றால் கழிக்கரைக் கண்ணிலிருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

17. திருத்தினைநகர் (தீர்த்தனகிரி)

மறைமுனிவர் பூசித்த தலம். சுவாமி பெயர்-திருந்தீச்சுரர். தேவியார்-ஒப்பில்லா நாயகியம்மை. தீர்த்தம்-மணிமுத்தா நதி.

இது மேற்கூறிய ஆலப்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து 5½ மைலில் (சுமார் 9 கி. மீ.) இருக்கிறது.

சுந்தரர் பதிகமுடையது.

18. திருஎடுக்கத்தம்புலியூர் (நாகேந்திர பட்டணம்)

நாகராசன் பூசித்த தலம். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் முக்தியடைந்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-நீலகண்ட நாயகேச்சுரர். தேவியார்-நீல மலர்க்கண்ணியம்மை. தீர்த்தம்-மணிமுத்தா நதி.

இங்கு ஒரு வெள்ளருக்கஞ் செடியிருக்கிறது.

விருத்தாசலத்திற்குத் தெற்கே ஏழு மைலில் (சுமார் 11 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

19. திருக்கூடலையாற்றூர்

வன்மீக ருஷி பூசித்த தலம். சுந்தரமூர்த்திகளை விருத்தாசலத்திற்குப் போகும் மார்க்கத்தில் வேதியராய் மறித்து இது கூடலையாற்றூர்க்குப் போகும் மார்க்கமெனக் கூறிப் பதிகம் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-நெறிகாட்டும் நாயகேசுரர். தேவியார்-புரிகுழலாம்பிகையம்மை. தீர்த்தம்-மணிமுத்தாநதி.

இது விருத்தாசலத்திலிருந்து கிழக்கே 14 மைலில் (சுமார் 23 கி. மீ.)

சுந்தரர் பதிகமுடையது.

20. திருத்தூங்கானை மாடம் (திருக்கடந்தை நகர், பெண்ணாகடம்)

இந்திரன், சப்த கன்னியர், ஐராவதம், காமதேனு பூசித்த தலம். கலிக்கம்ப நாயனார் திருஅவதாரத் தலம். திருநாவுக்கரசு விடைக்குறி, சூலக் குறி வேண்டிப் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-சுடர்க் கொழுந்தேச்சுரர். தேவியார்-கடந்த நாயகியம்மை. தீர்த்தம்-கெடில நதி தீர்த்தம்.

விருத்தாசலத்திற்குத் தென் மேற்கே 11 மைலில் இருக்கிறது. (சுமார் 18½ கி. மீ.)

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

21. திருநெல்வாயில் அரத்துறை

சப்தரிஷிகளும், இந்திரனும் பூசித்த தலம். திருஞான சம்பந்த சுவாமிகள் பாதசாரியாய் எழுந்தருளியது கண்ட சிவ பெருமான் முத்துச்சிவிகை, குடை,சின்னம் முதலிய அருளிய தலம்.

சுவாமி பெயர்-அரத்துறை நாதர். தேவியார்-ஆநந்த நாயகியம்மை. தீர்த்தம்-கெடில நதி தீர்த்தம்.

இது தூங்கானை மாடத்திற்கு 4 மைலில் (சுமார் 6 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களை யுடையது.

22. திருத்துறையூர் (திருத்தளூர்)

நாரத முனிவர் பூசித்த தலம். அருணந்தி சிவாசாரியார் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-துறையூரப்பேசுரர். தேவியார்-பூங்கோதை யம்மை. தீர்த்தம்-பெண்ணை நதி.

பண்ணுருட்டியிலிருந்து வடமேற்கே 5 மைலில் (சுமார் 8½ கி. மீ.) உள்ளது.

சுந்தரர் பதிகமுடையது.

Koviloor Digital Library

சோழ நாடு

காவேரியின் வடகரை-63

1. திருக்கோயில் (சிதம்பரம்)

இது திருப்புலியூர், புண்டரிகபுரம், தகராகாசம் முதலிய பல திருநாமங்கள் பெறும். இது ஆகாசத் தலம்.

சுவாமி பெயர்-சபாநாயகர். தேவியார்-சிவகாமியம்மை, தீர்த்தங்கள்-திருபுலீச்சுர தீர்த்தம், குய்ய தீர்த்தம், புலிமடு, அநந்தம், பிரமம், நாகேசரி, சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்த கூபம் முதலியனவாம். சபை கனகசபை.

பதஞ்சலி, வியாக்ரபாதர் பொருட்டுச் சிவபெருமான் திருநடனஞ் செய்தருளிய தலம். துன்மதன், துற்றெரிசனன், துச்சகன் முதலியோர் முக்தி பெற்ற தலம். தில்லைவாழ் அந்தணரென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பித்தருளிய அந்தணர் வசிக்கப் பெற்ற தலம். வியாச முனிவர், சுகர், சௌநகர், சூதர் முதலியோர் பூசித்த தலம். சைமினி முனிவர் வேதபாத ஸ்தவம் அருளச் செய்த தலம். சேந்தனார் அருள் பெற்ற தலம். மாணிக்கவாசகர் திருக்கோவையார், திருவாசகம் பாடி முத்தி பெற்ற தலம். திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூத்துவ நாயனார், கணம்புல்லர், சந்தானாசாரியர்கள் முத்தி பெற்ற தலம்.

ஞானசம்பந்தர் 2, நாவுக்கரசர் 8, சுந்தரர் 1 பதிகங்களை யுடையது. உமாபதிசிவம் செய்தருளிய கோயிற் புராணம், சிதம்பரபுராணம், சபாபதி நாவலர் செய்த ஹேமசபாநாத புராணம், தில்லைக்கலம்பகம், குமர குருபரர் செய்தருளிய சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை, மணிவாசகப் பெருமான் அருளிய திருக்கோவையார் முதலியன உடைய பதி.

Koviloor Digital Library

2. திருவேட்களம்

நாரதர் பூசித்த தலம். சுவாமி பெயர்-பாசுபதேசுரர். தேவியார்-நல்லநாயகியம்மை. தீர்த்தம்-நாரத தீர்த்தம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

3. திருநெல்வாயில் (சிவபுரி)

கண்ணுவ ருஷி பூசித்த தலம். சுவாமி பெயர்-உச்சி நாதேச்சுரர். தேவியார்-கனகாம்பிகை.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

4. திருக்கழிப்பாலை (காரைமேடு)

வான்மீக ருஷி பூசித்த தலம். சுவாமி பெயர் - பால் வண்ண ஈசர். தேவியார்-பொற்பத வேதநாயகி. தீர்த்தம்-கொள்ளிடம்.

ஞானசம்பந்தர் 2, நாவுக்கரசர் 5, சுந்தரர் 1 பதிகங்களையுடையது.

5. திருநல்லூர்பெருமணம் (ஆச்சாபுரம்)

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருமணக் கோலத்துடன் சோதியுட் கலந்த தலம்.

சுவாமி பெயர்-சிவலோகத்தியாகர். தேவியார்-கங்கையுமை நாயகி. தீர்த்தம்-பஞ்சாக்ஷர தீர்த்தம்.

இது சிதம்பரத்திற்குத் தெற்கே ஆணிக்காரன் சத்திரம் என்னும் அணைக்கரைச் சத்திரத்திலிருந்து கொள்ளிடக் கரையோரஞ் சென்றால் 2 மைல் (சுமார் 3 கி. மீ.) நல்ல பாதை.

ஞானசம்பந்தர் பதிகமுடையது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய புராணமுடையது. இது பொழுது ஆச்சாபுரம் என வழங்கப்படுகிறது.

Koviloor Digital Library

6. திருமயேந்திரப்பள்ளி (கோயிலடிப்பாளையம்)

எலி செய்த புண்ணியத்தால் மாவலியாகப் பிறக்க அருள் செய்த தலம்.

சுவாமி பெயர்-திரு மேனியழகர். தேவியார் - முல்லை நகை வடிவம்மை. தீபம்-மந்திர புஷ்கரணி,

இது ஆணிக்காரன் சத்திரத்திலிறங்கி ஆச்சரபுரஞ் சென்று 4 மைல் (சுமார் 6 கி. மீ.) போகவேண்டும்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது. கடற்கரையோரத்தில் இருக்கிறது.

7. (தென்) திருமுல்லைவாயில்

இந்திரன் பூசித்த தலம். சுவாமி பெயர்-முல்லைவன நாதர். தேவியார்-கோதையம்மை. தீர்த்தம்-சக்கர தீர்த்தம்.

சீர்காழிக்குக் கிழக்கே 8 மைல் (சுமார் 14 கி. மீ) தூரத்தி லிருக்கிறது. இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரின் ஐந்தாவது . புத்திரன் வடுகநாத தேசிகர் செய்த புராண முடையது.

8. திருக்காலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)

பராசருஷி பூசித்த தலம். சுவாமி பெயர்-சுந்தரேசுரர். தேவியார் - அழகுவனமுலையம்மை. தீர்த்தம் - அம்புவி தீர்த்தம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

9. திருச்சாய்க்காடு (சாயாவனம்)

உபமன்னிய ருஷி பூசித்த தலம். இயற்பகை நாயனார் முக்தி பெற்ற தலம். சீர்காழிக்குத் தென்கிழக்கில் 9 மைல் (சுமார் 14½ கி. மீ.) தூரத்தில் உள்ளது. வழியில் எட்டாவது மைலில் (சுமார் 13 கி. மீ.) திருவெண்காடு.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகமுடையது.

10. திருப்பல்லவனீச்சரம் (காவிரிப்பூம்பட்டினம்)

பல்லவர் பூசித்த தலம். பட்டினத்தடிகள் திருஅவதாரம் செய்த தலம். சீர்காழிக்குத் தென்கிழக்கே 10 மைல் (சுமார் 17 கி. மீ.) தூரத்தில் உள்ளது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

11. திருவெண்காடு (சுவேதாரண்யம்)

வெள்ளை யானை பூசித்த தலம். சீர்காழிக்குத் தென் கிழக்கில் எட்டு மைலில் (சுமார் 13 கி. மீ.) இருக்கிறது.

சுவாமி பெயர்-சுவேதாரண்யேசுரர். தேவியார்-பிரம்ம வித்யாநாயகி. தீர்த்தம்-முக்குதீளத்தீர்த்தம், விருக்ஷம்-வடவால்.

ஞானசம்பந்தர் 3, நாவுக்கரசர் 2, சுந்தரர் 1 பதிகங்களை யுடையது. சைவஎல்லப்ப நாவலர் பாடிய புராணமுடையது.

12. திருக்காட்டுப்பள்ளி (கீழை)

இந்திரன் பூசித்த தலம். சுவாமி பெயர்-ஆரண்யசுந்தரர். தேவியார்-அகிலாண்ட நாயகி. தீர்த்தம்-அமிர்த பொய்கை.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

சீர்காழிக்குத் தென்கிழக்கில் எட்டு மைல்(சுமார் 13கி.மீ)

13. திருக்குருகாவூர் (திருமேனி வெள்ளடை)

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கட்டமுது தந்தருளிய தலம்.

ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

14. சீர்காழி

பிரம விஷ்ணு, இந்திரன் பூசித்த தலம். பிரமபுரம் அடியிலும், தோணிபுரம் இடையிலும், சட்டைநாதம் அதன்

Koviloor Digital Library

மேலும் ஆன தலம். திருஞான சம்பந்த சுவாமிகள் அவதரித்த தலம். திருவாதவூரர் பிடித்தப் பத்து பாடிய தலம். கணநாத நாயனார் முத்தியடைந்த தலம்.

சுவாமி பெயர்-பிரமபுரேசர். தேவியார்-திருமலை நாயகி. தீர்த்தம்-சக்கர தீர்த்தம்.

ஞானசம்பந்தர் ?, நாவுக்கரசர் 3, சுந்தரர் 1 பதிகங்களையுடையது. அருணாசலக் கவிராயர் பாடிய புராணமுடையது. வித்வான் தியாகராஜ தேசிகர் பாடிய அந்தாதியும், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய கோவையுமுடையது.

15. திருக்கோலக்கா

அகஸ்தியர், கண்ணுவர் பூசித்த தலம். திருஞான சம்பந்த சுவாமிகளுக்குத் திருத்தாளம் அளித்த தலம்.

சுவாமி பெயர்-சப்தபுரேசுரர். தேவியார்-ஓசை கொடுத்த நாயகி. தீர்த்தம்-அனந்த தீர்த்தம்.

இது சீர்காழிக்கு மேற்கே கால் கடிகையி லிருக்கிறது.

16. திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீச்சுரன் கோயில்)

சடாயுத சம்பாதிகளால் பூசிக்கப் பெற்ற தலம். சுவாமி பெயர்-வைத்ய நாதர். தேவியார்-தையல் நாயகி. தீர்த்தம்-சிற்றர்மிர்தம். விருக்ஷம்-வேம்பு.

ஞானசம்பந்தர்6, நாவுக்கரசர் 2 பதிகங்களையுடையது. புராணமுடையது. குமரகுருபரர் பாடிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழும், படிக்காசுப் புலவர் பாடிய புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகமுமுடையது

17. திருக்கண்ணார்க்கோயில் (குருமாணக்குடி)

இந்திரன் பூசித்த தலம். சுவாமி பெயர் - கண்ணாயிரேச்சுரர், தேவியார்-முருகுவளர் கோதையம்மை. தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

Koviloor Digital Library

18. திருக்கடைமுடி (கீழூர்)

பிரமன் பூசித்த தலம். சுவாமி பெயர்-கடைமுடிநாதர். தேவியார்-அபிராமவல்லி. தீர்த்தம்—கடைமுடி.

மாயூரத்தை அடுத்த ஆனதாண்டவபுரம் ரயில்வே நிலையத்திலிருந்து 6 மைலில் (சுமார் 8½ கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

19. திருநின்றியூர்

திருமகள் பூசித்த தலம். சுவாமி பெயர்-மகாலட்சுமீசுவரர். தேவியார்-உலகநாயகி. தீர்த்தம் நீலமலர்ப் பொய்கை.

பூசல் நாயனார் திரு அவதாரத் தலம். மாயூரத்தை அடுத்த ஆனதாண்டவபுரம் ரயில் நிலையத்திலிருந்து தென் மேற்கே 1 மைல் (சுமார் 1¾ கி. மீ.) நீடூர் ரயில் நிலையம் இதற்கு மேற்கே.

20. திருப்புன்கூர்

திருநாளைப் போவார்க்கு நந்தி விலகிக் கொள்ள அவர் சுவாமியைத் தரிசித்தருளிய தலம். ஏயர்கோன் கலிக்காமர் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர் - சிவலோக நாதர். தேவியார்-சொக்க நாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

ஞானசம்பந்தர் 1, நாவுக்கரசர் 1, சுந்தரர் 1 பதிகங்களையுடையது. புராணமுடையது.

வைத்தீசுரன் கோயில் ரயில் நிலையத்திற்கு மேற்கே 2 மைல் (சுமார் 2½ கி. மீ.)

21. திருநீடூர்

இந்திரன் பூசித்த தலம். முனையடுவார் நாயனார் முத்தி பெற்ற தலம்.

Koviloor Digital Library

சுவாமியின் பெயர்-அருட்சோம நாதர். தேவியார்-வேயுறு தோளியம்மை. தீர்த்தம்-செங்கழு நீரோடை.

சுந்தரர் பதிகமுடையது. புராணமுடையது. ஆனந்தத் தாண்டவபுரம் ரயில் நிலையத்திலிருந்து தென் மேற்கே 1 மைல் (சுமார் 1½ கி. மீ.) நீடூர் ரயில் நிலையம் 2 கடிகையில்.

22. திருஅன்னியூர்

வருணன் பூசித்த தலம். சுவாமி-பெயர் ஆபத்சகாயர். தேவியார்- பெரிய நாயகி . தீர்த்தம்-வருண தீர்த்தம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

23. திருவேள்விக்குடி

ஓர் ராசபுத்திரன் விவாக முடிக்கச் சிவபெருமான் புரோகிதஞ் செய்த தலம்.

சுவாமி பெயர்-கல்யாண சுந்தரர், தேவியார்-பரிமள சுகந்த நாயகி. தீர்த்தம்-மங்கள தீர்த்தம்.

ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகமுடையது.

இது குத்தாலம் ரயில் நிலையத்திற்கு மேற்கே ஒரு கட்டை தொலைவில் காவேரிக்கு வடகரையிலிருக்கிறது.

24. திருஎதிர்கொள்பாடி

வேள்விக்குடியில் திருமணம் முடித்த அரசகுமாரனை மாதுலனைப் போல் எதிர்கொண்ட தலம். ஐராவதம் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-ஐராவதேச்சுரர். தேவியார்-மலர்க்குழன் மாதம்மை. தீர்த்தம்-ஐராவத தீர்த்தம். சுந்தரர் பதிக முடையது. குத்தாலம் ரயில் நிலையத்திற்கு ஒன்றரை கட்டை தொலைவிலிருக்கிறது.

Koviloor Digital Library

25. திருமணஞ்சேரி

கருப்பிணிகளாகிய நங்கை, நாத்திகள் இருவர் தமக்குப் பிறக்கும் சிசுக்களை யொருவருக்கொருவர் மணப்பதென்றும் சபதம் செய்தனர். அவர்களுள் ஒருத்தி ஆமை வடிவுற்ற குமரனைப் பெற்றதால் பெண் பெற்றவள் தர மறுக்க, அந்த ஆமை பூசித்துப் புருஷவுருக் கொண்டு பெண்ணினை மணந்த தலம். குலச்சிறை நாயனார் வழிபட்ட தலம்.

சுவாமி பெயர் - அருள் வள்ளுவ நாயகர். தேவியார்- யாழின்மொழியம்மை. மாயூரத்தை யடுத்த குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 4½ மைலில் (சுமார் 7 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

26. திருக்குறுக்கை வீரட்டானம் (குறுக்கை)

மன்மதனை யெரித்த தலம். மார்க்கண்டர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வீரட்டானேச்சுரர். தேவியார்-ஞானாம்பிகை. தீர்த்தம்-சிவகங்கை.

ஆனதாண்டவபுரம் ரயில் நிலையத்திலிருந்து எட்டு மைல் (சுமார் 13 கி. மீ.)

நாவுக்கரசர் பதிகங்கள் 2 உடையது. புராணமுமிருக்கிறது.

27. திருக்கருப்பறியலூர் (மேலைக் காழி-தலைஞாயிறு)

சிவபெருமான் மீது வச்சிரமெறித்த இந்திரனது குற்றம் பொறுத்த தலம்.

சுவாமி பெயர்-குற்றம் பொறுத்த நாதர். தேவியார் - கோல்வளை நாயகி. தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்களையுடையது. புராணமிருக்கிறது.

Koviloor Digital Library

வைத்தீசுரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 5 மைலில் (சுமார் 8 கி. மீ.) இருக்கிறது.

28. திருகுரக்குக்கா

அநுமான் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-மாணிக்கவண்ணர். தேவியார்-வண்டார் பூங்குழலி. தீர்த்தம்-பிரம தீர்த்தம். விருக்ஷம்-வாகை.

வைத்தீச்சுரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து ஏழு மைல் (சுமார் 11 கி. மீ.) தொலைவில் இருக்கிறது.

ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்களையுடையது. புராண முடையது.

இப்பொழுது திருவாளபபுத்தூர் என வழங்குகிறது.

29. திருப்பழமண்ணிப்படிக்கரை

சிவபெருமான் விஷபானஞ் செய்த காலத்துப் பிராட்டியார் கண்டத்தைத் திருக்கரத்தால் பரிசித்த தலம்.

சுவாமி பெயர்-நீலகண்டேசுவரர். தேவியார்-அமிர்தகர வல்லி. தீர்த்தம்-அமிர்த தீர்த்தம்.

சுந்தரர் பதிகமுடையது.

வைத்தீச்சுரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 9 மைல் (சுமார் 14½ கி. மீ.)

30. திருஓமாம்புலியூர்

புலியால் துரத்தப்பட்ட வேடன் வில்வமரத்திலிருந்து சிவபெருமானைப் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-துயர் தீர்த்த செல்வர். தேவியார்-பூங் கொடியம்பிகை. தீர்த்தம்-சிவதீர்த்தம்.

சிதம்பரத்திலிருந்து 19 மைலில் (சுமார் 31 கி. மீ.) இருக்கிறது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

கொள்ளிடத்திற்கு வடகரையிலிருக்கிறது.

31. திருக்கானாட்டு முள்ளூர்

பதஞ்சலி முனிவர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - பதஞ்சலிநாதர். தேவியார் - கோல் வளைக்கையம்மை. தீர்த்தம்-சிவபுஷ்கரணி.

இதற்கும் சிதம்பரத்திலிருந்துதான் செல்லவேண்டும்.

இதுபொழுது கானட்டாம் புலியூர் என வழங்குகிறது.

32. திருநாரையூர்

துருவாசரது தவத்திற்கு இடையூறியற்றிய காந்தருவன் நாரையாகப் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சௌந்தரேசர். தேவியார்-திரிபுர சுந்தரி. தீர்த்தம்-காருண்ய தீர்த்தம்.

நம்பியாண்டார் நம்பிக்கருளிய பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் ஊர். சிதம்பரம் ரயில் நிலையத்தி லிருந்து 10 மைல் (சுமார் 17 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

33. திருக்கடம்பூர் (மேலக் கடம்பூர்)

அமுதங்கடைகையில் அமுதகடம் எழ இந்திரன் பூசித்த தலம்.

சுவாமி பெயர் — அமிர்தகடேசர். தேவியார்-கோதிமின் னம்மை. தீர்த்தம்—அமுத தீர்த்தம்.

34. திருப்பந்தணைநல்லூர்

விச்வாமித்திரரிடம் மாறு கொண்ட காமதேனு பூசித்த தலம்.

சுவாமி பெயர்-பசுபதீச்சுரர். தேவியார்-காம்பனதோளி. தீர்த்தம்-பசு தீர்த்தம்.

Koviloor Digital Library

திருவிடை மருதூரிலிருந்து 7½ மைல் (சுமார் 12 கி. மீ.), குத்தாலத்திலிருந்து சுமார் 17 கி. மீ.

இதுபொழுது பந்தநல்லூர் என வழங்குவது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

35. திருக்கஞ்சனூர்

பிரமன், மார்க்கண்டர், இந்திரன் பூசித்த தலம். மானக் கஞ்சாற நாயனார் முத்தி பெற்றதும் ஸ்ரீமத் அச்சுத்தாசாரிய சுவாமிகள் பல அற்புதங்கள் காட்டியதுமாகிய தலம்.

சுவாமி பெயர்–அக்னீசுரர். தேவியார் - கற்பக நாயகி. தீர்த்தம்–அக்னி தீர்த்தம்.

ரயில் நிலையம் திருவிடை மருதூரிலிருந்து வடகிழக்கே 5½ மைல் (சுமார் 9 கி. மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது. புராணமுண்டு.

36. திருக்கோடிக்கா

மூன்று கோடி ரிஷிகள் பூசித்த தலம். ஐயடிகள் காடவர் கோன் க்ஷேத்ர வெண்பா பாடிய தலம்.

சுவாமி பெயர்-கோடிகாவீசுரர். தேவியார் - வடிவாம்பிகை. தீர்த்தம்-அகத்திய தீர்த்தம்.

நரசிங்கன் பேட்டையிலிருந்து கிழக்கே ஒன்றரை மைல் (சுமார் 2½ கி. மீ.)

நாவுக்கரசர் 3 பதிகங்களையுடையது.

37. திருமங்கலக்குடி

அரசன் பொருளைத் திருப்பணி செய்து செலவிட்டஞ்சி யிறந்து மனைவி இத்தலத்து மங்கள நாயகியருளால் உயிர்ப் பிக்க உயிர் பெற்று வணங்கிய தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-பிராணவரதர். தேவியார்-மங்களநாயகி. தீர்த்தம்-மங்கள தீர்த்தம்.

திருவிடைமருதூரிலிருந்து வடகிழக்கே 3¾ மைல் (சுமார் 5¾ கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

38. திருபனந்தாள்

தாடகையெனும் அம்மையார் மாலை சாத்துங்கால் உடை நெகிழச் சிவபெருமான் திருமுடி வளைத்துத் தந்த தலம். குங்கிலியக்கலய நாயனார் சிவபெருமானை நிமிர்த்தி யருளிய தலம்.

சுவாமி பெயர்-சடையப்பேசுரர். தேவியார்-பெரியநாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

கும்பகோணத்திற்கு வடகிழக்கே 10 மைல். (சுமார் 17 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது. புராணமிருக்கிறது. அச்சேறவில்லை.

39. திருஆய்ப்பாடி

இடையன் பாலைத் தினந்தோறும் கவிழ்த்து ஒருநாள் கொடுவாளால் வெட்டி இரத்தங்கண்டு பாலுகந்த நாதரோ வென்று வேண்டிய தலம்.

சுவாமி பெயர்-பாலுகந்தஈசர். தேவியார்-பெரியநாயகி. தீர்த்தம்-பால் தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து 11 மைல் (சுமார் 18½ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

40. திருவாளொளிபுத்தூர்

திருமால் மாணிக்கம் வைத்துப் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-மாலிக்கவண்ணர். தேவியார்— வண்டார் பூங்குழலி. தீர்த்தம்-பிரம்ம தீர்த்தம். விருட்சம்-வாகை.

வைத்தீசுவரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே ஏழு மைல்.

ஞானசம்பந்தர் 2, சுந்தரர் 1 பதிகமுடையது. புராண முடையது.

இப்பொழுது திருவாளப்புத்தூர் என வழங்குகிறது.

41. திருச்சேஞ்ஞலூர்

குமாரக் கடவுள் பூசித்து ஆயுதம் பெற்ற தலம். சண்டேசர் பூசித்துச் சண்டேச பதம் பெற்ற தலம்.

சுவாமி பெயர் - சத்தகிரியீசுரர். தேவியார்-சகிதேவியம்மை. தீர்த்தம்—மண்ணி நதி.

கும்பகோணத்திலிருந்து 12 மைல் (சுமார் 20 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

42. திருந்துதேவன்குடி

குதிரை பூசித்து முத்தி பெற்ற தலம். நண்டு பூசித்துப் பேறு பெற்ற தலம். இக்காலத்தும் ஒரு நிறப் பசுவின் பால் பதின்கலம் சிவபெருமான் திருமுடியில் அபிஷேகிக்கின் பொன்னிறத்த நண்டு தரிசனந் தருந்தலம்.

சுவாமி பெயர்-கற்கடேசுரர். தேவியார்-அருமருந்தம்மை. தீர்த்தம்-அசுவ தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து 5 மைல் (சுமார் 8 கி. மீ.)

43. திருவியலூர்

அரசனுக்கஞ்சி இறந்த அடியவரை உயிர்ப்பித்த தலம்.

சுவாமி பெயர்-யோகாநந்தர். தேவியார்-சௌந்தர நாயகி. தீர்த்தம்-நிருதி தீர்த்தம்.

Koviloor Digital Library

கும்பகோணத்திற்கு கிழக்கே 4 மைலில் (சுமார் 6 கி. மீ.) உள்ளது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

44. திருக்கொட்டையூர் (கொட்டையூர்)

மார்க்கண்டர் முதலியவர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கோடீச்சுரர். தேவியார்-பந்தாடு நாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

கும்பகோணத்திற்கு மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.).

நாவுக்கரசர் பதிகமுடையது. சிவக்கொழுந்து தேசிகர் பாடிய கொட்டையூர்ப் புராணமும், கோடீசுரக் கோவையும் இருக்கிறது.

45. திருஇன்னம்பர்

ஒரு கணக்கர் பொருட்டுச் சிவபெருமான் கணக்கராய்க் கணக்குக் கூறிய தலம். அகத்தியருக்கு இலக்கணம் உபதேசித்தருளிய தலம்.

சுவாமி பெயர்-எழுத்தறிவித்த நாதர். தேவியார்-கொத்தார் பூங்குழலம்மை. தீர்த்தம்-சிவபுஷ்கரணி.

ரயில்நிலையம். கும்பகோணத்திற்கு மேற்கே 4 மைல் [சுமார் 6 கி. மீ]

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

46. திருப்புறம்பயம்

சுந்தோபசுந்தர் பூசித்த தலம். வணிகக்கன்னியர் குறித்த நாயகன் பாம்பு கடித்திறக்க அவனை உயிர்ப்பித்த தலம்.

சுவாமி பெயர்-சாக்ஷிநாதேச்சுரர். தேவியார்-கரும்பன்ன சொல்லம்மை. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

கும்பகோணத்திற்கு வடமேற்கே 6 மைல் (சுமார் 9¾ கி. மீ.) தொலைவில் இருக்கிறது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது. புராணமுடையது.

47. திருவிஜயமங்கை

பாண்டு புத்திரனாகிய விஜயன் பாசுபதம் பெறப் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-விஜயநாதேசுரர். தேவியார்-மங்கைநாயகி. தீர்த்தம்—அர்ச்சுன தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து 8 மைல் (சுமார் 13 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்கள் உடையது.

48 திருவைகாவூர்

திருமகள் பூசித்த தலம். வில்வவன க்ஷேத்ரம்.

சுவாமி பெயர்-வில்வவன நாதர். தேவியார்-பூவல்லி. தீர்த்தம்—கூற்றுவ தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து 9¼ மைல். (சுமார் 15 கி. மீ.)

49. திருவடகுரங்காடுதுறை

வாலி பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கலைவணங்கீசர். தேவியார்-அழகு சடை நாயகி. தீர்த்தம்-வாலி தீர்த்தம்.

அய்யம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து 4 மைல். (சுமார் 6 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

50. திருப்பழனம்

திக்குப்பாலகர் பூசித்த தலம். அப்பூதியடிகள் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-ஆபத்சகாயர். தேவியார்—பெரியநாயகி, தீர்த்தம்-மங்கள தீர்த்தம்.

Koviloor Digital Library

அய்யம்பேட்டையிலிருந்து 10 மைல். (சுமார் 17 கி. மீ.)

ஞானசம்பந்தர் 1, நாவுக்கரசர் 4 பதிகங்களையுடையது.

51. திருவையாறு

தருமதேவதை பூசித்து நந்திதேவராய்ச் சிவமூர்த்தியைத் தாங்கும் அழியாப்பதம் பெற்ற தலம். திருநாவுக்கரசுகளுக்கு திருக்கைலாய தரிசனந் தந்தருளிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்த வெள்ளத்தை அணையாக நிற்கச் செய்து வழியளித்த தலம். பஞ்ச நதி க்ஷேத்ரம்.

தஞ்சாவூருக்கு வடக்கே 7 மைலில் (சுமார் 11 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் 5, நாவுக்கரசர் 12, சுந்தரர் 1 பதிகங்களையுடையது. ஞானக்கூத்தர் பாடிய பஞ்ச நதிப் புராணமும். தருமையாதீன முனிவர் ஒருவர் பாடிய ஐயாற்றுப் புராணமும், பதிற்றுப்பத்தந்தாதியும் உடையது.

52. திருநெய்த்தானம் (தில்லைத்தானம்)

சரஸ்வதி பூசித்த தலம். சுவாமி பெயர்-நெய்யாடியப்பர். தேவியார்-வாலாம்பிகை. தீர்த்தம்-காவிரி.

தஞ்சாவூரிலிருந்து எட்டு மைலில் (சுமார் 13 கி. மீ.) இருக்கிறது.

ஞானசம்பந்தர் 1, நாவுக்கரசர் 5 பதிகங்களையுடையது.

53. திருப்பெரும்புலியூர்

வியாக்ரபாத ருஷி பூசித்த தலம்.

சுவாமி பெயர் - வியாக்ரரேசர். தேவியார் – சௌந்தர நாயகி. தீர்த்தம்-வியாக்ர தீர்த்தம்.

தஞ்சாவூர் தில்லைஸ்தானத்துக்கு வடக்கில் ஒரு கட்டை தொலைவிலிருக்கிறது.

54. திருமழபாடி

இந்திரன் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர் - வச்சிரநாதேசுரர். தேவியார் - அழகாம்பிகை. தீர்த்தம்-கொள்ளிடம்.

ரயில் நிலையம்-தஞ்சாவூர்.

திருவையாற்றுக்கு வடமேற்கு ஐந்து கட்டையளவில் கொள்ளிடத்துக்கு வடகரையில் இருக்கிறது. புராணமிருக்கிறது.

55. திருப்பழவூர் (பழுவூர்)

சிவபெருமான் கயாசுரனாகிய யானையுரித்த திருத்தலம்.

சுவாமி பெயர்-மரஉரிநாதர். தேவியார்-வனமுலையம்மை. தீர்த்தம்—சிவகங்கை.

தஞ்சாவூரிலிருந்து வடக்கு அரியலூர் செல்லும் சாலையிலுள்ளது. அரியலூருக்குத் தெற்கே 4 கட்டை தொலைவிலிருக்கிறது.

56. திருக்கானூர்

யோகத்திலிருந்த பிராட்டியாருக்குச் சிவபெருமான் அக்னி ஸ்வரூபமாய்த் தரிசனம் கொடுத்தருளிய தலம்.

சுவாமி பெயர்-செம்மேனி நாயகர். தேவியார்-சிவயோக நாயகி. தீர்த்தம்-வேத தீர்த்தம்.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகங்களையுடையது.

பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 7 மைல் (சுமார் 11 கி. மீ.) தொலைவில் உள்ளது.

57. திருஅன்பிலாலந்துறை (அன்பில்)

விதி, விஷ்ணு, இந்திரன், வாகீசர் பூசித்தது.

சுவாமி பெயர் - சத்யவாக்கேசுரர். தேவியார்-சௌந்தர நாயகி. தீர்த்தம்-காயத்திரி தீர்த்தம்.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகங்களையுடையது. பூதலூரிலிருந்து 12 மைல் (சுமார் 20 கி. மீ.)

58 திருமாந்துறை

கண்ணுவர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-ஆம்பிரவனேச்சுரர். தேவியார் - அழகா லுயர்ந்த நாயகி. தீர்த்தம்-மகா தீர்த்தம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து 13 மைல். (சுமார் 21$\frac{1}{2}$ கி மீ.)

59. திருப்பாற்றுரை

அபிஷேகிக்கப்பால் கிடையாது வருந்திய மார்க்கண்ட ருக்குப் பால் பெருகி வர அனுக்ரஹித்த தலம்.

சுவாமி பெயர்-திருமூலநாதேச்சுரர். தேவியார்-மேகலாம் பிகை. தீர்த்தம்-கொள்ளிடம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து 7$\frac{1}{2}$ மைல் (சுமார் 11 கி. மீ.)

60. திருஆனைக்கா (ஜம்புகேச்சுரம்)

இது பஞ்சபூதத் தலங்களுள் அற்புதத்தலம். அகிலாண்ட நாயகியார் ஞானோபதேசம் பெற்றதலம். கௌதமர், சிலந்தி, யானை, சம்பு முனிவர் இவர்கள் பூசித்துப் பேறு பெற்ற தலம். கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்த தலம். உறையூர்ச் சோழன் மனைவியின் கழுத்திலிருந்து காவிரியில் வீழ்ந்த ஆரத்தைத் திருமுடியிலணிந்த தலம். சிவபெருமான் சித்தராய்த் திருநீறு தந்து திருமதில் செய்வித்துத் திருநீற்று மதில் இயற்றியருளிய தலம்.

சுவாமி பெயர்-சம்புகேசுவரர். தேவியார்-அகிலாண்ட ஈச்வரி. தீர்த்தம்-காவிரி. விருட்சம்-சம்பு, நாவல்.

ஞானசம்பந்தர் 3, நாவுக்கரசர் 3, சுந்தரர் 1 பதிகங்க களை யுடையது. ஞானப்பிரகாசர் பாடிய இபவன புராண மும், கச்சியப்ப முனிவர் பாடிய திருஆனைக்கா புராணமும், காளமேகம் பாடிய திருஆனைக்கா உலாவுமுடையது.

Koviloor Digital Library

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே $2\frac{1}{2}$ மைலில் (சுமார் 4 கி.மீ.) தொலைவில் இருக்கிறது.

61. திருப்பைஞ்ஞிலி

யமனை யுதைத்த பாரந்தீரப் பூமிதேவியும் தேவர்களும் வேண்டச் சிவபெருமான் யமனை யெழுப்பிய தலம். தேவர்களும் அரம்பையரும் வாழை மரங்களாய்ச் சிவபூஜை செய்த தலம்.

இக்காலத்தும் பாறையில் வாழை வளரும் தலம்.

சுவாமி பெயர்-மாற்றறிவரதர். தேவியார்-வாலசௌந்தரி. தீர்த்தம்-சிவகங்கை.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்ளையுடையது. புராணமிருக்கிறது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே 12 மைல் (சுமார் 20 கி. மீ.)

62. திருப்பாச்சிலாச்சிரமம் (திருவாசி)

திருஞான சம்பந்த சுவாமிகள் கொல்லியழவன் குமரிக் குற்ற முயலகவலி தொலைத்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமி களுக்குப் பொன்தர நீட்டித்துப் பின் தந்த தலம். முயலக நோய் தீரப் பாடியபடியால் ஈண்டு நடராஜப் பெருமானுக்கு முயலகனில்லை. மோக்ஷமடைந்தான் என்பது ஐதிகம் பாடல் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-ஆரண்ய விடங்கர். தேவியார்-விசாலாக்ஷி. தீர்த்தம்-ஆரண்ய தீர்த்தம்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே 6 மைல் (சுமார் $9\frac{1}{2}$ கி. மீ.)

63. திருஈங்கோய்மலை

அகத்திய முனிவர் பூசிக்கக் காலம் வாய்க்காமல் ஈ உருக் கொண்டு பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-மரகதாசலேசர். தேவியார்-மரகதவல்லி. தீர்த்தம்-அகஸ்திய தீர்த்தம்.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கிலுள்ள குழித்தலை ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே கடம்பர் கோயிலிலுள்ள காவிரி கடந்தால் அக்கரையிலிருக்கிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

நக்கீர தேவ நாயனார் பாடிய திருஈங்கோய்மலை எழுபது உடையது.

திருவிங்கநாத மாலை என வழங்குகிறது.

மேற்படி ஈங்கோய் மலைக்குத் தெற்கு ஏழு கடிகையில் திருவாட்போக்கி.

காவிரியின் தென்கரை 128

1. திருவாட்போக்கி (இரத்தினகிரி, மாணிக்கமலை)

ஆர்ய அரசன் ஒருவன் மாணிக்க விருப்பாற் தலங்கள் பலவற்றினுஞ் சென்று கிடைக்காத, இங்குற்றுப் பிரார்த்திக்க சிவபெருமான் தோன்றி ஒரு தொட்டியைக் காட்டி இதனை நீரால் நிறைக்கின் உனதெண்ணம் முடியுமெனக் கேட்டு அவ்வாறு செய்கையில் நீர் நிறையாமல் கோபங்கொண்டு வாளை யெடுத்தோங்க அவ்வாளைப் போக்கி இரத்தினங்காட்ட அரசன் மகிழ்ந்து திருப்பணி செய்த தலம்.

சுவாமி பெயர்-இரத்தினகிரீசர். தேவியார்-கரும்பார் குழலம்மை. தீர்த்தம்-கௌரி தீர்த்தம்.

நாவுக்கரசர் பதிகமுடையது. இலக்கண விளக்கம் செய்த திருவாரூர் வைத்தியநாத தேசிகர் செய்த புராணமும், வாட்போக்கியுலாவும், கலம்பகமும் உடையது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து ஈரோடு செல்லும் பாதையிலுள்ள குழித்தலை ரயிலடிக்குத் தென்மேற்கு 5 கட்டை தொலைவு.

Koviloor Digital Library

2. திருக்கடம்பந்துறை (கடம்பர் கோயில், குழித்தலை)

சிவபெருமான் ஒரு காலத்து தேவர்க்கும் கண்வர் முதலிய ரிஷிகளுக்கும் கடம்ப விருக்ஷத் தடியில் தரிசனம் தந்த தலம்.

சுவாமி பெயர்-கடம்பவனநாதர். தேவியார்-முற்றிலா முலையம்மை. தீர்த்தம்-ஞான தீர்த்தம்.

இத்தலம் வடக்கு வாயிலுற்றது.

நாவுக்கரசர் பதிகமுடையது. புராணமுடையது.

குழித்தலை ரயில் நிலையம் இதற்குக் கிழக்கு ஏழரை கடிகையில்.

3. திருப்பராய்த்துறை

இந்திரன், குபேரன், சப்தருஷிகள், பூசித்த தலம். சுவாமி பெயர்-பராய்த்துறை நாதர். தேவியார்-பொன்மயி லாம்பிகை. தீர்த்தம்-காவிரி.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகமுடையது.

திருச்சியை யடுத்த எழுமனூரிலிருந்து வடமேற்கே 1½ மைல் (சுமார் 2½ கி. மீ.) தொலைவில் இருக்கிறது.

இது இப்பொழுது திருப்பாளத்துறை என வழங்கும்.

4. திருக்கற்குடிமலை

உச்சிப் போதிற் பூசித்து வணங்கிய ஈழ நாட்டரசனுக்கு முத்தி கொடுத்த தலம்.

சுவாமி பெயர்-முத்தீசுரர். தேவியார்-அஞ்சனாக்ஷி. தீர்த்தம்-முத்தி தீர்த்தம்.

இதற்கு உய்யக் கொண்டான் திருமலை என்று பெயர். திரிசிரபுரத்திற்குத் தென்மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ)

5. திருமுக்கீச்சுரம் (உறையூர்)

பிரமன் பூசிக்க ஐவண்ணமாகத் தரிசனம் தந்த தலம். புகழ்ச்சோழ நாயனார் திருவவதாரஞ் செய்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-பஞ்சவர்ண நாதேச்சுரர். தேவியார்-காந்திமதியம்மை. தீர்த்தம்-குடமுருட்டி நதி.

திரிசிராப்பள்ளிக்கு மேற்கே 1 மைல் (சுமார் 1½ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

6. திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ ராமன், அநுமான், திரிசிரன் பூசித்த தலம். சாரமா முனிவர் பாதாளத்திலிருந்து கொணர்ந்து பதித்துச் சுவாமிக் குபயோகித்திருந்த செவ்வந்தி மலரை அரசனுக்களித்த பூவாணிகன் செயலை அரசனிடம் முறையிட்டுங்கேளாத அரசன் பொருட்டு மண்மாரிப் பெய்வித்து, அரசையழித்த தலம்.

கர்ப்பிணியாகிய ஒரு பெண்ணின் பொருட்டுத் தாயுருவோடு வந்து மருத்துவம் பார்த்த தலம்.

சுவாமி பெயர் - செவ்வந்தீசர். மாதுர்பூதேசர். தேவியார்-மட்டுவார்குழலி. தீர்த்தம்—காவிரி.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகங்களுடையது.

7. திருஎறும்பியூர்

கர தூஷணரும் எறும்பும் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - எறும்பீச்சுரர். தேவியார் - நறுங்குழல் நாயகி. தீர்த்தம்—அற்புத தீர்த்தம்.

இதுவே இதுபொழுது திருவரம்பூர் என வழங்கும் ரயில் நிலையம்.

நாவுக்கரசரின் 2 பதிகங்கள் உடையது.

8. திருநெடுங்களம்

வங்கிய சோழன் பொருட்டுப் பேரழகுடன் தரிசனம் தந்த தலம்.

சுவாமி பெயர்-நித்யசுந்தரேச்சுரர். தேவியார் - ஒப்பிலா நாயகி. தீர்த்தம்-சுந்தர தீர்த்தம்.

Koviloor Digital Library

திருவரம்பூர் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 7 மைல் (சுமார் 11 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி

சாரமாமுனிவர் வேண்டுகோளால் பெய்த மண்மாரிக்குத் தப்பிய சிவபக்தியிற் சிறந்த அவன் மூத்த மனைவி இத்தலமடைந்து வெப்பத்தால் தீயாடியப்பரோ வென்னக் குளிர்ந்திருந்த தலம்.

சுவாமி பெயர்-தீயாடியப்பர். தேவியார்-வார்கொண்ட முலையம்மை தீர்த்தம்-அக்னி தீர்த்தம்.

தஞ்சையை யடுத்த பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 5 மைல் (சுமார் 8 கி. மீ.)

ஞானசம்பந்தரின் பதிகங்கள் 2 உடையது.

10. திருவாலம்பொழில்

நாகரும் அட்டவசுக்களும் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - ஆத்மநாதேச்சுரர். தேவியார்-ஞானாம்பிகை. தீர்த்தம்-காவிரி.

தஞ்சையிலிருந்து மேற்கே 9 மைல் (சுமார் 14, கி மீ.) கண்டியூர். அங்கிருந்து மேற்கு 4 கட்டை. நாவுக்கரசரின் பதிகமுடையது.

11. திருப்பூந்துருத்தி

காந்தருவர் புட்பவனம் வைத்துப் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-புட்பவனநாதேச்சுரர். தேவியார்-அழகாலமர்ந்த நாயகி. தீர்த்தம்-காவிரி.

தஞ்சை கண்டியூரிலிருந்து மேற்கு 2 கட்டை.

நாவுக்கரசரின் 3 பதிகங்களையுடையது.

Koviloor Digital Library

12. திருக்கண்டியூர்

இது அட்டவிரட்டத்துள் ஒன்று. பிரமன் சிரத்தைச் சிவ பெருமான் அவனது அகந்தை தீர வைரவரைக் கொண்டு போக்கியருளிய தலம்.

சுவாமி பெயர் - வீரட்டானேச்சுரர். தேவியார்-மங்கை நாயகி. தீர்த்தம் காவிரி.

தஞ்சையிலிருந்து வடக்கே 6 மைலில் (சுமார் $9\frac{1}{2}$ கி. மீ.)

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகங்களையுடையது.

13. திருச்சோற்றுத்துறை

அருளாளன் என்னும் வேதியன் பொருட்டு மாளாச் சோறு அளித்த தலம். இந்திரன் பூசித்தது.

சுவாமி பெயர் - தொலையச் செல்வேசர். தேவியார் - ஒப்பிலாம்பிகையம்மை. தீர்த்தம்-சூர்ய தீர்த்தம்.

தஞ்சை கண்டியூரிலிருந்து 4 மைல். (சுமார் $6\frac{1}{2}$ கி. மீ.) இது பொழுது திருச்சித்துறை என வழங்கும்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களை யுடையது.

14. திருவேதிகுடி

வேதங்கள், குபேரன், சைதன்ய மகருஷி பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வேதபுரீசுரர். தேவியார்-மங்கையர்க்கரசி. தீர்த்தம்-சுந்தர தீர்த்தம்.

தஞ்சை கண்டியூரிலிருந்து தென்கிழக்கே 2 கட்டை தூரத்தில் உள்ளது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

15. திருத்தென்குடி (திட்டை)

காமதேனு, கௌதமர், ஆதிசேடன் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - பசுபதீச்சுரர். தேவியார் - உலகநாயகி யம்மை. தீர்த்தம்-பசுதீர்த்தம்.

Koviloor Digital Library

இது தஞ்சாவூர்க்கு வடக்கிலுள்ள ரயில் நிலையம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

16. திருபுன்னமங்கை

ஆலகால விஷம் புசித்த சிவமூர்த்தியைத் தேவர் வழிபட்ட தலம்.

சுவாமி பெயர்-ஆலந்தரித்த நாதர். தேவியார்-அல்லியங்கோதை. தீர்த்தம்-சிவ தீர்த்தம்.

தஞ்சையை யடுத்த அய்யம்பேட்டையிலிருந்து அரை மைல் (சுமார் ¾ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

17. திருச்சக்கரப்பள்ளி

சயந்தனும் தேவர்களும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-பசுபதிநாதர். தேவியார் - பால்வளை நாயகி. தீர்த்தம்-காவேரி.

அய்யம்பேட்டையிலிருந்து அரைமைல் (சுமார் ¾ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

18. திருக்கருகாவூர் (திருக்களாவூர்)

சந்திரன், இராசிகள் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - முல்லைவனேச்சுரர். தேவியார்-கரும்பனையாலம்மை. தீர்த்தம்-அற்புத தீர்த்தம்.

அய்யம்பேட்டையிலிருந்து 4 மைல் (சுமார் 6¼ கி. மீ.)

19. திருப்பாலைத்துறை

பிரமன் தேவர்கள் பூசித்த தலம். தாருகவனத்து இருடிகள் அனுப்பிய புலியை யுரித்துப் போர்த்தருளிய தலம்.

சுவாமி பெயர்-பாலைவன நாதேச்சுரர். தேவியார்-தவள வெண்ணகையம்மை. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

Koviloor Digital Library

கும்பகோணத்தை யடுத்த பாபநாசம் ரயில் நிலையத்தி லிருந்து வடகிழக்கே 1 மைல் (சுமார் 1½ கி. மீ.)

நாவுக்கரசர் பதிகம் பெற்ற தலம்.

20. திருநல்லூர்

வசுதேவர், கிருஷ்ணன், பாண்டவர்கள் பூசித்த தலம். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவடி சூட்டிய தலம். அமர் நீதி நாயனார் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-பெரியாண்டவேச்சுரர். தேவியார்-திரிபுர சுந்தரியம்மை. தீர்த்தம்-சுந்தர தீர்த்தம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது. வைத்தியநாத தேசிகர் பாடிய புராணமுண்டு.

கும்பகோணத்தை யடுத்த சுந்தரப் பெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

21. திருஆவூர் (பசுபதீச்சுரம்)

இந்திரன் சப்த ரிஷிகள், பசுக்கள் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-பசுபதீச்சுரர். தேவியார்-மங்கள நாயகி. தீர்த்தம்-பசு தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 8½ மைல் (சுமார் 13¾ கி. மீ.)

22. திருச்சத்திமுற்றம்

பிராட்டி பூசித்துப் பேறு பெற்ற தலம்.

சுவாமி பெயர்-சிவக்கொழுந்தீச்சுரர். தேவியார்-பெரிய நாயகி. தீர்த்தம்-சத்தி தீர்த்தம்.

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4 மைல் (சுமார் 6 கி. மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது.

23. திருப்பட்டீச்சுரம்

ஆனிரைகளைக் காத்தவர். திருஞானசம்பந்த சுவாமி களுக்கு முத்துப் பந்தரருளிய தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-பட்டீச்சுரர். தேவியார்-பால்வளை நாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4 மைல் (சுமார் 6 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

24. திருப்பழையாறை (வடதளி)

சந்திரன் பூசித்துத் தேய்தல் நீங்கிய தலம்.

சுவாமி பெயர்-சோமேசர். தேவியார்-சோமகலா நாயகி. தீர்த்தம்-சந்திரபுஷ்கரணி.

இங்கு இரண்டுத் தலங்களிருக்கின்றன.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்கள் உடையது.

25. திருவலஞ்சுழி

இந்திரன் பொருட்டு வந்த காவிரி ஈண்டுச் சுழியில் ஆழ, இந்திரன் வேண்டுகோளால் வரகண்ட முனிவர் அதில் ஆழ, அது பாதாளஞ் செல்லாது பிரவிகித்தது. இத்தலத்து இந்திரனாற் பூசிக்கப்பட்ட கணபதி அவன் மீண்டு எடுக்கவராமல் அழுந்தியிருக்கின்றனர்.

சுவாமி பெயர்-சித்தீசர். தேவியார்-நித்திய நாயகி. தீர்த்தம்-காவேரி.

சுவாமிமலை ரோடு கிழக்கே 4 கடிகையில்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களையுடையது.

26. திருக்குடந்தைக்காரோணம்

உமை பூசித்துத் திருமணம் பெற்ற தலம். கங்கை முதலிய தீர்த்தங்களெல்லாம் ஈண்டுள்ள ஏமபுட்கரணியில் 12 வருடங்களுக்கொருமுறை வந்து கூடும் மாமகத்தன்று வந்து மூழ்கித்தாம் பெற்ற பாபத்தைப் போக்கிக் கொள்ளும் தலம்.

சந்திரன், மாந்தாதா, சத்தியகீர்த்தி முதலியவர் பூசித்தது.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-சோமநாதர். தேவியார்-தேனார் மொழியம்மை. தீர்த்தம்-சந்திரபுட்கரணி.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

27. திருக்குடமூக்கு (கும்பகோணம்)

ஏமருஷி, ஆதிசேடன் முதலியோர் பூசித்த தலம். பிரமதேவர் தமது சிருட்டிக்குக் காரணமான மாயா சம்பந்தமான குடமொன்றை மகாமேருவில் தாபித்தனர். அது பிரமப் பிரளயத்தால் இந்த க்ஷேத்ரத்தின் மேல்பால் தங்கியது. பிரளயம் முடிந்த பின் சிவபெருமான் வேட வடிவம் கொண்டு அதனைச் சோதிக்க அதனின்று உலகம் உண்டாயிற்று. இதில் அமுத முண்டாய் எங்கும் பரவியது.

அவ்வமுதத்தைத் திரட்டிச் சிவலிங்கமாகித் தாமே பூசித்தனர். இக்காரணத்தால் சுவாமிக்குக் கும்பேசுவரர் என்று பெயர். ஏமருஷி தம் தாயின் எலும்பைப் பல தீர்த்தங்களிலிட, அவை எலும்பாகவே இருக்க, அதனை இத்தலத்து ஏமபுட்கரணியிலிட பொற்றாமரையாக இருந்ததால் தீர்த்தத்திற்கு ஏமபுஷ்கரணி என்று பெயர்.

சுவாமி பெயர்-கும்பேசுவரர். தேவியார்-மங்களநாயகி. தீர்த்தம்-ஏமபுஷ்கரணி.

மூவர் பதிகங்ளையுடையது.

28. திருக்குடந்தை கீழ்க்கோட்டம் (கும்பகோணம்)

விஸ்வகர்மனால் ஒளியிழக்கப் பெற்ற சூரியன் பூசித்து ஒளிபெற்ற தலம்.

சுவாமி பெயர்-மடந்தைபாகேசுவரர். தேவியார்-குன்றைமுலைநாயகி- தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

மூவர் பதிகங்களுடையது.

29. திருவிடைமருதூர் (மத்யார்ச்சுனம்)

சிவபெருமான் தம் அசைவே உலகத்தியக்கம் என்பதைத் தாமே உலகமென வெண்ணியிருந்த பிராட்டிக்குக் காட்டும்

Koviloor Digital Library

வகை ஒரு கணம் அசைவற்றிருந்து உயிர்கள் இயங்காமை காட்டி உருத்திரர்களால் உலகு சிருட்டியைச் செய்வித்துப் பின் விதிவிஷ்ணுக்களைப் படைத்த தலம். எல்லாத் தேவர் களும் வழிபட்ட தலம். வரகுண தேவரது கொலைப்பழிப் போக்கிய தலம்.

சுவாமி பெயர்-மருதப்பர். தேவியார்-நன்முலைநாயகி. தீர்த்தம்-காவிரி. விருக்ஷம்-மருத விருக்ஷம்.

30. திருத்தென்குரங்காடுதுறை

மிருகண்ட ருஷி, சுக்ரீவன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-ஆபத்சகாயர். தேவியார்-பவளக்கொடி யம்மை. தீர்த்தம்-ஆபத்சகாய தீர்த்தம்.

ரயில் நிலையம்—ஆடுதுறை.

ஆடுதுறையிலிருந்து தெற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.) நாவுக்கரசர் பதிகமுடையது.

31. திருநீலக்குடி (தென்னங்குடி)

வருணனும் தெய்வகன்னியரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-நல்ல நாயகர். தேவியார்-அழகாம்பிகை- தீர்த்தம்-வன்னீலம்.

நாவுக்கரசர் பதிகமுடையது.

32. திருவைகன் மாடக் கோயில்

சூரியனும் தேவர்களும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வைகனாதேச்சுரர். தேவியார்-கொம் பிளங்கோதை. தீர்த்தம்-சூர்ய தீர்த்தம்.

வைகல் வேறு, மாடக் கோயில் வேறு.

ஆடுதுறையிலிருந்து 4 மைல் (சுமார் 6 கி. மீ.)

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகங்களை யுடையது.

Koviloor Digital Library

33. திருநல்லம் (கோனேரிராசபுரம்)

உமையும் தேவர்களும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-உமாமகேசுவரர். தேவியார்-மங்கள நாயகி. தீர்த்தம்-சத்தி தீர்த்தம்.

ஆடுதுறையிலிருந்து வடக்கே 6 கட்டை.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பதிகங்கள் உடையது.

34. திருகோழம்பம்

இந்திரனாற் குயிலாகச் சாபமேற்ற சாதனென்னும் கந்தருவன் பூசித்துச் சாப நீக்கம் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-கோகிலேசுரர். தேவியார்-சௌந்தர நாயகி. தீர்த்தம்-கோகில தீர்த்தம்.

நரசிங்கம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து 4 மைல் (சுமார் 6½ கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

35. திருவாவடுதுறை

இந்திரனும், பல ருஷிகளும் பூசித்த தலம். திருமூல நாயனார் முத்தி பெற்ற தலம். திருக்கைலாய பரம்பரை நமச்சிவாய மூர்த்திகளின் சந்ததியார் மடாலயங் கொண்டெழுந்தருளியிருந்த தலம்.

சுவாமி பெயர்-மாசிலாமணியீசர், செம்பொற்றியாகேசர். தீர்த்தம்-சிவகங்கை. விருக்ஷம்-அரசு.

சமயாசாரியர் மூவர்களாலும் பதிகம் பெற்றுள்ளது.

நரசிங்கம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ)

36. திருத்துருத்தி (குற்றாலம்)

சத்தியம் தவறிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேகத்திற் கண்ட பிணி நீங்கின தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-வேதேச்வரர். தேவியார்-அமிர்தமுகிழாம்பிகை. தீர்த்தம்-சுந்தர தீர்த்தம். குற்றால விருக்ஷம்.

ரயில் நிலையம்—குற்றாலம்.

மூவர் பதிகங்கள் உடையது.

37. திருவழுந்தூர்

வேதம், திக்குப் பாலகர், தேவர்கள் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வேதபுரீசர். தேவியார்-சௌந்தராம்பிகை. தீர்த்தம்-வேத தீர்த்தம்.

குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

38. திருமயிலாடுதுறை (மாயூரம்)

உமாதேவியார் மயிலாகப் பூசிக்கச் சிவபெருமான் ஆண் மயிலாக நடஞ்செய்து மறைந்தருள, இறைவனை யெண்ணிப் பிரிவாற்றாது பூசித்து முத்தி அடைந்த தலம். விதி விஷ்ணுக்கள், இந்திரன், முதலிய திக்குப்பாலகர், பல ருஷிகள், இலக்ஷ்மியாதியர், யானை, குதிரை, கழுதை, குரங்கு, நரி, பூனை, கழுகு, கிளி, பாம்பு முதலியன பூசித்து முக்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-மயூரநாதர். தேவியார் - அஞ்சநாயகி. தீர்த்தம்-காவிரி, இடப தீர்த்தம்

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்கள் உடையது.

39. திருவிளநகர்

பூஜைக்குத் திருத்தாமம் கொண்டு ஆற்றிலிறங்கிய அருள்வித்தினை வெள்ளமீர்த்துச் செல்லவும் திருப்பூக் கூடையை விடாத உறுதி யெண்ணி அவனைக் கரையேற்றி ஞானமுபதேசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-துறைகாட்டும் வள்ளல். தேவியார்-காம் பன்னி தோளியம்மை. தீர்த்தம்-மெய்ஞ்ஞான தீர்த்தம்.

மாயூரத்திற்கு 4½ மைல் (சுமார் 7 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

40. திருப்பறியலூர்

தக்கன் தலையறுப்பித்து ஆட்டுத்தலையருளிய தலம். (அட்டவீரட்டத்தொன்று)

சுவாமி பெயர்-வீரட்டானேசுரர். தேவியார்-இளம்கொம் பன்னை. தீர்த்தம்—சந்திரபுஷ்கரணி.

மாயூரத்திலிருந்து வடக்கே 7 மைல் (சுமார் 11 கி. மீ.)
ஞானசம்பந்தர் பதிகமுடையது.

41. திருச்செம்பொன்பள்ளி

இந்திரன், குபேரன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சுவர்ணபுரேசர். தேவியார்-சுகந்தவன நாயகி. தீர்த்தம்-வீரபத்திரத் தீர்த்தம்.

மாயூரத்திலிருந்து 7 மைல் (சுமார் 11 கி. மீ.)
ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்கள் உடையது.

42. திருநனிபள்ளி (புஞ்சை)

அஷ்டவசுக்கள் முதலியோர் பூசித்த தலம். திருஞானசம் பந்த சுவாமிகளின் தாய் பிறப்பிடம்.

சுவாமி பெயர் - நற்றுணையப்பர். தேவியார்-பர்வதராஜ புத்ரி. தீர்த்தம்-சுவர்ண தீர்த்தம்.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்கள் உடையது.

43. திருவலம்புரம் (பெரும்பள்ளம்)

திருமால் பூசித்துச் சங்கு பெற்ற தலம். சங்குகன்னன் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-வலம்புரிநாதர். தேவியார் - வடுவகிற் கண்ணம்மை. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

சமயாசாரியார் மூவர் பதிகம் பெற்ற தலம்.

சீர்காழியிலிருந்து 9 மைல் (சுமார் 15 கி.மீ.)

44. திருத்தலைச்சங்காடு

விஷ்ணு, திக்குப்பாலகர், திக்கஜங்கள் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சங்கராண்யேசுரர். தேவியார்-சௌந்தர நாயகி. தீர்த்தம்-காவிரி. தலவிருக்ஷம்—வில்வ விருக்ஷம்.

சீர்காழியிலிருந்து 10 மைல் (சுமார் 17 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

45. திருஆக்கூர் (தான்தோன்றி மாடம்)

இந்திரன் முதலியோர் பூசித்த தலம். சிறப்புலி நாயனார் முத்தி பெற்ற தலம்.

ஆக்கூர் ரயில் நிலையம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்கள் உடையது.

46. திருக்கடவூர் வீரட்டானம் (திருக்கடவூர்)

அட்டவீரட்டத்தொன்று. மார்க்கண்ட முனிவர் பொருட்டு, யமனை உதைத்த தலம். காரிநாயனார், குங்கிலயக் கலய நாயனார் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-வீரட்டானேச்சுரர், சடேசுரர். தேவியார்-அபிராமியம்மை. தீர்த்தம்-அமுத தீர்த்தம். விருக்ஷம்-வில்வ விருக்ஷம்.

ரயில் நிலையம்—திருக்கடவூர்.

மூவர் பதிகங்களை யுடையது.

47. திருக்கடவூர் மயானம்

ஒரு கற்பந்தில் பிரமதேவரை யெரித்து நீறாக்கியணிந்து மீண்டும் அவரைச் சிருட்டித்துச் சிருட்டி செய்வித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர் - பிரமபுரீசுரர். தேவியார்—தயாளமலர்க் குழன்மின்னம்மை. தீர்த்தம் - பிரம தீர்த்தம்.

மூவர் பதிகங்களையுடையது.

48. திருவேட்டகுடி

தவஞ் செய்த அருச்சுனன் பொருட்டுச் சிவபெருமான் வேடுருக்கொண்டு வேட்டஞ்செய்து அநுக்ரகித்த தலம்.

சுவாமி பெயர் - திருமேனியழகர். தேவியார்-சுகந்தவன நாயகி. தீர்த்தம்-அமுகு தீர்த்தம்.

காரைக்கால் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 6 மைல் (சுமார் $9\frac{3}{5}$ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகங்களையுடையது.

49. திருத்தெளிச்சேரி

பார்வதி தேவியார் தம் பெயர் சுவாமிக்கடங்கத் தவஞ் செய்து அவ்வரம் பெற்ற தலம். அருச்சுனனிடம் போரிட்டு வில்லடியுண்ட தலம். திருஞானசம்பந்த சுவாமிகளின் திருச் சின்னத்தைத் தடுத்த புத்தர் தலைவனாகிய சாரிபுத்ரன் தலையில் இடி விழுந்த தலம்.

சுவாமி பெயர்-பார்வதீச்சுரர். தேவியார் - சத்யாம்யாள். தீர்த்தம்-பார்வதி தீர்த்தம். விருக்ஷம்-வன்னி.

காரைக்கால் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 1 மைல் (சுமார் $1\frac{1}{2}$ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

50. திருத்தருமபுரம்

தருமராசன், பிரமன், அரம்பையர் பூசித்த தலம்.

திருஞானசம்பந்தர் யாழ்முரி பாடிய தலம்.

சுவாமி பெயர்-யாழ்முரி நாதேச்சுரர். தேவியார்-சதாமதுராம்பிகை. தீர்த்தம்-கதலி தீர்த்தம், கலி தீர்த்தம்.

காரைக்கால் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

51. திருநள்ளாறு

நளன் கலிநீங்கப் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-தர்ப்பாரண்யேச்வரர். தேவியார்-போக மார்த்த பூண்முலையம்மை. தீர்த்தம்-சிவகங்கை. சப்த விடங்கத் தலத்திலொன்று. நகரவிடங்கர். உன்மத்த நடனம்.

திருநள்ளார் ரயில் நிலையம் உள்ளது.

ஞானசம்பந்தர் 6, நாவுக்கரசர் 2, சுந்தரர் 4 பதிகங்கள் உடையது.

52. திருக்கோட்டாறு

ஐராவதம் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-ஐராவதேச்வரர். தேவியார்-வண்டமர் பூங்குழலம்மை. தீர்த்தம்-ஐராவத தீர்த்தம்.

திருநள்ளாறு ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

ஞாசைம்பந்தர் பதிகமுடையது.

53. திருவம்பர்-பெருத்திக்கோயில்

பிரமன் பூசித்த தலம். சோமாசிமாற நாயனார் முத்தி யடைந்த தலம்.

சுவாமி பெயர்-பிரம்மபுரநாதர். தேவியார்-பவளவண் ணப் பூங்குழலம்மை. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து மூன்று மைல் (சுமார் 5 கி. மீ.) இதுபோது மாகாளம் என வழங்குகிறது.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

54. திருவம்பர்மாகாளம்

மாகாளர் பூசித்து அஜமுகியைக் கைகுறைத்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர் - காளகண்டேச்வரர். தேவியார்-பச்சை நாயகியம்மை. தீர்த்தம்-மாகாள தீர்த்தம்.

இவ்வூர் இதுபோது அம்பல் என வழங்கும்.

ரயில் நிலையம்—மாகாளம்.

55. திருமீயச்சூர்

வருணன் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-திருமுயற்சிநாதேச்வரர். சேவியார்-சௌந்தரநாயகி. தீர்த்தம்-அற்புத தீர்த்தம்.

பேரளத்திலிருந்து மேற்கே 1 மைல் (சுமார் 1¾ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

56. திருமீயச்சூரிளங்கோயில்

பிரமன், சரஸ்வதி பூசித்த தலம்

சுவாமி பெயர்-சகலபுவனேச்வரர். தேவியார்-மேகலாம்பாளம்மை. தீர்த்தம்-சரஸ்வதி தீர்த்தம்.

ரயில் நிலையம்-பேரளம்.

நாவுக்கரசர் பதிகமுடையது.

57. திருந்திலதைப்பதி

தசரதற்கு இராம இலட்சுமணர்கள் திலதர்ப்பணஞ் செய்த தலம்.

சுவாமி பெயர்-மதிமுத்தநாதேச்வரர். தேவியார்-பொற்கொடியம்மை. தீர்த்தம்-சோம தீர்த்தம்.

பேரளம் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கு 4 மைல் (சுமார் 6½ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

58. திருப்பாம்புரம்

ஆதிசேடன் முதலிய நாகர் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர் - பாம்புபுரேசர். தேவியார் — வண்டமர் பூழல்நாயகி. தீர்த்தம்-ஆதிசேட தீர்த்தம்.

59. திருச்சிறுகுடி

செவ்வாயும், கருடன் முதலியோரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-மங்கலேச்வரர். தேவியார்-மங்களநாயகி. தீர்த்தம்-மங்கள தீர்த்தம்.

பேரளத்திலிருந்து மேற்கே 4 மைல் (சுமார் 6 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

60. திருவீழிமழலை

திருமால் சக்கரம் பெற வேண்டிக் கண்ணை மலராக அருச்சித்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும், திருநாவுக்கரசுகளுக்கும் பொற்காசருளிய தலம்.

சுவாமி பெயர்-வீழியழகர். தேவியார்-சுந்தரகுசாம்பிகை. தீர்த்தம்-அரி தீர்த்தம். விண்ணிழி விமானக் கோயில்.

பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 6 மைல். (சுமார் 9½ கி. மீ.)

ஞானசம்பந்தர் 10, நாவுக்கரசர் 8, சுந்தரர் 1 பதிகங்கள் உடையது.

61. திருவன்னியூர்

அக்கினி பூசித்து வீரபத்திரரின் சாபத்தைப் போக்கிக் கொண்ட தலம்

சுவாமி பெயர் - அக்கினீச்வரர். தேவியார் - பார்வதியம்மை. தீர்த்தம்—அக்கினி தீர்த்தம்.

மாயூரத்தையடுத்த ஆனந்தத் தாண்டவபுரத்திலிருந்து மேற்கே 4 மைல் (சுமார் 6¾ கி. மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது.

Koviloor Digital Library

62. திருக்கருவிலி

சற்குணனென்னுமரசன் பூசித்து முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-சற்குணேச்வரர். தேவியார் - சர்வாங்க நாயகி. தீர்த்தம்-சற்குண தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து 12 மைல் (சுமார் 20 கி மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது.

63. திருப்பேணுபெருந்துறை

சிவசத்தி, பிரமன் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சிவாநந்தேச்வரர். தேவியார்-மலையரசி. தீர்த்தம்-ஆநந்த தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து ஏழு மைல் (சுமார் 11 கி.மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

64. திருநறையூர்ச்சித்தீச்சுரம்

குபேரனும், தேவகாந்தருவரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சௌந்தரேச்வரர். தேவியார்-அழகாம்பிகை. தீர்த்தம்-தேன்சித்தி தீர்த்தம்.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5½ மைல் (சுமார் 9 கி.மீ.)

ஞானசம்பந்தர் 3, சுந்தரர் 1 பதிகங்கள் உடையது.

65. அரசிற்கரைபுத்தூர் (அழகர்புத்தூர்)

உன்மையாநந்த இருடி பூசித்த தலம். புகழ்த்துணை நாயனாருக்குப் படிக்காசளித்த தலம்.

சுவாமி பெயர்-படிக்காசளித்த ஈசுரர். தேவியர்-அழகாம்பிகை. தீர்த்தம்-அரிசில் நதி.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 4½ மைல் (சுமார் 7½ கி.மீ.)

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் 1, நாவுக்கரசர் 1, சுந்தரர் 1 பதிகங்களையுடையது.

66. திருச்சிவபுரம்

பிரமன் பூசித்த தலம்:

சுவாமி பெயர்-பிரமபுரி நாயகர். தேவியார்-பெரியநாயகி. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 1 மைல் (சுமார் 1¾ கி. மீ.)

ஞானசம்பந்தர் 3, நாவுக்கரசர் 4 பதிகங்களையுடையது.

67. திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை)

தேவர்கள் அமிர்த கலசம் பெற்ற களிப்பாற் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-அமிர்தகலையீசுரர். தேவியார்-அமிர்தவல்லியம்மை. தீர்த்தம்-அரிசில் நதி. அரிசொல்லியபடி வந்த நதி.

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 1 மைல் (சுமார் 1½ கி. மீ.)

சுந்தரர் பதிகமுடையது.

68. திருக்கருக்குடி

விச்வாமித்திரர், மார்க்கண்டர் முதலிய இருடிகளும் சற்குணன் முதலிய அரசரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சற்குணலிங்கர். தேவியார் - சர்வாலாங்கிருதமின்னம்மை. தீர்த்தம்-சற்குண தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து 4 மைல் (சுமார் 6 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

69. திருவாஞ்சியம்

நாக கன்னிகை யொருத்தி மிக வாஞ்சையோடு இறைவனைத் தழுவச் சாயுஜ்யமடைந்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-வாஞ்சலிங்கேச்வரர். தேவியார்-வாழ வந்த நாயகி. தீர்த்தம்-சுகவாஞ்ச தீர்த்தம்.

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து 6¼ மைல் (சுமார் 10 கி. மீ.)

ஞானசம்பந்தர் 4, நாவுக்கரசர் 1, சுந்தரர் 1 பதிகங்களையுடையது.

70 திருநன்னிலத்துப்பெருங்கோயில்

சூரியன் ஒளி பெறப் பூசித்த தலம்

சுவாமி பெயர்-பிரகாசேச்வரர். தேவியார்-பிரகாசேச்வரி. தீர்த்தம்-சூரியகாந்த தீர்த்தம்.

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

71. திருந்தொண்டீச்சுரம்

காமதேனு பூசித்துப் பல பொருள் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-பசுபதீச்சுரர். தேவியார்-சாந்த நாயகி. தீர்த்தம்-பசு தீர்த்தம்.

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

72. திருப்பனையூர்

முசுகுந்த சக்கரவர்த்தியும், திருமகளும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சௌந்தரேச்வரர். தேவியார்-பெரிய நாயகி. தீர்த்தம்-மகாலக்ஷ்மி தீர்த்தம்.

திருவாரூரிலிருந்து தெற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

73. திருவிற்குடி

அட்ட விரட்டத்தொன்று. சலந்தாசுரனை வதைத்த தலம்.

சுவாமி பெயர்-வீரட்டானேசுவரர். தேவியார்-மைவார்

Koviloor Digital Library

குழலியம்மை. தீர்த்தம்-சர்க்கரைத் தீர்த்தம்.

விற்குடி ரயில் நிலையத்திலிருந்து 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

74. திருப்புகலூர்

அக்னி பூசித்த தலம். திருநாவுக்கரசர் முத்தி பெற்ற தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் செங்கற்கள் பொன்னாயின தலம்

சுவாமி பெயர்-அக்னீபுரீச்சுவரர். தேவியார்-கொந்தார் குழலியம்மை. தீர்த்தம்-அக்னி தீர்த்தம்.

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 4 மைல் (சுமார் 6 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களையுடையது.

75. திரிப்புகலூர் வர்த்தமானீச்சுரம்

மேகங்கள் பூசித்த தலம். முருகநாயனார் திருவவதாரம் செய்தருளிய தலம்.

சுவாமி பெயர் - வர்த்தமானேச்வரர். தேவியார்-கருந்தார் குழலியம்மை.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

76. திருஇராமனந்தீச்சுரம்

இராமர், மிருகண்டு ரிஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-இராமநாதேச்சுரர். தேவியார் - கருவார் குழலியம்மை. தீர்த்தம்-இராம தீர்த்தம்.

நன்னிடம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 5 மைல் (சுமார் 8 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

77. திருப்பயற்றூர் (திருபயற்றங்குடி)

பயிரவர் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-திருப்பயிற்றீசர். தேவியார் – காவியங் கண்ணி. தீர்த்தம்-கருணை தீர்த்தம்.

திருவாரூரை யடுத்த விற்குடி ரயில் நிலையத்திலிருந்து 7 மைல் (சுமார் 11 கி. மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது.

78. திருச்செங்காட்டங்குடி கணபதீச்சுரம்

கயமுகாசுரனைக் கொன்ற கணபதி பூசித்த தலம். கய முகாசுரன் உதிரம் பெருகிய காடாதலால் செங்காடெனப் பெயர். சிறுத்தொண்ட நாயனார் திருப்பணி செய்த தலம்.

சுவாமி பெயர்–கணபதீச்சுரர். தேவியார் - திருக்குழல் நாயகி. தீர்த்தம்-கணபதி தீர்த்தம்.

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 6 மைல் (சுமார் 9 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

79. திருமருகல்

மார்க்கண்ட ரிஷி பூசித்த தலம். வணிகனைத் திருஞான சம்பந்த சுவாமிகள் உயிர் பெறப் பாடி யுயிர்ப்பித்த தலம்.

சுவாமி பெயர்-மாணிக்கவண்ணர். தேவியார்-வண்டு வார் குழலியம்மை. தீர்த்தம்-மாணிக்க தீர்த்தம்.

நன்னிலத்திலிருந்து 8 மைல் (சுமார் 13 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

80. திருச்சாத்தமங்கை அயவந்தி

அஷ்டவக்ர ருஷி பூசித்த தலம். திருநீல நக்கர் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-அயவந்தீசுவரர். தேவியார்-இருமலர்க் கண்ணியம்மை. தீர்த்தம்-அற்புத சிவகங்கை.

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து 8 மைல் (சுமார் 13 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

Koviloor Digital Library

81. திருநாகைக்காரோணம்

புண்டரீக மகாருஷியைக் காயத்தோடு திருவுருவிற் சேர்த் தருளிய தலம். சுந்தரர்க்கு வேண்டியவை யருளிய தலம். அதிபத்தநாயனார் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-காயரோகணேச்சுரர். தேவியார்-நீலாய தாக்ஷி அம்மை. தீர்த்தம்-சர்வ தீர்த்தம்.

இது சப்தவிடங்கத் தலத்துளொன்று.

நாகபட்டினம் ரயில் நிலையம்.

மூவர் பதிகங்களைப் பெற்ற தலம்.

82. திருச்சிக்கல்

கிருஷ்ணமூர்த்தி வெண்ணெய் திருடியுண்ட பாவம் நீங்க பூசித்த தலம். வசிட்டர் காமதேனுவின் வெண்ணெயால் பூசித்து எடுக்க வராமல் சிக்கிய தலம்.

சுவாமி பெயர்-நவநீதநாதேச்வரர். தேவியார்-வேனெ டுங்கண்ணியம்மை. தீர்த்தம்-நவநீத தீர்த்தம்.

சிக்கல் ரயில் நிலையம். நாகப்பட்டினத்திற்கு மேற்கே 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

83. திருக்கீழவேளூர்

அக்ஷய தேவர் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-அக்ஷயலிங்கேசுரர். தேவியார்-வனமுலை நாயகியம்மை. தீர்த்தம்-அக்ஷய தீர்த்தம்.

சிக்கலையடுத்த மேலண்டை ரயில் நிலையம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

84. திருத்தேவூர்

தேவகுரு பூசித்த தலம்.

சுவாமி பெயர்-தேவகுருநாதர். தேவியார்-மதுரபாஷிணி யம்மை. தீர்த்தம் - பிரகஸ்பதி தீர்த்தம். விருக்ஷம்-வாழை.

Koviloor Digital Library

கீழ்வேளூர் ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

85. திருப்பள்ளியின்முக்கூடல்

மூர்க்க ருஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-முக்கோணேசுரர். தேவியார்-மைம்மேவு கண்ணியம்மை. தீர்த்தம்-முக்கூடல் தீர்த்தம்.

திருவாரூருக்கு வடகிழக்கே 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது.

86. திருவாரூர்மூலட்டானம்

திருமால், இந்திரன், முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலியோர் பூசித்துப் பேறடைந்த தலம். நமிநந்தி யடிகள் சமணர் பொருட்டு நீரால் விளக்கெரித்த தலம். பரவையார் திருவவதாரத் தலம். விறன்மிண்ட நாயனார் திருப்பணி செய்த தலம். தண்டியடிக நாயனார் திருக்குளப்பணி செய்து சமணர்கள் கண்ணிழக்கத் தாம் கண் பெற்ற தலம். கழற்சிங்க நாயனாரும் செருத்துணை நாயனாரும் முத்தி பெற்ற தலம். மனுநீதி கண்ட சோழ மகாராஜனைப் பசுவாகச் சென்று சோதித்த தலம். இது சத்தவிடங்கத் தலத்துள் முதன்மை பெற்றது.

சுவாமி பெயர்-புற்றிடங் கொண்டார். தேவியார்-கோதையம்மை. தீர்த்தம்-கமலாலய முதலிய பல தீர்த்தங்கள். விருக்ஷம்-பாதிரி.

ஞானசம்பந்தர் 5, நாவுக்கரசர் 21, சுந்தரர் 8 பதிகங்களை யுடையது.

87. திருவாரூர்அரநெறி

இக்கோயிலினுள்ளே இருப்பது. அசித ருஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - அகிலேசுரர். தேவியார் - அல்லியங் கோதையம்மை. தீர்த்தம்-அற்புதக்கூவம்.

Koviloor Digital Library

88. திருவாரூர்ப் பரவையுண் மண்டளி

வருணன் விட்ட கடலை வற்றச் செய்த தலம். வருணன் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - பரவையுண் மண்டளீசுரர். தேவியார்- பஞ்சின் மெல்லடியம்மை. தீர்த்தம்-வருண புட்கரணி.

சுந்தரர் கண் பெற்ற தலம். கோயிலுக்குக் கீழ வீதிக்குள் இருக்கிறது.

சுந்தரர் பதிகமுடையது.

89. திருவிளமர்

பதஞ்சலி முதலியோர் பூசித்த தலம். விடங்கத்தலத் தொன்று.

சுவாமி பெயர்-பதஞ்சலிமனோகரர். தேவியார் - யாழினு மென்மொழியம்மை. தீர்த்தம்-முத்தி தீர்த்தம்.

திருவாரூருக்குத் தென்மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

90. திருக்காவீரம் (கரையபுரம்)

கௌதமர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - கரவீரேசுரர். தேவியார் - பிரத்யக்ஷ மின்னம்மை. தீர்த்தம்-அநவரத தீர்த்தம்.

திருவாரூருக்கு மேற்கே 4 மைல். (சுமார் $6\frac{1}{2}$ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

91. திருப்பெருவேளூர் (காட்டூர் ஐயன்பேட்டை)

சத்தி பூசித்த தலம்.

சுவாமி பெயர்-பிரியாத நாயகர்-தேவியார் - மின்னனை யாளயம்மை. தீர்த்தம்-சத்தி தீர்த்தம்.

திருவாரூரிலிருந்து மேற்கே 5 மைல் (சுமார் 8 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

Koviloor Digital Library

92. திருந்தலையாலங்காடு

கபில ருஷி பூசித்த தலம். முயலகனை முதுகிற நடித்த தலம்.

சுவாமி பெயர் - ஆடவல்லேவேச்சுரர் - தேவியார்-திரு மடந்தை. தீர்த்தம்-சுவர்ண தீர்த்தம்.

திருவாருருக்கு மேற்கே 8 மைல் (சுமார் 13 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

93. திருக்குடவாயில்

திரண பிந்து முனிவர்க்குக்குடத்திற் தோன்றித் தரிசனந் தந்தருளிய தலம்.

சுவாமி பெயர் – கோணேச்சுவரர். தேவியார் - பெரிய நாயகி. தீர்த்தம்-திருக்குடத் தீர்த்தம்.

கொரடாச்சேரி ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 8 மைல் (சுமார் 13 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

94. திருச்சேறை (உடையார் கோயில்)

தௌமிய ருஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - செந்நெறியப்பர். தேவியார் - ஞான வல்லியம்மை. தீர்த்தம்-மனோகர தீர்த்தம்.

கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கே 9 மைல். (சுமார் 15 கி. மீ.)

நாவுக்காசர் 3 பதிகங்கள் உடையது.

95. திருநாவலூர் மயானம்

நாரதர், ஆபத்தம்ப ருஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - பல்லவனேசுரர். தேவியார் - பெரியாம் பிகை. தீர்த்தம்-பலாவடி தீர்த்தம்.

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கே 10 மைல் (சுமார் 17 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

Koviloor Digital Library

96. திருக்கடுவாய்க்கரைப் புத்தூர்

காசிப ருஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சுவர்ணபுரேசர். தேவியார்-சிவாம்பிகை. திர்த்தம்-சுவர்ண தீர்த்தம்.

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து தென் மேற்கே 11 மைல். (சுமார் $18\frac{1}{2}$ கி. மீ.)

நாவுக்கரசர் பதிகமுடையது.

97. திருஇரும்பூளை (ஆலங்குடி)

விச்வாமித்திர ருஷி முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - காசியாரண்யேச்சுரர். தேவியார் - ஏலவார் குழலியம்மை. தீர்த்தம்-காசி தீர்த்தம்.

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 4 மைல். (சுமார் $6\frac{1}{2}$ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

98. திருநாகேச்சுரம்

இந்திரன் பூசித்த தலம். சேக்கிழார் வழிபட்ட தலம்.

சுவாமி பெயர்-செண்பகாரண்யரேச்சுவரர். தேவியார்-குன்றைமுலை நாயகி. தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

மூவர் பதிகங்களுடையது.

திருநாகேச்சுரம் ரயில் நிலையம். கும்பகோணத்திற்கு அருகில்.

99. திருவாதைப் பெரும்பாழி (அரித்வாரமங்கலம்)

வராக உருக் கொண்ட விஷ்ணு மூர்த்தியின் கோட்டை மூறித்த தலம்.

சுவாமி பெயர்-பாதாளேச்சுரர் தேவியார் - அலங்கார நாயகி-தீர்த்தம்-பாதாள தீர்த்தம்.

தஞ்சை சாலியமங்கலத்திலிருந்து வடகிழக்கே 8 மைல் (சுமார் 13 கி. மீ)

ஞானசம்பந்தர் பதிக முடையது.

Koviloor Digital Library

100. திருஅவளிவணல்லூர்

வராக மூர்த்தி பூசித்து அருள் பெற்ற தலம். சுவாமி பெயர்-காட்சி நாயகேசுரர். தேவியார் - சௌந்தரநாயகி. தீர்த்தம்-பிரசன்ன தீர்த்தம்.

சாலியமங்கலத்திலிருந்து வடகிழக்கே 6½ மைல் (சுமார் 10½ கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

101. திருப்பருதி நியமம் (பருத்தியப்பர் கோயில்)

சூரியன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-பரிதியார். தேவியார்-மங்கல நாயகியம்மை. தீர்த்தம்-பாஸ்கர தீர்த்தம்.

சாலியமங்கலத்திலிருந்து தென்மேற்கே 8 மைல். (சுமார் 13 கி. மீ)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

102. திருவெண்ணியூர்

தத்தாத்திரேயர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வெண்ணி நாயகேசர். தேவியார்-அழகிய நாயகி. தீர்த்தம்-அழகு சிவகங்கை.

கோயில்வெண்ணி ரயில் நிலையம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

103. திருப்பூவனூர்

பல ரிஷிகளும் தேவர்களும் புட்பவனம் வைத்துப் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - புட்பவனேச்சுரர், தேவியார்-கற்பக வல்லியம்மை தீர்த்தம்-கற்பக தீர்த்தம்.

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே 2 மைல் (சுமார் 3 கி மீ.)

104. திருப்பாதாளேச்சுரம் (பாமணி)

நாகர் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-சர்ப்பபுரேசர். தேவியார் - அமிர்தநாயகியம்மை-தீர்த்தம்-நாக தீர்த்தம்.

மன்னார்குடி ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 1½ மைல் (சுமார் 2 கி. மீ)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

105. திருக்களர்

காளமுனி பூசித்த தலம் துருவாசருக்கு நடன தரிசனம் தந்த தலம்.

சுவாமி பெயர்—களரி முலையீசர். தேவியார்-அழகேச்வரி. தீர்த்தம். துருவாச தீர்த்தம்.

மன்னார்குடியிலிருந்து தெற்கே 9 மைல் (சுமார் 14 கி. மீ.)

106. திருச்சிற்றேமம் (சிற்றாம்பூர்)

விபுதனென்னு மடியவர்க்கு நாடோறும் படியிற் பொற்காசு கொடுத்தருளிய தலம்.

சுவாமி பெயர்-பொன் வைத்த நாதர். தேவியார்-அகிலாண்டேச்வரி. தீர்த்தம் - அகிலாண்ட தீர்த்தம், அழகேஸ்வரி தீர்த்தம்.

தன் மனைவியிடம் ஐயம் கொண்டு யாத்திரை சென்ற வணிகன் பொருட்டு அவனது ஐயத்தைத் தீர்க்க நந்தியைக் கோயிலுக்குப் பின்னும் ஆத்தி விருக்ஷத்தை முன்னும் அவர் பிரார்த்தனைப்படி வருவித்த தலம்.

ஞானசம்பந்தர் பதிக முடையது.

107. திருவுசாத்தானம் (கோயிலூர்)

இராம லக்ஷ்மணர், அனுமான் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-மந்திரபுரேசர். தேவியார் - பெரியநாயகி. தீர்த்தம்-சுக்கிரீவ தீர்த்தம்.

முத்துப்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 2 மைல். (சுமார் 3½ கி. மீ.)

Koviloor Digital Library

108. திரு இடும்பாவனம்

இடும்பனென்னு மகான் பூசித்து வலி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-சற்குணநாதர். தேவியார்-மங்களநாயகி. தீர்த்தம்-சுமுக புட்கரணி.

தில்லை விளாகம் ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 4 மைல். (சுமார் 7 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது.

109. திருக்கடிக்குளம்

விநாயகர் பூசித்து மாம்பழம் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-கற்பகேசுரர். தேவியார்-சௌந்தரநாயகி. தீர்த்தம்-விநாயகர் கண்ட தீர்த்தம்.

திருத்தருப்பூண்டிக்குத் தென்கிழக்கே 11 மைல் (சுமார் 19 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

110. திருத்தண்டலை நீணெறி (தண்டலைச்சேரி)

கூர்மாவதாரங் கொண்ட விஷ்ணுவின் முதுகோட்டைப் பெயர்த்த தலம்.

சுவாமி பெயர் - நீணெறி நாதேசுரர். தேவியார்-ஞான நாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

திருத்தருப்பூண்டிக்கு வடக்கே 3 மைல் (சுமார் 5 கி.மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

111. திருக்கோட்டூர்

குச்சா ருஷி பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கொழுந்தேசுரர். தேவியார்-மதுரவசனி யம்மை. தீர்த்தம்-அமிர்த தீர்த்தம்.

ராஜமன்னார் கோயிலுக்குத் தெற்கே 10 மைல். (சுமார் 17 கி. மீ.)

திருத்தருப்பூண்டி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 8 மைல் (சுமார் 13 கி. மீ.)

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் பதிகமுடையது. புராணமிருக்கிறது.

112. திருவெண்டுறை

வித்யாதரர் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - வெண்டுறை நாதேச்சுரர். தேவியார்-வேனெடுங் கண்ணியம்மை-தீர்த்தம்-தரள தீர்த்தம்.

ராஜமன்னார் கோயிலுக்கு கிழக்கே 13 மைல் (சுமார் 21$\frac{3}{4}$ கி மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

113. திருக்கொள்ளம்பூதூர் (திருக்களம்பூர்)

சாண்டில்ய ருஷி பூசித்த தலம். திருஞான சம்பந்தர் ஆற்று வெள்ளத்தை ஓரிடத்தில் கடந்து சென்று தரிசித்த தலம்.

சுவாமி பெயர் - வில்வவனநாதர். தேவியார்-சௌந்தர வதி. தீர்த்தம்-குடமுருட்டி நதி.

கொரடாச்சேரி ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 6 மைல் (சுமார் 9$\frac{1}{2}$ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

114. திருப்பேரெயில் (ஓகைப்பேரையூர்)

வருணன் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-சகலபுவனேசுவரர். தேவியார்-மேகலாம்பாள். தீர்த்தம்-வருண தீர்த்தம்.

குழிக்கரை ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

115. திருக்கொள்ளிக்காடு

சுதீக்ஷண ருஷியும், வீரபத்திரரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்—அக்நீசுவரர். தேவியார்-பஞ்சினு மெல்லடியம்மை. தீர்த்தம்-அக்னி தீர்த்தம்.

ஆலத்தம்பாடி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 3 மைல் (சுமார் 5 கி. மீ.)

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் பதிக முடையது.

116. திருத்தெங்கூர்

அரிகரபுத்திரர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-வெள்ளிமலைநாதர், தேவியார் - பெரிய நாயகி, தீர்த்தம்-கருணாகர தீர்த்தம்.

திருநெல்லிக் காவலுக்கு மேற்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது.

117. திருநெல்லிக்கா

தாருகாவனத்து ருஷிகள் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-நெல்லிவன நாதர். தேவியார் மங்கள நாயகி. தீர்த்தம்-அற்புத தீர்த்தம்.

ரயில் நிலையம்-திருநெல்லிக்காவல்.

ஞானசம்பந்தர் பதிக முடையது.

118. திருநாட்டியத்தான்குடி

நிபகண்ட ருஷியும், யானை முதலியவும் பூசித்துப் பேற டைந்த தலம். கோட்புலி நாயனார் முத்தி பெற்ற தலம்.

சுவாமி பெயர்-கரிநாதேச்சுரர் - தேவியார்-மலர்மங்கை யம்மை. தீர்த்தம்-மகா தீர்த்தம்.

திருநாட்டியத்தான்குடி ரயில் நிலையம்.

சுந்தரர் பதிக முடையது.

119. திருக்காணாயில் (திருக்காறவாசல்)

இந்திரன் முசுகுந்தன் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கண்ணாயிர நாதர். தேவியார்-கைலாய நாயகியம்மை. தீர்த்தம்-இந்திர தீர்த்தம்.

இது சப்த விடங்கத் தலத்து ளொன்று

திருவாரூருக்குத் தெற்கே 4 மைல் (சுமார் 7 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது.

120. திருக்கன்றாப்பூர்

ஒரு மாதின் பொருட்டு இறைவன் கன்றுகட்டும் தறியி லிருந்து தரிசனந் தந்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-நடுதறியப்பர். தேவியார்-மாது நாயகி யம்மை-தீர்த்தம்-பிரசுன்ன தீர்த்தம்.

நாட்டியத்தான்குடி ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 5 மைல் (சுமார் 9 கி. மீ.)

121. திருவலிவலம்

கரிக்குருவி பூசித்த தலம்.

சுவாமி பெயர்-மனத்துணை நாதர். தேவியார்-வாளன்ன கண்ணியம்மை. தீர்த்தம்-காரணகங்கை.

திருவாரூருக்குத் தென்கிழக்கே 5 மைல் (சுமார் 9 கி. மீ.) திருநாட்டியத்தான்குடி ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 7 மைல் (சுமார் 11 கி. மீ.)

மூவர் பதிகங்களையுடையது.

122 திருக்கைச் சின்னம்

திரணபிந்து ருஷி பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கைச்சினநாதேச்சுரர். தேவியார் - வெள் வளையம்மை.

திருநெல்லிக்கா ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 2 மைல் (சுமார் 3 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

123. திருக்கோளிலி (திருக்குவளை)

முசுகுந்த சக்கரவர்த்தி பூசித்த தலம். சுந்தரமூர்த்தி நாயனார்க்கு நெல்லருளிய தலம்.

சுவாமி பெயர் - கோளிலி நாதர். தேவியார் வண்டமர் பூங்குழலம்மை. தீர்த்தம்-திருக்குவளைத் தீர்த்தம்.

இது சப்த விடங்கத்தலத்து ளொன்று. பிரமா நடனம்.

திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 7 மைல் (சுமார் 11 கி. மீ.)

மூவர் பதிகங்களையுடையது.

124. திருவாய்மூர்

முசுகுந்த சக்கரவர்த்தி முதலியோர் பூசித்த தலம். இது சப்தவிடங்கத்துள் ஒன்று. கமல நடனம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-வாய்மூர்நாதர். தேவியார் - பாலினுநன் மொழியம்மை. தீர்த்தம்-சண்டமாருத தீர்த்தம்.

திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 10 மைல் (சுமார் 17 கி. மீ.)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்களை யுடையது.

125. திருமறைக்காடு (வேதாரண்யம்)

வேதங்களும் முசுகுந்த சக்கரவர்த்தியும் பூசித்த தலம். சமயாசாரியர்களாகிய சம்பந்தர் அப்பர்களால் வேதம் பூசித்தடைந்த கதவைத் திறப்பித்துத் தரிசனம் செய்த தலம். சப்த விடங்கத்தலத்துள் ஒன்று.

சுவாமி பெயர் - மறைக்காட்டீசர். தேவியார் - யாழைப் பழித்த மொழியம்மை. தீர்த்தம்-வேத தீர்த்தம். அகோர தேவர் பாடிய வேதாரணிய புராணமும், பரஞ்சோதி முனிவர் பாடிய திருமறைக்காட்டுப் புராணமும் உடையது. மறைசையந்தாதி யென்று ஒன்றுண்டு.

ரயில் நிலையம் வேதாரணியம்.

மூவர் பதிகங்களை யுடையது.

126. திருஅகத்தியான்பள்ளி

அகத்தியர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-அகத்தீசுவரர். தேவியார்-மங்கை நாயகி. தீர்த்தம்-அகஸ்திய தீர்த்தம்.

இதே பெயரில் ரயில் நிலையம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

127. திருக்கோடிகுழகர் (குழகர் கோயில்)

வாயுதேவன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-அமிர்த கடேசுவரர். தேவியார்-மையார் தடங்கண்ணியம்மை. தீர்த்தம்-அமிர்த தீர்த்தம்.

வேதாரண்யத்திற்குத் தெற்கே 6 மைல் (சுமார் 9 கி.மீ.)

128. திருப்பெருந்துறை

பராசர ருஷி, பிருகு ருஷி முதலியோர் பூசித்த தலம். மாணிக்கவாசகருக்குக் குருத்தின் கீழ் ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருள உபதேசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-ஆத்மநாதர். தேவியார் - உமாதேவி யம்மை. தீர்த்தம்-சிவகங்கை.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் உடையது. சுந்தரமுனிவர் பாடிய திருப்பெருந்துறைப் புராணமும் மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய திருப்பெருந் துறைப் புராணமும் உடையது.

9. பாண்டி நாடு—15

1. திருப்புத்தூர்

உமாதேவியார் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-திருப்புத்தீசுவரர். தேவியார்-சிவகாமித்தா யம்மை. தீர்த்தம்-அற்புத கங்கை.

மானாமதுரை ரயில் நிலையத்திலிறங்கிச் சிவகங்கை சென்று அங்கிருந்து 22 மைல் (சுமார் 37 கி. மீ.) சென்றால் இத்தலம் இருக்கிறது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிக முடையது.

2. திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை)

மகோதர ருஷி பூசித்த தலம்.

சுவாமி பெயர் - கொடுங்குன்றேசுரர். தேவியார்-குயில முதநாயகி. தீர்த்தம்-சிவகங்கை.

காரைக்குடியிலிருந்து வடகிழக்கே 26 மைல் (சுமார் 45 கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது.

3. திருவேடகம்

அருச்சுனனிடம் வேடராய்ச் சென்று விற்றழும்பு பெற்ற தலம். சம்பந்தர் ஆற்றகத்தே விட்ட ஏடு கரையேறிய தலம்.

சுவாமி பெயர்-ஏடகநாதர். தேவியார்-மாதேவியம்மை. தீர்த்தம்-வைகை.

சோழவந்தான் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல் (சுமார் 4¾ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது. புராண முண்டு.

Koviloor Digital Library

4. திருப்பரங்கிரி

சிபிச்சக்கரவர்த்தியின் தானத்தின் பொருட்டு இறைவன் தானம் வாங்கச் சென்ற தலம்.

தெய்வயானையைக் குமாரக் கடவுள் மணங் கொண்ட தலம்.

சுவாமி பெயர்-பரங்குன்றேசுரர். தேவியார் - ஆவுடை நாயகி. தீர்த்தம்-பிரமகூவம். சரவண தீர்த்தம்.

இது முருகக்கடவுள் படைவீடுகளில் ஒன்று.

ரயில் நிலையம்-திருப்பரங்குன்றம்.

5. திருவாலவாய்

சிவமூர்த்தி (64) திருவிளையாடல் செய்தருளிய தலம். மூர்த்தி நாயனார், குலச்சிறை நாயனார், மங்கையர்க்கரசியார், நெடுமாற நாயனார் திருத் தொண்டு செய்து முத்தி பெற்ற தலம். இதன் பெருமை பலவுள. அவற்றை ஆலாஸ்ய மகாத்மியத்துட் காண்க.

சுவாமி பெயர்-சொக்கநாதர். தேவியார்-மீனாக்ஷியம்மை. தீர்த்தம்-பொற்றாமரை.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பதிகங்கள் உடையது.

இதற்குக் கடம்பவன புராணம், பரஞ்சோதியர் பாடிய திருவிளையாடல், வேம்பத்தூரார் பாடிய திருவிளையாடல், சுந்தரபாண்டியம் என்ற புராணங்களும், மதுரை பதிற்றுப் பத்தந்தாதி, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய மதுரை மும்மணிக் கோவை, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம் முதலிய நூல்களும் உண்டு.

மதுரை ரயில் நிலையம்.

6. திருவாப்பனூர்

பாண்டியன் பொருட்டு அவன் குதிரை கட்டிய ஆப்பி யின்றும் இறைவன் தரிசனம் தந்தருளிய தலம்.

சுவாமி பெயர்-ஆப்பனூர்க் காரணர். தேவியார் - அம்பிகையம்மை. தீர்த்தம்-இடபதீர்த்தம்.

Koviloor Digital Library

மதுரைக்கு வடக்கே 1 மைல். (சுமார் 1½ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது. புராண முடையது.

7. திருப்பூவனம்

பப்புரு மகாருஷி பூசித்த தலம். பொன்னையாள் இறைவன் திருவுருக் கண்டு அழகப் பிரானோ எனப் பெற்ற தலம்.

சுவாமி பெயர்-பூவன நாதர். தேவியார்-மின்னாம்பிகை. தீர்த்தம்-வைகை.

ஞானசம்பந்தர் 2, நாவுக்கரசர் 1, சுந்தரர் 1 பதிகங்கள் உடையது. புராணமும் உலாவு முடையது.

ரயில் நிலையம்-திருப்புவனம்.

8. திருக்கானப்பேர் (காளையார் கோயில்)

கௌண்டில்ய ருஷி முதலியோர் பூசித்த தலம். சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குக் காளை யுருக் காட்டிய தலம். சூரியன் ரத்னங் கொண்டு பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கானகாளையீசுரர். தேவியார் - மகமாயியம்மை. தீர்த்தம்-இடப தீர்த்தம்.

ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்கள் உடையது.

நாட்டரசன் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து 15 மைல் (சுமார் 25 கி. மீ.)

9. திருஆடானை

வசு முனிவர், சத்த கன்னியர் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - ஆதிரத்ந நாயகர். தேவியார்-அம்பாயிரவல்லியம்மை. தீர்த்தம்-இரத்ந தீர்த்தம்.

பிருகு முனிவர் துருவாசரை மரியாதை செய்யாமையாலடைந்த ஆட்டுத் தலையும் ஆனையுடலும் பெற்ற சாபம் நிவாரணமான தலம்.

காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்து 38 மைல் (சுமார் 64 கி. மீ.) மேற் கூறிய கானப்பேருக்கு கிழக்கே (சுமார் 35½ கி. மீ.)

ஞானசம்பந்தர் பதிக முடையது.

Koviloor Digital Library

10. திருப்புனவாயில்

சதுர் வேதங்கள் பூசித்த தலம்.

சுவாமி பெயர் - திருப்புனவாயிலீசர். தேவியார் - பரங் கருணை நாயகி. தீர்த்தம்-கங்கா தீர்த்தம்.

ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்கள் உடையது.

திரு ஆடானையிலிருந்து வடக்கே 12 மைல் (சுமார் 20 கி. மீ.) அறந்தாங்கியிலிருந்து 28 மைல். (சுமார் 48¾ கி.மீ.)

11. திரு ராமேச்வரம்

இராமர், லக்ஷ்மணர், அனுமான், அகஸ்தியர் முதலியோர் பூசித்துப் பிரமகத்தி முதலிய பாவங்கள் நீங்கப்பெற்ற தலம்.

குணாநிதி பாண்டியன் மகளாகிய இலக்குமி தேவியை மாதவன் கனவாக மணந்து சேது மாதவராக அமர்ந்த தலம்.

ஞானசம்பந்தர் 2, நாவுக்கரசர் 1 பதிகங்கள் உடையது.

நிரம்பவழகிய தேசிகர் பாடிய சேது புராண முடையது. பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய தேவையுலா உடையது.

ரயில் நிலையம்-ராமேஸ்வரம்.

12. திருச்சுழியல்

உமையும் சதானந்தரும் பூசித்த தலம்.

சுவாமி பெயர்-திருமேனி நாதர். தேவியார் - துணை மாலையம்மை. தீர்த்தம்-நற்றுணை தீர்த்தம்.

சுந்தரர் பதிகமுடையது. புராண முடையது. திருச் சுழியல் வெண்பா அந்தாதியுடையது.

விருதுநகர் ரயில் நிலையத்திலிருந்து வட கிழக்கே 19 மைல் (சுமார் 31½ கி. மீ.)

திருப்பூவனத்திலிருந்து தெற்கே 12 கடிகையில்.

13. திரு உத்தரகோசமங்கை

சாண்டில்ய ருஷி, கங்கை முதலியோர் பூசித்த தலம், மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவபெருமான் தரிசனம் கொடுத்தருளிய தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-உத்தர கோசமங்கைநாதர். தேவியார்-உத்தரகோசமங்கையம்மை, தீர்த்தம்-சிவகங்கை. புராண முடையது.

14. திருநெல்வேலி

பஞ்ச காலத்து ஓர் அடியார் நிவேதனத்துக்கு உலர்த்திய நெல்லை வெள்ளங் கொண்டு செல்லாமல் வேலி செய்த தலம். பல அற்புதங்கள் நடந்தேறிய தலம்.

சுவாமி பெயர்-நெல்லையப்பர். தேவியார் - காந்திமதி யம்மை. தீர்த்தம்-தாம்பிரவர்ணி தீர்த்தம்.

ஞானசம்பந்தர் பதிக முடையது. புராண முடையது. நெல்லையந்தாதி, நெல்லைச் சிலேடை வெண்பா முதலியன உண்டு.

15. திருக்குற்றாலம்

புஷ்பகந்தர், கவுற்சனர் முதலியோர் பூசித்த தலம். அகஸ்தியர் இத்தலத்துக்கு வருகையில் இத்தலம் வைணவத் தலமாயிருந்தது உணராது உட்சென்று வைணவரால் தடையுண்டு வைணவ வுருத் தாங்கிச் சென்று பெருமாளைச் சிவ மூர்த்தியாக்கிய தலம்.

சுவாமி பெயர்-குற்றாலநாதர். தேவியார் - குழல்வாய் மொழியம்மை. தீர்த்தம்-சித்ரா நதி முதலிய பல தீர்த்தங்கள்.

ஞானசம்பந்தர் பதிக முடையது. புராண முடையது.

தென்காசி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 3¼ மைல் (சுமார் 5¾ கி. மீ.)

கொங்கு நாடு (7)

1. திருவெஞ்சமாகூடல்

வெஞ்சன் என்னும் அசுரன் பூசித்த தலம். இந்திரன் பூசித்த தலம்.

சுவாமி பெயர்—விகிர்தேசுரர். தேவியார்-விகிர்தவல்லி. தீர்த்தம்-வேகநதி.

Koviloor Digital Library

சுந்தரர் பாடிய பதிக முடையது.

கருவூருக்கு 12 மைல் (சுமார் 20 கி. மீ.)

2. திருக்கருவூர்த்திருவாநிலை

பிரமன் நித்திரை செய்த காலையில் காமதேனு சிருட்டிக்கவரம் பெற்ற தலம். கருவூர்த் தேவர் பல அற்புதங்கள் நடத்தி முத்தி பெற்ற தலம். எறிபத்த நாயனார், புகழ்ச் சோழ நாயனார் முதலியோர் முத்தி யடைந்த தலம்.

ஞானசம்பந்தர் பதிக முடையது.

கருவூர்-ரயில் நிலையம்.

3. திருப்பாண்டிக்கொடுமுடி

இது திருக்கயிலையின் ரோடு முடிகளிலொன்று. பிரம விஷ்ணு பூசித்த தலம்.

சுவாமி பெயர்-கொடுமுடிநாதர். தேவியார்-பண்மொழி யம்மை. தீர்த்தம்-நொய்யல் நதி.

ஞானசம்பந்தர் 1, நாவுக்கரசர் 1, சுந்தரர் பதிகங்களை யுடையது.

ரயில் நிலையம்-கொடுமுடி.

4. திருச்செங்குன்றூர்

உமையம்மை பூசித்து அர்த்த பாகம் பெற்ற தலம். சிங்க வன்மன் புலியுரு நீங்கப்பெற்ற தலம். திருஞானசம்பந்தருடன் தொடர்ந்த சிவனடியாரை வருத்திய சுரத்தினைப் போக்கி யருளிய தலம்.

சுவாமி பெயர்-அர்த்தநாரீஸ்வரர். தேவியார்-பாகம்பிரி யாளம்மை. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

குன்று தோறாடல்களில் ஒன்று.

திருநணாவிற்கு 10 கடிகையிலிருக்கிறது.

5. திருநணா

பராசரர் முதலிய அநேக ருஷிகளும் தேவரும் பூசித்த தலம்.

Koviloor Digital Library

சுவாமி பெயர்-சங்கமேசுரர். தேவியார்-வேதாம்பிகை. தீர்த்தம்-காவிரி, பவானி, அமிர்த சரசு முதலிய தீர்த்த சங்கமமாகிய திருவேணி சங்கமம்.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து வடக்கே $8\frac{3}{4}$ மைல் (சுமார் $13\frac{3}{4}$ கி. மீ.)

6. திருமுருகன்பூண்டி

முருகக் கடவுள் பூசித்த தலம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் பெற்ற பொருளைப் பறிப்பித்த தலம்.

சுவாமி பெயர் - முருகநாதர். தேவியார்-முயங்கு பூண் முலையம்மை. தீர்த்தம்-முருக தீர்த்தம்.

சுந்தரர் பதிக முடையது.

ஈரோடு மார்க்கம் திருப்பூரிலிருந்து வடக்கே அவினாசி வழி 5 மைலில் (சுமார் 8 கி. மீ.) இருக்கிறது.

7. திருப்புக்கொளியூர் (அவினாசி)

பிராட்டியார், பிரமன் முதலியோர் பூசித்த தலம். ஒரு கற்பத்தில் பிரம விஷ்ணுக்கள் இறைவனிடத்து ஒடுங்கிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலையுண்ட பிள்ளையை வருவித்த தலம். இதற்குத் தக்ஷிண காசி எனவும் பெயர்.

சுவாமி பெயர் - அவினாசியீச்சுரர். தேவியார் - பெருங் கருணையம்மை.

சுந்தரர் பதிகமுடையது.

திருப்பூருக்கு அடுத்த ரயில் நிலையம் மங்கலத்திலிறங்கினால் 5 மைல் (சுமார் 8 கி. மீ.)

மலை நாடு-2

1. திருவஞ்சைக்களம்

பரசுராமன் தாயைக் கொன்ற பழி நீங்கப் பூசித்த தலம். சேரமான் பெருமாணாயனார் திருப்பணி செய்த தலம். சுந்தர

Koviloor Digital Library

மூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாணாயனாரும் கயிலையை அடைந்த தலம்.

சுவாமி பெயர்-அஞ்சைக்களத்தீசர். தேவியார் - உமையம்மை. தீர்த்தம்-அலைவாய்த் தீர்த்தம்.

சென்னையிலிருந்து 360 மைலிலுள்ள (சுமார் 560 கி.மீ) சோரனூர் ரயில் நிலையத்திலிருந்து 35 மைல் (சுமார் 56 கி. மீ.) சென்று இருஞாலக்கடை ஸ்டேஷனை யடைந்து மேற்கே 4 மைல் (சுமார் 6½ கி. மீ.) சென்றால் இத்தலம்.

2. சுசீந்திரம்

சுவாமி பெயர் - தாணுமாலயன். தேவியார் - உமாதேவியார். தீர்த்தம்-நெய்யாறு. திரிமூர்த்திகளும் எழுந்தருளியிருக்கும் தலம். கன்னியாகுமரியில் உள்ள சக்தியை மணக்கச்சென்ற சிவபிரான் குறிப்பிட்ட திருமண நேரம் கடந்ததால் இங்கேயே தங்கிவிட்ட தலம். இங்குள்ள ஆஞ்சனேயர் சிலை மிகப் பெரியது.

3. கன்னியாகுமரி

தேவியார்-குமரியம்மை. சக்தி க்ஷேத்திரம். பரசுராமர் பூசித்த தலம்.

Koviloor Digital Library

ஈழ நாடு-2

1. திருக்கோணமலை

சுவாமி பெயர்-கோணேச்சுரர். தேவியார் - மாதுமையம்மை. திருக்கயிலாயக் கொடுமுடிகளில் ஒன்று.

ஞானசம்பந்தர் பதிகமுடையது.

இலங்கை ரயில்வேயில் திருக்கணாமலை ஸ்டேஷன்.

2. திருக்கேதிச்வரம்

சுவாமி பெயர்-கேதிச்வரர். தேவியார் - கௌரியம்பிகை. தீர்த்தம்-கௌரி தீர்த்தம்.

ஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்ளை யுடையது.

இலங்கை ரயில்வேயில் திருக்கேதீஸ்வரம் ஸ்டேஷன்.

சிவாலயங்கள் பற்றி விரிவாக அறிய விரும்புவோர் புலவர் சி. முத்துப்பிள்ளை எழுதிய 'சிறப்புமிக்க சிவாலயங்கள்' என்ற நூலினை வாங்கிப் படிக்கவும்.

Koviloor Digital Library

தேவாரப் பாடல் பெற்ற தலங்கள்

1. அகத்தீச்சுரம் 2. அக்கீச்சுரம் 3. அங்கணம் 4. அசோகந்தி 5. அண்ணல்வாயில் 6. அத்தமயனமலை 7. அயனீச்சுரம் 8. அரணநல்லூர் 9. அரிச்சந்திரம் 10. அளப்பூர் 11. அறப்பள்ளி 12. ஆழியூர் 13. ஆடகேச்சுரம் 14. ஆமாலூர் 15. ஆறை 16. ஆறைமேற்றளி 17. இடவை 18. இடைக்குளம் 19. இடைத்தானம் 20. இடைப்பள்ளி 21. இராப்பட்டீச்சுரம் 22. இரையான்சேரி 23. இறைக்காடு 24. இறைவனூர் 25. ஈசனூர் 26. உஞ்சேனை மாகாளம் 27. உதயமலை 28. உன்ளீர் 29. உருத்திர கோடி 30. ஊற்றத்தூர் 31. எங்களூர் 32. எச்சிளமர் 33. எமகாடமலை 34. ஏமநல்லூர் 35. ஏமப்பேகுர் 36. ஏயீச்சுரம் 37. ஏழூர் 38. ஏறனூர் 39. ஐகண்ணை 40. கச்சிப்பலதளி 41. கச்சிமயானம் 42. கச்சையூர் 43. கஞ்சாறு 44. கடங்களூர் 45. கடையக்குடி 46. கந்தமாதனமலை. 47. கரபுரம் 48. கருங்கற்குரல் 49. கருந்திட்டைக்குடி 50. கருப்பூர் 51. கருமாரி 52. களப்பாழ் 53. கறையூர் 54. காட்டூர் 55. காம்பீலி 56. காளிங்கம் 57. காலம் 58. காறை 59. காற்றூர் 60. கிள்ளிகுடி 61. கிழையம் 62. கீழையில் 63. கிழைவழி 64. குக்குடேச்சுரம் 65. குத்தங்குடி 66. குரக்குத்தளி 67. குருக்கேத்திரம் 68. குருந்தங்குடி 69. குறையூர் 70. குன்றியூர் 71. கூந்தலூர் 72. கூரூர் 73. கூறனூர் 74. கொங்கணம் 75. கொங்கு 76. கொண்டல் 77. கொடுங்கோவலூர் 78. கொடுங்கோளூர் 79. கொடுமுடி 80. கொல்லி அறைப்பள்ளி 81. கொல்லிமலை 82. கொழுநல் 83. கோட்டுக்கா 84. கோட்க்காடு 85. கோத்திட்டை 86. கோவந்தபுத்தூர் 87. ஞாழற் கோயில் 88. ஞாழல் வாயில் 89 சடைமுடி 90. சாலைக்குடி 91. சித்தவடம் 92. சிவப்பள்ளி 93. சிறப்பள்ளி 94. சீக்காலி 95. சூரியல் 96. சூலமங்கை

Koviloor Digital Library

97. செங்குன்றூர் 98. செப்பங்குடி 99. சேற்றூர் 100. சோமேசம் 101. சையமலை 102. தகட்டூர் 103. தக்களூர் 104 தங்களூர் 105. தஞ்சைத்தளிக்குலம் 106. தஞ்சை யெழுமூர் 107. தஞ்சரக்கைகை 108. தஞ்சை 109. தண்டலங்குறை 110. தண்டந்தோட்டம் 111. தண்டலையாலங்காடு 112. தவத்துறை 113. தனிச்சாத்தங்குடி 114. தாழையூர் 115. திங்கலூர் 116. திண்டீச்சுரம் 117. திரிபுராந்தகம் 118. திருக்குளம் 119. திருமலை 120. திருவண்குடி 121. திருவாதிரையான் பட்டினம் 122. திருவேட்டி 123. தடையூர் 124. துவையூர் 125. தென்களக்குடி 126. தென்கோடி 127. தென்னூர் 128. தென்ளாறு 129. தேசனூர் 130. தேரூர் 131. தேவனூர். 132. தேவன்குடி 133. தேவிச்சுரம் 134. தேறனூர் 135. தேனூர் 136. தொழூர் 137. நங்களூர் 138. நந்திகேச்சுரம் 139. நம்பனூர் 140. நல்லக்குடி 141. நல்லாளை 142. நல்லாற்றூர் 143. நர்லேமம் 144 நற்குன்றம் 145. நாகளேச்சுரம் 146. நாங்கூர் 147 நாசனூர் 148. நாட்டுத்தஞ்சை 149. நாலனூர் 150. நாலாறு 251. நாலூர் 152. நாற்றானம் 153. நியநல்லூர் 154. நிறையனூர் 155. நீலமலை 156. நெடுவாயில் 157. நெய்தல்வாயில் 158. நெற்குன்றம் 159. பஞ்சரக்கைகை 160. பந்தையூர் 161. படம்பக்கம் 162. பட்டி 163. பருத்தியமம் 164. பழையயாறு 165. பனங்காடு 166. பனங்காட்டூர் 167. பாஞ்சலூர் 168. பாசனூர் 169. பாட்டூர் 170. பாப்பள்ளி 171. பாம்பில் 172. பாவநாசம் 173. பாற்குளம் 174. பிடவூர் 175. பிறையனூர் 176. புதுக்குடி 177. புரிசை 178. புலிவளம் 179. புற்குடி 180 பூந்துறை 181. பூமியூர் 182. பெருந்துறை 183. பெருமூர் 184. பேராவூர் 185. பேரூர் 186. பேறனூர் 187. பொதியின்மலை 188. பொய்கை 189. பொய்கைநல்லூர் 190. பொருப்பள்ளி 191. பொன்னூர் 192. போற்றூர் 193. மகாநதி 194. மகாமேருமலை 195. மகேந்திரமலை 196. மணற்கால் 197. மணிமுத்தம்

Koviloor Digital Library

198. மத்தங்குடி 199. மந்தாரம் 200. மயிண்டீச்சுரம் 201. மறையனூர் 202. மாகாளேச்சுரம் 203. மாகுடி 204. மாகாளம் 205. மாகோணம் 206. மாணிக்கோயில் 207. மாணிகுடி 208. மாதானம் 209. மாநிரும் 210. மாட்டூர் 211. மாவூர் 212. மாற்றூர் 213. மிறைக்காடு 214. முதல்வனூர் 215. முந்தையூர் 216. முறையூர் 217. மூதூர் 218. மூலனூர் 219. மூவலூர் 220. வடப்பேறூர் 221. வடமாகறல் 222. வதப்பள்ளி 223. வரந்தை 224. வள்ளி 225. வளைக்குளம் 226. வழுவூர் 227. வாதவூர் 228. வாரணாசி 229. விடங்களூர் 230. விடைவாய்க்குடி 231. விந்தமாமலை 232. விராடபுரம் 233. விளத்தூர் 234. விளத்தொட்டி 235. விவீச்சுரம் 236. வெகுளீச்சுரம் 237. வெள்ளாறு 238. வெற்றியூர் 239. வேங்கடர் 240. வேதீச்சுரம் 241. வேலனூர் 242. வேனூர்

திருவாசகம் பெற்ற சிவத்தலங்கள்

திருப்பெருந்துறை, திருஉத்தரகோசமங்கை

திருவாசக வைப்புத் தலங்கள்

கல்லாடம், பஞ்சப்பள்ளி நந்தம்பாடி, வேலம்புத்தூர், தர்ப்பணம், சாந்தப்புத்தூர், மொக்கனி, பூவலம், பட்டமங்கை, ஓரியூர், பாண்டூர், மந்திரமாமலை.

திருவிசைப்பா பெற்ற தலங்கள்

திருவிடைக்கழி, திருக்களந்தையாதிதேச்சுரம், திருக்கிழ்க் கேட்டூர், மணியம்பலம், திருமுகத்தில், திரைலோக்ய சுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சுரம், திருக்காட்டியக்குடி, தஞ்சையிராசராசேச்சுரம்.